கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்

VLAMBARAM™

416-282-8059 416-282-4978

E-mail: vlambaram@sympatico.ca

www.vlambaram.com

www.tamilvanakkam.com











நதி 25 | பாலம் 19 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | OCTOBER 01, 2015


# கனேடிய பொதுத்தேர்தலில் தமிழ் வேட்பாளர்கள்

கனடாவின் 42ஆவது நாடாளுமன்றத்தை தெரிவு செய்வதற்காக 2015 ஒக்ரோபர் 19இல் நடைபெற உள்ள பொதுத் தேர்தலில் வேட்புமனுத் தாக்கல் செய்யும் இறுதிநாள் 2015 செப்ரெம்பர் 18 அன்று முடிவடைந்து விட்டது.



பழமைவாதக்கட்சி, புதிய ஜனநாயகக் கட்சி, மற்றும் லிபரல் கட்சி ஆகிய மூன்றும் நாடுபூராகவும் உள்ள 338 தொகுதிகளிலும் வேட்பாளர்களை நியமித்துள்ளன. பசுமைவாதக்கட்சி 323 தொகுதிகளுக்கு மட்டுமே வேட்பாளர் களை நியமித்துள்ளது. சுயேட்சையாக போட்டியிட 60 வேட்பாளர்கள் பதிவு செய்துள்ளனர். எல்லாமாக நாட்டில் உள்ள 338 தொகுதிகளிலும் சேர்த்து 1,789 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவற்றில் குறைந்தது 170 ஆசனங்களை பெறும் கட்சி பெரும்பான்மை ஆட்சியை அமைக்கும்.

ஊடகங்களின் தேர்தல்பற்றிய கணிப்புக்கள் தினமும் வந்து கொண்டே இருக்கின்றன. கனடாவில் ஆட்சி அமைக்ககூடிய சாத்தியக்கூறுகள் உள்ள கட்சிகளான பழமைவாதக்கட்சி, புதிய ஜனநாயகக் கட்சி மற்றும் லிபரல் கட்சி மூன்றும் கிட்டத்தட்ட சமமான நிலையில் வாக்காளரிடையே செல்வாக்குப்பெற்று இருப்பதாகவே பெரும்பாலான கணிப்புகள் கூறுகின்றன. மூன்று கட்சிகளும் கிட்டத்தட்ட தலா 30% மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளன. தேர்தலுக்கு இன்னமும் 19 நாட்கள் உள்ள நிலையில் மூன்று கட்சிகளும் எவ்வாறாதல் வாக்காளர்களை தமது பக்கம் திருப்பி தாம் பெரும்பான்மை ஆசனங்களைப் பெறலாம் என்ற யோசனையில் தினமும் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் எவ்வாறு எல்லாம் செலவு செய்வோம் என யதார்த்தமற்ற வாக்குறுதிகளை வெளியிட்ட வண்ணம் உள்ளனர். இவை ஊடகங்களுக்கு கேலிச் சித்திரம் வரைவதற்கு உதவியாக உள்ளன.

எமக்கு கிடைத்த தகவல்களின்படி மேற்கூறிய நான்கு கட்சிகளும் ரொறொன்ரோ பெரும்பாகத்தில் மொத்தமாக ஆறு தமிழ் வேட்பாளர்களை நிறுத்தி உள்ளன. இதுவரைகாலமும் நடைபெற்ற கனேடிய பொதுத்தேர்தலில் பல தமிழர் போட்டி யிட்டிருந்தாலும் ராதிகா சிற்சபைஈசன் மட்டுமே நாடாளு மன்ற உறுப்பினராக புதிய ஜனநாயகக் கட்சியில் இருந்து தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

## லிபரல் கட்சி

லிபரல் கட்சியின் சார்பில் இம்முறை தேர்தலில் போட்டியிடும் தமிழர் ஹரி ஆனந்தசங்கரி ஆவார். இவர் ஸ்காபரோ றூஜ் பார்க் தொகுதியில் போட்டியிடுகி றார். ஹரி ஆனந்தசங்கரி மனித உரிமைச் சட்ட வல்லுனராகவும் மனித உரிமை செயற்பாட்டாளராகவும் இருக்கி றார். கார்ள்ரன் பல்கலைக்கழகத்தில் அரசியல் இளமானி பட்டம்பெற்ற இவர் Osgoode Hall சட்டக்கல்லூரியில் சட்ட இளமானிப் பட்டம் பெற்றவர். இவர் ஸ்காபரோவில் தனது சட்ட நிறுவனத்தை நிறுவி அதன் மூலம் சேவை செய்து வருகிறார். ஹரி, McGill பல்கலைக் கழகத்தில் முதுமானிப்பட்டம் பெற்றவர். ஹரிணியைத் திருமணம் செய்துள்ள இவருக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள்.

**ஹரி** போட்டியிடும் ஸ்காபரோ றூஜ்பார்க் தொகுதியானது வடக்கு எல்லையாக Steeles Avenue East யையும் தெற்கு எல்லையாக Lake Ontario வையும் கொண்டுள்ளது. கிழக்கு எல்லையாக Pickering நகரசபை எல்லையை கொண்டுள்ளது. மேற்கு எல்லையாக 401 பெருந்தெருவுக்கு வடக்கில் Neilson Road ஐயும் 401 பெருந் தெருவுக்கு தெற்கில் Moringside Avenue வையும் கொண்டுள்ளது. 57 சதுர கிலோமீற்றர் பரப்பளவை உடைய இத்தொகுதி 71 ஆயிரம் வாக்காளர் களைக் கொண்டது.

இத்தொகுதியில் இவருடன் மற்றும் மூன்று வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். பழமைவாதக் கட்சியின் சார்பில் Leslyn Lewis உம் புதிய ஜனநாயகக்கட்சியின் சார்பில் கந்தரட்ணம் சாந்திக்குமாரும் பசுமைவாதக்கட்சியின் சார்பில் Calvin Winter உம் போட்டியிடுகின்றனர்.

## புதிய ஜனநாயகக்கட்சி

புதிய ஜனநாயகக்கட்சியின் சார்பில் இம்முறை மூன்று தமிழர் தேர்தலில் போட்டியிடுகின்றனர். அவர்கள் ராதிகா சிற்சபைஈசன் ஸ்காபரோ வடக்கு தொகுதி யிலும், செந்தி செல்லையா மார்க்கம் தோண்கில் தொகுதியிலும் மற்றும் கந்தரட்ணம் சாந்திக்குமார் ஸ்காபரோ றூஜ் பார்க் தொகுதியிலும் போட்டியிடுகின்றனர்.


தொடர்ச்சி 04ஆம் பக்கம்






















HOMES *COMMERCIAL*INVESTMENTS
Taunton/Harmony
Detached home 599k
Tobram/Sandlewood
650k
4 Bm 5 Wsrm sep entrance fin bmt
STOUFFVILLE
4 bm 3 wsrm 753K
STOUFFVILLE
4 bm 3 wsrm 768k h.wood
16 Th ave/9Th line
HARDWOOD flr
3 BM 3 WSRM Basement Finished
Steeles/Stain
HARDWOOD flr
4 bm 4 wsrm sep entrance Fin. bsmnt
North west Toronto
90 Acres
Farm house, barn bee honey farm
East Scarborough
3 bm 2 wsrm sep entrance fin bsmnt
Hwy2/brock st
3 bm 34wsrm 389k
Brimly /Lawrence
439k
3bm Bungalow home h.wood 439K
scarborough
Store plus apt
Live & Business End unit in plaza
14 years
Pat Pushpakanthan
Real Estate Broker
COMMERCIAL & RESIDENTIAL
416-894-1187
Century 21 BROKERAGE
PAT WILL BEAT ANY DEAL*!!
Woodbine/hwy7
Cafetaria
1100/- rent all included
Hall of Famer
80 Corporate Dr. Suite 208 Toronto M1H3G5 416-290 1200




Allstate. You're in good hands.
Allstate Insurance Company Of Canada
Home & Auto Insurance
வீடு, வாகன காப்புறுதி
Suren Navaratnarajah
(Agent)
Cell: 416.520.6916
E-mail: snavaratnarajah@allstate.ca





COTTAGE FOR RENT
80 Km away from Scarborough (45 Minute)
Beautiful waterfront Cottage with a capacity of 15 people.
$299 Only
Anton Jeeva
416.575.5055




Friends MATRIMONY
திருமணத்
உங்கள் தேடலுக்கோர் முற்றுப் புள்ளி...
சனி, ஞாயிறுகளில்
12:00pm-6:00pm
இலவசமாக திருமண
பொருத்தம் பார்க்கப்படும்
5000 மேற்பட்ட பொருத்தமான வரன்கள் உங்கள் தெரிவுக்கு
மிக இலகுவாக இணையத்தில் பதிவு செய்யும் வசதி
அல்லது தொலைபேசி, தபால், email ஊடாக பதிவு செய்யலாம்
info@friendsmatrimony.com
www.friendsmatrimony.com
Choose Your Life Partnar Here
அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி 10:30a.m- 7:00p.m
Sri Lanka
Ph: 94-112-363663
No-11- 2/1, 33rd lane,
Wellawatta,
Canada
info: 647-709-1536
GTA Square
5215 Finch Ave. E. Unit 257

# செவ்வாயில் தண்ணீர் வழிந்தோடுகிறது! நாசா

செவ்வாய் கிரகத்தில் கோடை காலத்தில் தண்ணீர் திரவ நிலையில் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக நாசா அறிவித்துள்ளது. Mars Reconnaissance Orbiter மூலம் கிடைத்துள்ள தகவல்களை ஆய்வு செய்து பார்த்து இந்த முடிவுக்கு நாசா வந்துள்ளது.



முன்பு எப்படி அபரிமிதமாக அங்கு தண்ணீர் இருந்ததோ அதேபோல இப்போதும் அங்கு தண்ணீர் இருப்பதாக கூறுகிறது நாசா. செவ்வாயில் உள்ள மலைப் பகுதிகளிலும், பள்ளத்தாக்குகளிலும், தரைப்பரப்பிலும் தண்ணீர் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தத் தண்ணீர் குளிர்காலத்தில் உறைந்து போய்க் காணப்படுகிறது. வெயில் காலத்தில் திரவ நிலைக்கு மாறி ஓடுகிறது.

இதுகுறித்து தகவல்களை 2015 செப்ரெம்பர் 28 வோஷிங்டனில் வெளியிட்டுப்பேசினார் நாசாவின் அறிவியல் பிரிவின் உதவி நிர்வாகியும், விண்வெளி வீரருமான ஜோன் கிரின்ஸ்பெல்ட் (John Grunsfeld).

அவர் கூறுகையில், நீண்ட காலமாக நாம் யூகங்களின் அடிப்படையில் சந்தேகப்பட்டு வந்ததை தற்போது அறிவியல் பூர்வமாக உறுதி செய்துள்ளோம். தண்ணீர் இருக்கிறதா என்ற நீண்ட கால தேடுதலுக்கு முடிவு கண்டுள்ளோம். அங்கு தண்ணீர் உள்ளது. இது ஒரு மிக முக்கியமான முன்னேற்றம். இன்றளவும் செவ்வாயின் தரையில் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கிறது என்பது உறுதியாகியுள்ளது. இந்தத் தண்ணீரானது குளிர் காலத்தில் உறை நிலையில் உள்ளது. இவை ஹைட்ரஜன் மூலக்கூறுகளாக மாறிய நிலையில் கண்டறியப்பட்டுள்ளன. இந்த உறைநிலை தண்ணீரானது உப்புப் படிவத்துடன் காணப்படுகிறது. செவ்வாயின் பல பரப்புகளிலும் தண்ணீர் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என்றார் அவர்.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த லூஜேந்திரா ஓஜா இந்த உறை நிலைத் தண்ணீரை 2010ஆம் ஆண்டு கண்டு பிடித்திருந்தார். அவரும் செய்தியாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார். இந்த உப்பில் மெக்னீசியம் பெர்க்குளோரேட், மெக்னீசியம் குளோரேட், சோடியம் பெர்குளோரேட் ஆகிய வேதிப் பொருட்கள் இடம் பெற்றுள்ளன. பூமியிலும் கூட இயற்கையாவே இந்த பெர்குளோரேட்டுகள் பாலைவனத்தில் காணப்படுகின்றன. சில வகை பெர்குளோரேட்டுகள் ரொக்கெட்டின் புரப்பல்லன்ட் ஆக பயன்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

முன்பும் கூட பெர்குளோரேட்டுகள் செவ்வாயில் கண்டறியப்பட்டன. நாசாவின் பீனிக்ஸ் லான்டர், கியூரியாசிட்டி ஆகியவை இதைக் கண்டுபிடித்திருந்தன. வைக்கிங் விண்கலப் பயணத்தின்போதும் கூட இது கண்டறியப் பட்டது. ஆனால் தற்போதுதான் முதல் முறையாக ஹைட்ரஜன் மூலக்கூறுகளுடன் கூடிய பெர்க்குளோரேட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன.

நீர் ஆதாரம் கண்டறியப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அங்கு உயிரினங்கள் வாழக் கூடிய சாத்தியக் கூறுகள், உயிர் வாழத் தேவையான பிற அம்சங்கள் உள்ளதா என்பது குறித்த ஆய்வுகளை விஞ்ஞானிகள் ஆரம்பித்துள்ளனர்.

## லூஜேந்திரா ஓஜா - ஓர் இளம் விஞ்ஞானி

லூஜேந்திரா "லுஜா" ஒரு ஓஜா கிற்றார் கலைஞர், அறிவியலாளர், மாணவர். இவர் தான் செவ்வாய் கிரகத்தில் தண்ணீர் இருப்பதை கண்டுபிடித்தவர். 2015

தொடர்ச்சி 25ஆம் பக்கம்



# கனேடிய...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

**ராதிகா சிற்சபைஈசன்,** கடந்த தேர்தலில் ஸ்காபரோ றூஜ் ரிவர் தொகுதியில் போட்டியிட்டு 5,000 வாக்குகள் வித்தியாசத்தில் வென்று தமிழ் மக்களின் முதலாவது நாடாளுமன்ற உறுப்பினராக கனேடிய நாடாளு மன்றத்திற்கு சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் ரொறொன்ரோ பல்கலைக்கழகம் மற்றும் கார்ள்ரன் பல்கலைக்கழகத்தில் பயின்று வர்த்தக துறையில் இளமானிப்பட்டம் பெற்றவர். Queens பல்கலைக்கழகத்தில் தொழில் துறை உறவுகள் துறையில் முதுமானிப் பட்டம் பெற்றவர். 2004ஆம் ஆண்டில் இருந்து புதிய ஜனநாயகக்கட்சியுடன் தன்னை தொடர்புபடுத்திக் கொண்ட இவர் காலம் சென்ற ஜக் லேற்றனுக்கு தமிழர் விவகாரங்கள் பற்றிய ஆலோசகராகவும் இருந்துள்ளார். பெற்றோருடன் வாழும் இவருக்கு மூன்று சகோதரிகள் உள்ளனர்.

ராதிகா தற்போது போட்டியிடும் ஸ்காபரோ வடக்கு தொகுதியானது வடக்க எல்லையாக Steeles Avenue East ஐயும் தெற்கு எல்லையாக 401 பெருந்தெருவை யும் மேற்கு எல்லையாக Midland Avenue வையும் கிழக்கு எல்லையாக Neilson Road ஐயும் கொண்டுள்ளது. 32 சதுர கிலோமீற்றர் பரப்பளவுடைய இந்தத் தொகுதி 64 ஆயிரம் வாக்காளர்களை கொண்டது.

இத்தொகுதியில் இவருடன் மற்றும் மூன்று வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். பழமைவாதக் கட்சியின் Ravi Malhi உம் லிபரல் கட்சியின் சார்பில் Shaun Chen உம் பசுமைவாதக்கட்சியின் சார்பில் Elleni MacDonald உம் போட்டியிடுகின்றனர்.




**செந்தி செல்லையா,** மார்க்கம் - தோணக்கில் தொகுதியில் புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிடுகிறார். ஆதவன் பப்ளிகேசன் நிறுவனத்தின் முதல்வராகவும் நிறைவேற்று அதிகாரியாக வும் இருக்கும் செந்தி செல்லையா அவர்கள் வருடம் தோறும் தமிழன் வழிகாட்டி என்னும் வணிக கையேட்டை பிரசுரித்து வருகிறார். இவர் தெற்காசிய வர்த்தக கண்காட்சியையும் நடத்தி வந்தவர். செந்திக்கு 2014ஆம் ஆண்டிற் கான றோயல் வங்கி நிறுவனத்தின் சிறந்த முதல் 25 கனேடிய குடிவரவாளர்களில் ஒருவர் என்ற விருது கிடைத்தது. இவரது மனைவி விஜி. இவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள்.

செந்தி போட்டியிடும் மார்க்கம் - தோண்கில் தொகுதியானது வடக்கு எல்லையாக 407 பெருந்தெருவையும் தெற்கு எல்லையாக Steeles Avenue East யையும் மேற்கு எல்லையாக Bayview Avenue வையும் கிழக்கு எல்லையாக றூஜ் ஆற்றையும் கொண்டுள்ளது. 44 சதுர கிலோமீற்றர் பரப்பளவுடைய இந்தத் தொகுதி 70 ஆயிரம் வாக்காளர்களை கொண்டது.

இத்தொகுதியில் இவருடன் மற்றும் இரண்டு வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற னர். பழமைவாதக்கட்சியின் சார்பில் Jobson Easow உம் லிரபல் கட்சியின் சார்பில் John McCallum உம் போட்டியிடுகின்றனர்.

**கந்தரட்ணம் சாந்திக்குமார்,** ஸ்காபரோ றூஜ் பார்க் தொகுதியில் புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிடுகிறார். இவர் ஒரு கிறிஸ்தவ மதபோதகராக இருக்கிறார். அத்துடன் தொலைதொடர்பு பணியாளராக வும் இருக்கிறார். கனேடிய தேசிய துடுப்பாட்ட குழுவில் இருந்த சாந்திக்குமார் ஒரு சிறந்த விளையாட்டு வீரர் ஆவார். தற்போது துடுப்பாட்ட பயிற்சியாளராகவும் நடுவராகவும் இருக்கிறார். இந்தியாவில் வர்த்தகவியல் படித்துள்ள இவர் ஒரு இறையியல் இளங்கலைமானி ஆவார். இவருக்கும் இவரது மனைவி Joy இற்கும் மூன்று வயதுவந்த பிள்ளைகள் இருக்கிறார்கள்.

சாந்திக்குமாருடன் மற்றும் மூன்று வேட்பாளர்கள் போட்டியிடுகின்றார். லிரபல் கட்சியின் சார்பில் ஹரி ஆனந்தசங்கரியும் பழமைவாதக்கட்சியின் சார்பில் Leslyn Lewsi உம் பசுமைவாதக்கட்சியின் சார்பில் Calvin Winter உம் போட்டியிடுகின்றனர். இவர் போட்டியிடும் ஸ்காபரோ றூஜ் பார்க்கின் எல்லைகள் மேலே லிபரல் கட்சி வேட்பாளர் ஹரி ஆனந்தசங்கரியின் விபரத்துடன் தரப்பட்டுள்ளன.

## பழமைவாதக் கட்சி

பழமைவாதக் கட்சியின் சார்பில் இம்முறை தேர்தலில் போட்டியிடும் தமிழர் றொசான் நல்லரட்ணம் ஆவார். இவர் ஸ்காபரோ தென்மேற்கு தொகுதியில் போட்டியிடுகி றார். கணினி விஞ்ஞானத்துறையில் இளமானிப்பட்டமும் ஆங்கில இலக்கியத் தில் முதுமானிப்பட்டமும் பெற்றுள்ள இவர் ஒரு விளையாட்டு வீரருமாவார். தற்போது ரொறொன்ரோ பெரும்பாகத்தில் ஒரு பொலிஸ் அதிகாரியாக பணியாற்றுகிறார். இவரது மனைவி அபிராமி. இவர்களுக்கு இரண்டு பெண் பிள்ளைகள் உண்டு.

**றொசான்,** போட்டியிடும் ஸ்காபரோ தென்மேற்குத் தொகுதியானது வடக்கு எல்லையாக Eglinton Avenue வையும் தெற்கு எல்லையாக Lake Ontario வையும் கிழக்கு எல்லையாக Markham Road ஐயும் மேற்கு எல்லையாக Victoriapark Avenue வையும் கொண்டுள்ளது. 29 சதுர கிலோமீற்றர் பரப்பளவுடைய இத்தொகுதி 71 ஆயிரம் வாக்காளர்களை கொண்டுள்ளது.


இத்தொகுயில் இவருடன் மற்றும் மூன்று வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். லிபரல் கட்சியின் சார்பில் Bill Blairஉம் புதிய ஜனநாயகக்கட்சியின் சார்பில் Dan Harrisஉம் பசுமைக்கட்சியின் சார்பில் Tommy Taylor உம் போட்டியிடுகின்றனர்.

## பசுமைக் கட்சி

பசுமைக் கட்சியின் சார்பில் இம்முறை தேர்தலில் போட்டியிடும் தமிழர் கார்த்திகா கோபிநாத் ஆவார். இவர் பிரம்டன் மேற்குத் தொகுதியில் போட்டியிடுகிறார். குற்றவியல் நீதித்துறை யில் இளம்கலைமானிப் பட்டமும் பொதுத்துறை நிர்வாகத்தில் யோர்க் பல்கலைக்கழகத்தில் முதுமானிப்பட்டமும் பெற்றவர். கார்த்திகா சமூக அமைப்பு மற்றும் நீதிமன்றத்துறையில் அரச ஊழியராக பணியாற்றுகிறார். திருமணமான இவர் தற்போது தனது குடும்பத்துடன் பிரம்டனில் வாழ்ந்து வருகிறார்.

**கார்த்திகா,** போட்டியிடும் பிரம்டன் மேற்குத் தொகுதியானது வடக்கு எல்லையாக Mayfield Road ஐயும் தெற்கு எல்லையாக 407 பெருந்தெருவையும் மேற்கு எல்லையாக Winston Churchill Boulevard கொண்டுள்ளது. இதன் கிழக்கு எல்லையாக Hurontario Street, Main Street North மற்றும் Kennedy Road South என்பன உள்ளன. 61 சதுரகிலோமீற்றர் பரப்பளவுடைய இத்தொகுதி 69 ஆயிரம் வாக்காளர் களைக் கொண்டுள்ளது.

இத்தொகுதியில் இவருடன் மற்றும் மூன்று வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். லிபரல் கட்சியின் சார்பில் Kamal Khera உம் புதிய ஜனநாயகக்கட்சியின் சார்பில் Adaoma Patterson உம் பழமை வாதக்கட்சியின் சார்பில் Ninder Third உம் போட்டியிடுகின்றனர்.



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*

Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487

Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1W3 Office Phone : 416-391-3232

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

பவர் ஒப் சேல்
பிரச்சினையா ?

- நல்ல ரேட்ல மோட்கேஜ் செய்ய வேணும்?
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க வேணும் ?
- ரீபைனான்ஸ் செய்ய வேணும்?
- 2வது, 3வது மோட்கேஜ் எடுக்க வேணும்?



- பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் செய்ய வேணும்?
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க மாத்த வேணும்?
- வீடு வாடகைக்கு விட அல்லது எடுக்க வேணும்?
- வீடு வாங்க வேணும்/ வீடு விற்க வேணும் ?

## மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,



## "மோட்கேஜ் கிளினிக்" ✓

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for an appointment)

BEST RATE GUARANTEED

## வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00

MORTGAGE IN ANY SITUATION



எமது முகவரி

**1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)**



சுதேசன் பத்மநாதன் M.Com. B.Com
Mortgage Agent/ Real Estate Sales Representative
FSCO Lic # M 12001741
**Cell : 647-861-8240**

And,,

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
**Cell : 416-624-4843**

## For All Your Real Estate Services

# அமெரிக்கத் தீர்மானம் ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது!

இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த அமெரிக்கத் தீர்மானம் ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தில் 2015 செப்ரெம்பர் 24இல் சமர்ப்பிக்கப்பட்டது. குறித்த தீர்மானத்தில் 26 விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றில் உள்ள 12 விடயங்கள் நீக்கப்பட வேண்டுமென இலங்கை அரசாங்கம் அமெரிக்காவிடம் கேட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச விசாரணையை நடத்தப்பட வேண்டும் என பல நாடுகளும் ஆதரவாக குரல் கொடுத்து வரும் நிலையில் ரஸ்யா, சீனா, கியூபா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக உள்ளக விசாரணையே நடப்பட வேண்டும் என தெரிவித்துள்ளன.



இலங்கையின் போர்க்குற்ற விசாரணையின் கீழ் இலங்கை அரசாங்கமும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையகமும் எடுத்துக் கொண்ட உண்மையை கண்டறியும் முயற்சிகள் இந்த யோசனையில் வரவேற்கப்பட்டுள்ளன. இதில் இலங்கை அரசாங்கத்தின் நல்லிணக்க முயற்சியும் பாராட்டப்பட்டுள்ளது. அத்துடன் உண்மையை கண்டறியும் விடயத்தில் சர்வதேசத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள அரசாங்கம் இணங்கியமையும் வரவேற்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் மேற்கொண்ட மனித உரிமை வன்முறைகள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று யோசனையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் சாட்சிகளை பாதுகாக்கும் சட்டம், கையகப்படுத்தப்பட்ட பொது மக்களின் காணிகள் திருப்பி தரப்பட்டமை, பல்வேறு முக்கிய கொலை தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகள், பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை மீள்பரிசீலித்தல், முன்னர் அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை வெளியிடும் முயற்சி, இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் என்பன இந்த யோசனையில் வரவேற்பை பெற்றுள்ளன.

இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பித்த யோசனையில் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு நகல் யோசனை ஒன்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன்படி சர்வதேச சட்ட உரிமை மீறல்கள், மனித உரிமைமீறல் போன்றவற்றை விசாரணை செய்ய இலங்கையின் இறைமைக்கு உட்பட்ட பாரபட்சமற்ற இலங்கையின் நீதித் துறை பொறிமுறை உருவாக்கப்பட்டு அதில், சுயாதீன நீதி நிறுவனங்கள் இணைக்கப்பட வேண்டும். அத்துடன் பொதுநலவாய நாடுகள் அலுவலகம், சர்வதேச நீதிபதிகள், சர்வதேச பாதுகாப்பு சட்டத்தரணிகளும் பங்கேற்கவேண்டும் என்றும் யோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் குறிப்பிட்ட கலப்பு நீதிமன்ற அம்சம் இதில் தவிர்க்கப்பட்டுள்ளது. குறிப்பாக கலப்பு நீதி மன்றம் எனக் குறிப்பிடப்பட்டிருந்த சொற்பதம் விசேட சபை என மாற்றப்பட்டதுடன் அதனை விசாரிக்கும் நீதிபதிகள் பொதுநலவாய நாடுகளின் நீதிபதிகள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. கலப்பு நீதி மன்றம் என்னும் சொற்பதம் நீக்கப்பட்டமையானது மனித உரிமை ஆர்வலர்கள் மத்தியில் பலத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக ஜெனிவா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய அமெரிக்கா, முன்னாள் யுகோஸ்லேவியா குடியரசு, மெசிடோனியா, மொன்டிக்ரோ, பிரித்தானியா, வட அயர்லாந்து ஆகியவற்றின் அனுசரணையுடன் இந்த யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

“நல்லிணக்கத்தை மேம்படுத்தல்” இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பில் பொறுப்புக்கூறல்” என்ற தலைப்பின் கீழ் இந்த யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த யோசனையில், இலங்கையில் தனிப்பட்டவர்கள், மனித உரிமை காப்பாளர்கள், மதத்தலங்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் தொடர்பில் அரசாங்கம் விசாரணைகளை நடத்தவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

நீதி அமைப்பில் இலங்கையில் அனைத்து மக்கள் மத்தியிலும் நம்பிக்கையை உருவாக்கும் இலங்கை அரசாங்கத்தின் செயற்பாட்டை வரவேற்பதாகவும் யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த 30ஆவது அமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனையின் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையகம் கண்காணித்து தமது 32ஆவது அமர்வில் அது தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்கவேண்டும். இதனையடுத்து 34ஆவது அமர்வில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட வேண்டும் என்றும் திருத்த யோசனையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

2015 செப்ரெம்பர் 30 வரையில் இந்த யோசனையில் திருத்தங்களை முன்வைக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வரைவு எதிர்வரும் 30ஆம் திகதி சபையில் விவாதிக்கப்படும்போது மேலும் ஒரு சில மாற்றங்களுக்கு உள்ளாக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படும் போதிலும், இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்படாமல் வாக்கெடுப்புக்கு விடப்பட்டே நிறைவேற்றப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாக ஜெனிவாவில் உள்ள சர்வதேச மனித உரிமை ஆர்வலர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.


## மாவீரர் பெற்றோர், குடும்பத்தினர் மதிப்பளிப்பு நாள் - 2015

மாவீரர்களின் பெற்றோர்களையும் குடும்பத்தினரையும் மதிப்பளிப்புச் செய்யும் உன்னதமான நாளை முன்னிட்டு கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம், மாவீரர் தொடர்பான விபரங்களையும், மாவீரர் பெற்றோர் சகோதரர்கள் தொடர்பான விபரங்களையும் திரட்டுகின்றது.


கனடிய மண்ணுக்கு அண்மைக் காலத்தில் வருகை தந்த மாவீரர்களின் குடும்பத்தினர் தற்போது புதிய முகவரியில் வாழும் மாவீரரின் குடும்பத்தினர், புதிய தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்தும் மாவீரர் குடும்பத்தினர் அனைவரும் தங்களது முகவரி, தொலைபேசி இலக்கம் போன்ற விபரங்களைத் தந்துதவுமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம். நன்றி.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.
கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம். கனடா.

தொடர்பு இலக்கம். ***( 647) 980 -5219 / ctro@tamilrembrance.com***



**ARISTO PEST CONTROL**
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL
• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat



Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
**Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926**
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

# ஐ.நாவின் கலப்பு நீதிமன்ற பரிந்துரையும் அமெரிக்காவின் பிந்திய யோசனையும்!

அனைவரும் ஆவலுடனும் அதேவேளை, பதற்றத்துடனும் எதிர்பார்த்திருந்த ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தின் அறிக்கை வெளிவந்து, தற்போது அது தொடர்பான விவாதங்கள், விமர்சனங்கள், சர்ச்சைகள் குறித்த செய்திகளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் சர்வதேச விசாரணையை வலியுறுத்த, இலங்கை அரசாங்கம் உள்ளகப் பொறிமுறை குறித்து பேசிக் கொண்டிருக்க, இரண்டினதும் கலவையாக ஐ.நா மனித உரிமைப் பேரவையின் அறிக்கை வெளிவந்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து கலப்பு நீதிமன்றம் அதாவது 'Hybrid' Court' விசாரணைகள் நடத்த வேண்டும் என்ற பரிந்துரையை ஐ.நா மனித உரிமைகள் பேரவை விடுத்துள்ளது.

இதனை இலங்கை அரசாங்கம் வெளிப்படையாக நிராகரிக் காவிடினும், அது தொடர்பில் ஒரு தளர்வினை ஏற்படுத்த லாம் என்ற நம்பிக்கையுடன் நகர்வுகளை மேற்கொண்டு வருவதாக தெரிகின்றது. இலங்கையின் தற்போதைய தேசிய அரசாங்கத்தின் பங்காளிகளாக இருக்கும் உறுப்பினர்கள் தனித்தனியே வெவ்வேறு வகையில் கருத்துக்களை வெளியிட்டு வந்தாலும், நாட்டின் ஜனாதிபதி யான மைத்திரிபால சிறிசேனவும், பிரதமரான ரணில் விக்கிரம சிங்கவும் ஐ.நா அறிக்கையை வெளிப்படை யாக எதிர்க்கவில்லை. அதனை ஏற்றுக் கொள்ளாவிடினும், நிரா-கரிப்பதான கருத்துக்களை வெளியிடவில்லை.

தமிழர் தரப்பில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஐ.நாவின் இந்த பரிந்துரையை வரவேற்றுள்ளார். தமிழர் தரப்பில் இந்தப் பரிந்துரைக்கு பாரிய எதிர்ப்புக்கள் வெளிவரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த ஜனவரி மாதம் தான் ஜனாதிபதி யாக வந்து, சர்வதேசத்துடன் ஏற்படுத்திக் கொண்ட நல்லுறவின் காரணமாகவே, இவ்வாறானதொரு தளர்வுப் போக்கிலான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதெனவும் இல்லாவிட்டால் இந்த அறிக்கை தீவிரத் தன்மையுடன் வெளிவந்திருக்கும் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் இவ்வாறான கருத்தினையே தெரிவித்துள்ளார். எனினும், குறித்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள கலப்பு நீதிமன்ற விசாரணை என்ற முறையை மாற்றி, உள்ளக விசாரணையை ஏற்றுக் கொள்ளச் செய்யும் சில அணுகுமுறைகளை சர்வதேசத்து டன் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் மேற்கொள்ளலாம் என்ற நம்பிக்கை மைத்திரிக்கும் ரணிலுக்கும் இருப்பதாகவே தெரிகின்றது. அமெரிக்கா இவ்விடயத்தில் கைகொடுக்கும் என்கிற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கின்றது.

ஐ.நா மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்காவின் தென்னாசியா மற்றும் மத்திய ஆசியாவிற்கான உதவி இராஜாங்க செயலாளர் நிசா பிஸ்வால் தெரிவித்திருந்த கருத்து, இலங்கைக்கு நம்பிக்கை தந்த போதும், ஐ.நா அறிக்கை வெளியானதன் பின்னர் வெளியிடப்பட்டுள்ள அமெரிக்கா வின் கருத்துக்கள் இலங்கை அரசாங்கத்திற்கு விசனத்தை ஏற்படுத்தியது.

ஐ.நா அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை இலங்கை அரசாங்கம் ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற தொனியிலேயே அமெரிக்காவின் கருத்து வெளிப்படுத்தப்பட்டது.




பேரவையின் அமர்வில், அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்படவுள்ள தீர்மானத்தின் முதலாவது வரைபுக்கு, இலங்கை தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. ஜெனீவாவி லுள்ள ஐ.நா சபையின் கட்டடத்தில், ஐக்கிய அமெரிக்காவின் நாடாளுமன்றக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட உத்தியோகபூர்வமற்ற கலந்துரையாடலிலே யே இலங்கையின் எதிர்ப்பை, ஜெனீவாவுக் கான இலங்கையின் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க வெளிப்படுத்தினார்.

அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரைபானது, இலங்கை மீது தவறுகளுக்கான திருத்தங்களை முன் வைப்பதாகவும், முன்னரே ஆரம்பத் தீர்மானமொன்றைக் கொண்டுள்ள தன்மையினை இவ்வரைபு கொண்டுள்ளதாக வும், இலங்கை மீது வரையறைகளை விதிப்பதாக காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இலங்கை யில் மேற்கொள்ளப்பட்டு வரும் நல்லிணக்க, மீளமைப்பு நடவடிக்கைகளின் கருத்துகளுக்கு மதிப்பளிக்காததாக அது காணப்படுவதாகவும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரைபின் பல பந்திகள், அரசாங்கத்தின் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு முரணான - நேர்மறையானதாகக் காணப்படுகிறது. அத்தோடு, சமூகங்களை ஒவ்வொரு பக்கமாகத் திருப்பிவிடக்கூடியது என்பதோடு, நல்லிணக்கம் நோக்கியும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதை நோக்கியும் கவனமாக உருவாக்கப்பட்டு வரும் சூழலை இது சீர்குலைக்கிறது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

குறித்த வரைபு, ஐ.நா மனிதஉரிமை பேரவையினால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளை அமல்படுத்துமாறு கோருகின்றது. அத்தோடு, இலங்கையின் நீதி நடைமுறை யில், சர்வதேச நீதிபதிகளையும் விசாரணையாளர்களையும் வழக்குத்தாக்கல் செய்வோரையும் ஈடுபடுத்துமாறும், இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றங்களுக் கான தண்டனைகளை வழங்குவதற்காக, தேவைப்படும் பட்சத்தில், உள்நாட்டுச் சட்டங்களில் மீளாய்வுகளை மேற்கொள்ளவும் கோருகின்றது.

ஊடகவியலாளர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், சிறுபான்மை மதக் குழுக்கள், சிவில் சமூகக் குழுக்கள் ஆகியவற்றைச் சேர்ந்த தனிநபர்கள் அல்லது குழுக்கள் மீது இடம்பெற்றதாகக் கூறப்படும் தாக்குதல்கள் தொடர்பிலும் விசாரணை நடத்துமாறும் கோருகிறது.

நீதிக்குப் புறம்பான கொலைகள், காணாமல் போகச் செய்யப்பட்டமை ஆகியவை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளுமாறும், வடக்கு, கிழக்கில் இராணுவ நீக்கம் செய்யுமாறும், காணிகள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வை அடைவதற்கான பாகுபாடற்ற பொறிமுறைகளை நடை முறைப்படுத்துமாறும், தடுத்து வைத்தல் தொடர்பான நடைமுறைகளை மீளாய்வு செய்யுமாறும் கோருகிறது. இனப்பிரச்சினைக்கான தீர்வாக, மாகாணங்களுக்கான அதிகாரப் பகிர்வு, நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்குமான கருத்துக்களை வெளியிடும் சுதந்திரத்தை மதிப்பதை உறுதி செய்யுமாறும் இவ்வரைபு கோரிக்கை விடுக்கிறது.

**- விகிர்தன் -**

இவற்றுக்கு மேலதிகமாக, இலங்கையில் உள்ள மனித உரிமைகள் நிலவரம் தொடர்பாக ஆராய்ந்து உறுதிப்படுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தைக் கோருவதோடு, சபையின் பரிந்துரைகளின் அமலாக்கம் தொடர்பாகத் தொடர்ச்சியாகக் கண்காணிக்குமாறும், சபையின் 34ஆவது அமர்வின் போது இது தொடர்பான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறும் மேலும் கோருகிறது.

இதன் காரணமாக இலங்கை அரசாங்கத்தினால் அமெரிக்காவின் இந்த வரைபை ஏற்றுக்கொள்ள முடிய வில்லை. இந்த வரைபு குறித்து ஜனாதிபதியோ, பிரதம மந்திரியோ கருத்துக்களை வெளியிடாவிடினும், ஜெனீவாவுக்கான இலங்கையின் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்கவின் மேற்படி விடயங்களை நிராகரித்திருப்ப தானது இலங்கை அரசாங்கத்தின் கருத்தாகவே கொள்ள முடியும். இவர் மஹிந்த ராஜபக்ஸ ஆட்சிக்காலத்திலும் இதே பதவியை வகித்தவர். அத்துடன் மஹிந்த ராஜபக்ஸவின் கருத்துக்களுக்கு ஆதரவாக, அவரது கருத்துக்களை உள்வாங்கி செயற்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அமெரிக்கா மேலும் ஒரு யோசனையை ஜெனீவா மனித உரிமை மாநாட்டில் கடந்த 24ஆம் திகதி

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
• Detailing
• Motor Shampoo
• Interior Shampoo
• Exterior Wash
• Waxing
• Repairs
• Safety Certification
• Overall Maintenance
• Under Coating
• Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6


# யாழ்ப்பாணத்தில் ரவுடிக் கும்பல்களால் ஏற்பட்டுள்ள அச்சம்!

## தாயகமடல்

தமிழர் வாழும் பிரதேசங்களிலிருந்து படையினர் வெளியேற வேண்டும் - படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டு, அவை உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் - தமிழர் வாழும் பகுதிகளில் முற்றுமுழுதான சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றெல்லாம் கோரிக்கைகளை முன்வைத்து, போராட்டம் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில், யாழ்ப்பாணத்தில் விசேட அதிரடிப்படையினரை களமிறக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளமை கவலைக்குரியதே.

போர் முடிவுற்று ஆறு வருடங்கள் கடந்து விட்ட நிலையில் படையினரின் நெருக்குவாரங்களின்றி சுதந்திரமாகவும் அச்சமின்றியும் வாழும் நிலையை விரும்பும் பொது மக்களுக்கு இன்று தமிழர்கள் மத்தியிலிருந்தே தோன்றியுள்ள ரவுடிக் கும்பல்களின் செயற்பாடுகள் மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. பட்டப்பகல் வேளைகளிலேயே குற்றச் செயல்களில் - வாள் வெட்டுக்களில் ஈடுபடும் இவர்களை பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடும் பொலிஸாரும் கட்டுப்படுத்த முடியாத நிலையில் தான் அதிரடிப்படையின் நடவடிக்கை நாடப்பட்டது.

கண் முன்னால் நடைபெற்றுக் கொண்டிருக்கும் குற்றச் செயல்களை பொறுக்க முடியாத கட்டத்திலேயே யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் இந்த உத்தரவை பொலிஸாருக்கு விடுத்தார். இந்த ரவுடிகளால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் ஒன்று மிகவும் துன்பகரமானது.

திருமணமாகி இரு வாரங்களேயான பெண் ஒருவர் யாழ்ப்பாண ரவுடிகளின் தாக்குதலில் கணவனை இழந்துள்ளார். யாழ். அரியாலையைச் சேர்ந்த ஆசிரியையான 41 வயது பெண்ணொருவர் தனியார் கல்லூரியில் கற்பிக்கும் 45 வயதான ஆசிரியரை திருமணம் செய்து இரண்டே வாரங்களான நிலையில், ரவுடிகளின் தாக்குதலால் கணவனை இழந்துள்ளார்.



சம்பவ தினம் இரவு, இத்தம்பதிகள் தேநீர் அருந்த வீட்டோடு அண்டிய கடைக்கு சென்ற வேளையில், அக்கடையில் இருந்த ரவுடிகள் மூவர் இத்தம்பதியினரை ஆபாச வார்த்தைகளால் கிண்டலடிக்க, பெண்ணின் கணவரான மணிவண்ணன் எதிர்த்து வாதாடியுள்ளார். இதனையடுத்து ரவுடிகள் அவர்களின் வீடு வரை பின்தொடர்ந்து சென்று இருவரையும் தாக்கியுள்ளனர். இருவரும் படுகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். மணிவண்ணனுக்கு காயம் அதிகம். மணிவண்ணன் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலன் கொடுக்காமல் இறந்து போனார். திருமண வயது கடந்து புதிதாக வாழ்க்கையை தொடங்கிய இந்த தம்பதிகளின் நிலை இவ்வாறாகி விட்டது.

புங்குடுதீவு மாணவி திவ்வியா பாலியல் வன்புணர்விற்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தால் ஏற்பட்ட அதிர்ச்சியும் சோகமும் இன்னும் மக்கள் மனங்களிலிருந்து அகலாத நிலையில் மற்றுமொரு சம்பவம் தீவுப்பகுதியில் நடைபெற்றுள்ளது.

வேலணை பகுதியில் இளைஞர் ஒருவரை அடித்து மயக்கமடையச் செய்துவிட்டு அவரின் மனைவியைக் கடத்திச் சென்று பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளனர். நள்ளிரவு வேளை, வீட்டிற்குள் புகுந்தவர்கள் கணவனான இளைஞனை தாக்கி மயக்கமடையச் செய்துவிட்டு, 23 வயதான அவரது மனைவியை கடத்திச் சென்று, பாலியல் வல்லுறவிற்குட்படுத்தியுள்ளனர். இரவு முழுவதும் தேடுதல் நடத்தியும் அடுத்த நாள் காலையிலேயே பெண் மீட்கப்பட்டார்.

இது சம்பந்தாக இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். மருத்துவ பரிசோதனைகளில் அவர்களே இச்செயலில் ஈடுபட்டவர்கள் என்பது உறுதியாகியுள்ளதாகவும் தெரியவருகின்றது. பாதிக்கப்பட்ட பெண் திருமணமாகி எட்டு மாதங்களே என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் சுன்னாகம் பகுதி ரவுடிகளின் அட்டகாசம் நிறைந்த பகுதியாக இன்று காணப்படுகின்றது. நீதிமன்றத்திற்கே சவால் விடும் வகையில் அவர்களின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. நீதிபதி இளஞ்செழியன் அவர்களின் பணிப்பிற்கிணங்க சுன்னாகம் பகுதியில் களமிறக்கப்பட்ட விசேட அதிரடிப்படையினர் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சிலரை அதிரடியாக கைது செய்துள்ளனர்.

அண்மையில், சுன்னாகம் நகரப் பகுதியில் பகல் வேளையில் மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த ஒன்பது பேர் கடையொன்றுக்குள் புகுந்து அங்கிருந்த இருவரை வாளால் வெட்டிக் காயப்படுத்தியதுடன் கடையையும் அடித்து நொறுக்கி விட்டு, தமிழ் சினிமா வில்லன்கள் பாணியில் தப்பிச் சென்றுள்ளனர்.

ஒரு மோட்டார் சைக்கிளில் மூன்று பேர் பயணிப்பது போக்குவரத்து சட்டங்களை மீறும் செயல். வீதியில் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் கடமையில் இருந்த நேரத்திலேயே இவ்வாறு அவர்கள் வந்து இவ்வாறு வாள்வெட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இவ்வாறான, குற்றச் செயல்களை அடக்கி, ரவுடித்தனத்தில் ஈடுபடுகின்ற கும்பல்களை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு வடமாகாண பிரதி பொலிஸ் மாஅதிபருக்கான உத்தரவில் நீதிமன்றம் பணித்துள்ளது. அண்மைக் காலமாக அடங்கிக் கிடந்த ரவுடிக்கும்பல் மீண்டும் தலையெடுத்துள்ள நிலையில், ரவுடித்தனத்தில் ஈடுபடும் அனைவரையும் விசேட அதிரடிப்படையினரைக் கொண்டு கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு நீதிமன்றத்தின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ரவுடிகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் ரவுடிகளின் பெற்றோர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களும் கைது செய்யப்பட வேண்டும் என நீதிமன்றம் கடுமையான உத்தரவை பிறப்பித்துள்ளது. குற்றச் செயல்களை கட்டுப்படுத்த இயலாத பொலிஸார் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நீதிமன்றம் கூறியுள்ளது.

குறிப்பாக, சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் அங்கு கடமை புரியும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் குற்றவாளிகளையும், குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களையும் கைது செய்து சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதிலும் அத்தகைய கடமைகளில் ஈடுபடுவதிலும் திறமையற்றவர்களாக நீதிமன்றம் கருதுவதாக தெரிவிக்கப்பட்டதுடன், இவர்களுக்கு எதிராக உடன் நடவடிக்கை எடுத்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் செயற்பாடுகளைச் சீரமைப்பதற்குத் தேவையான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும் எனவும், திறமையற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களை பொலிஸ் மா அதிபரின் அனுசரணையுடன் வேறிடங்களுக்கு இடமாற்றம் செய்து, திறமையானவர்களை சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு நியமிக்க வேண்டும் என்றும் நீதிபதி இளஞ்செழியன் வடமாகாண பிரதி பொலிஸ் மா அதிபரை தமது நீதிமன்ற அறைக்கு அழைத்து நேரடியாக பணிப்புரை வழங்கியுள்ளார்.

இதனையடுத்து களத்திலிறங்கிய அதிரடிப் படை குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் என சிலரை கைது செய்துள்ளது. ஆனால், இந்த நடவடிக்கையின் மூலம் மட்டுமே யாழ்ப்பாணத்தில் தலைதூக்கியுள்ள குற்றச் செயல்களை களைந்து விட முடியுமா என்பது கேள்விக் குறியே.

குற்றச்செயல்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் தண்டனைகளே இக்குற்றங்கள் மீண்டும் நடைபெறாமல் தடுக்க வழிசமைக்கும். கடந்த காலங்களில் கைதுசெய்யப்பட்ட குற்றவாளிகள் சிலர் சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி வெளியே வந்துள்ளனர். கைது செய்யப்பட்ட குற்றவாளிகள் தொடர்பான நீதி விசாரணை மிகவும் காலதாமதமாவதும் இக்குற்றச் செயல்கள் தொடர்வதற்கு காரணமாகின்றது என பொதுமக்கள் கூறுகின்றனர். குறிப்பாக, மாணவி திவ்வியாவின் மிக மோசமான படுகொலையுடன் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் கைது

**- ஆதித்தன் -**

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

விளம்பரம்
VLAMBARAM

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜயபாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.




4 Bedrooms, 4 W Room
Upgraded Kitchen Cabinets, Backsplash, Granite Counter Too & Centre Island




4 Bedrooms, 3 W Room
Master Bdrm Has An Amazing 4Pc Ensuite & Walk In Closet




4+1 Bedrooms, 4 W Room
Professionally Finished Basement With Huge Bedroom




3 Bedrooms, 3 W Room
California Shutters, Oak Staircase, Fire Place




3 Bedrooms, 3 W Room
Dining & Family Room With Gas Fireplace




4+2 Bedrooms, 4 W Room
Large Dining Rm W/ Decorative Columns For Entertaining




4 Bedrooms, 3 W Room
Large Detached Fully Bricked Double Car Garage




3 Bedrooms, 3 W Room
Upgraded Oak Staircase With Iron Picket Rails




3+1 Bedrooms, 2 W Room
Professionally Landscaped Including Stamped Concrete




3 Bedrooms, 3 W Room
Bright And Sun-Filled Home Open Concept Kitchen




3+2 Bedrooms, 2 W Room
Potential Basement Apartment Lots Of Parking




3 Bedrooms, 3 W Room
Open Concept Main Flr & Fam Rm W/ W/O To Yard




3 Bedrooms, 3 W Room
Large Master Bedroom With Sumptuous Ensuite Bath




3 Bedrooms, 4 W Room
Beautiful Hardwood On Main Floor Walk-Out To Balcony




3 Bedrooms, 2 W Room
2 Year New " Sierra" Built Royal Wynd Home

KZG 647-200-5833



Sell your home **faster** and more **money**

RE/MAX Platinum Club Award

**ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC**
Sales Representative
**Direct 416 - 276-1225**
Email: esrinathan@trebnet.com

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770

# Your Home Sold In 30 Days or We buy it

**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold, Your home advertised in full color prints ads every week until it is sold, Our team of specialists for the same price as hiring a single agent

# தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் 2016

## கட்சிகளின் யூக ஆட்டம்!

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலுக்கு இன்னும் ஆறு மாதங்களே உள்ளன. தற்போது ஆளும் ஜெயல்லிதா அரசு மீது பெரிய அதிருப்திகள் இல்லாத நிலையில், கட்சிகளிடையேயான கூட்டணியே வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் என்பதால், கூட்டணிக்கான முயற்சிகளில் கட்சிகள் தீவிரமாக இறங்கியுள்ளன. அதிமுக, திமுக என இரண்டு கட்சிகள் தலைமையில் கூட்டணி அமைத்து தேர்தலைச் சந்தித்து வந்த வழக்கத்துக்கு மாறாக, 2014 நாடாளுமன்றத் தேர்தல் போல, மீண்டும் தமிழகத்தில் பலமுனை போட்டி நிகழ்வ தற்கான வாய்ப்புகள் இருப்பதாகவே தலைவர்களின் அறிக்கைகள் தெரிவிக்கின் றன. இந்நிலையில், திமுகவுடன் கூட்டணிக்கு வரவாய்ப்புள்ள கட்சிகளை வைகோ தடுப்பதால், மதிமுக மாவட்டச் செயலாளர்களை இழுத்து அவரைப் பலவீனப்படுத்தும் திமுக முயற்சி தேமுதிக தலைவர் விஜயகாந்த் – பாஜக மூத்த தலைவர் சுப்பிரமணிய சுவாமி சந்திப்பு பாமகா எங்கள் கூட்டணியில்தான் இருக்கிறது என்ற பாஜக தலைவர்கள் அறிவிப்பு... என ஒவ்வொரு நாளும் தலைவர்களின் ஒவ்வொரு நகர்வும் பல செய்திகள் சொல்கின்றன. 2016 தமிழக சட்டசபைத் தேர்தலில் யார் யாருடன் சேர்வார்கள்? ஓர் அலசல்!

இப்போதைக்கு 2016 தேர்தல் கூட்டணி முயற்சியில் வெகுதூரம் முன்னேறியிருப்ப வர்கள் ஐந்து பேர்தான். ம.தி.மு.க. தலைவர் வைகோ, விடுதலை சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு தலைவர் ஜி. ராமகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்டு தலைவர் முத்தரசன், மனித நேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா ஆகியோர்தான் அந்த ஐவர். இந்த 5 கட்சிகள் இணைந்து 'மக்கள் நல கூட்டு இயக்கம்' என்ற பெயரில் புதிய அமைப்பை உருவாக்கி உள்ளனர். மது ஒழிப்புப் போராட்டம் தொடங்கி, பல போராட்டங் களை இவர்கள் இணைந்து நடத்தி விட்டார்கள். இவர்கள், 'கூட்டணி ஆட்சி' என்ற புதிய கோரிக்கையை உருவாக்கி 2016 சட்டசபை தேர்தலை சந்திக்கத் தயாராகிவிட்டனர். இதன் அச்சாரமாகத் திருமாவளவன் பிறந்த தினம் அன்று, கூட்டணி ஆட்சி கொள்கை மாநாடு நடத்தப்பட்டது. இந்த மாநாட்டில் பேசிய வைகோ, திருமாவளவன், ஜி.ராம கிருஷ்ணன், முத்தரசன் உட்பட எல்லோரும், 'தமிழகத்தில் கூட்டணி ஆட்சி மலர வேண்டும். அதற்கான நேரம் வந்துவிட்டது' என்று முழக்கமிட்டனர்.

மேலும், பல கட்சிகளைத் தங்கள் கூட்டணிக்குள் இழுக்கும் முயற்சியிலும் இந்த ஐவர் அணி ஈடுபட்டுள்ளது. "மக்கள் நலனுக்கான கூட்டியக்கம் தமிழகச் சட்ட சபை தேர்தலுக்கான மூன்றாவது அணியாக மாறும். அதிமுக, திமுகவுக்கு மாற்றாக இந்த அணி இருக்கும்'' என்று கூறியுள்ள, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலர் ஜி. ராமகிருஷ்ணன், "இந்த அணியில் தே.மு.தி.க.வை இணைக்கப்பேச்சு வார்த்தை நடத்துவோம்'' என்றும் தெரிவித்துள்ளார்.

தேமுதிகவை இழுக்க இந்த பாண்டவர்கள் அணி மட்டுமல்ல திமுக, பாஜக ஆகிய கட்சிகளும் முயற்சிக்கின்றன. பிரதமர் நரேந்திர மோடி – தமிழக முதல்வர்



ஜெயலலிதா சந்திப்புக் காரணமாக, பா.ஜ.க – அதிமுகக் கூட்டணி உருவாகலாம் என்ற ஆருடம் அரசியல் நோக்கர்களால் சொல்லப்பட்டு வந்தது. ஆனால், இந்தச் சந்திப்புக்கு இரண்டு தினங்கள் முன்புதான், மதுரை வந்திருந்த பாஜக தேசிய தலைவர் அமித்ஷா, "தமிழகம் ஊழல் நிறைந்த மாநிலம்'' என விமர்சனம் செய்திருந்தார். மோடி – ஜெயலலிதா சந்திப்புக்கு பிறகும் அதிமுக அரசை கடுமையாக விமர்சித்து வந்தார் தமிழகப் பாஜக தலைவர் தமிழிசை சவுந்தரராஜன். அவரிடம், பாஜகா – அதிமுகக் கூட்டணிக்கான வாய்ப்புகள் குறித்துக் கேட்கப்பட்ட போது, ''மோடி - ஜெயலலிதா சந்திப்பை, பிரதமர் - முதல்வர் சந்திப்பு என்றுதான் பார்க்க வேண்டுமே தவிர, அரசியலாகப் பார்க்கக் கூடாது. அது கூட்டணிக்கான சந்திப்பு இல்லை'' என்றார் திட்டவட்டமாக.

மோடிக்கும் ஜெயலலிதாவுக்கும் இடையே நல்ல நட்புறவு இருந்தாலும், அதிமுக - பாஜக இடையே கூட்டணி முயற்சிகள் வெற்றிகரமாக அமையவில்லை என்பதுதான் வரலாறு. 13 தினங்களில் வாஜ்பாய் அரசை ஜெயலலிதா கவிழ்த்ததை அவ்வளவு சுலபத்தில் பாஜக தலைவர்களால் மறக்க முடியாது. மேலும், பாஜகவுடன் கூட்டணி வைத்து தேர்தலைச் சந்தித்த ஒரு முறையிலும் அதிமுக தோல்வியையே சந்தித்தது. எனவே, ஜெயலலிதாவுடனான கூட்டணிக்கு பாஜக தலைவர்கள் பயப்படுவது போலவே, அவர்களுடன் சேர்ந்தால் முஸ்லீம் வாக்குகளை இழக்க நேரிடலாம் என்பதால் ஜெயலலிதாவும் பாஜக கூட்டணிக்கு தயாராக இருப்பாரா என்பதும் கேள்விக்குறிதான். இந்நிலையில், சமீபத்தில் சிதம்பரம் நடராஜரை தரிசிக்கத் தமிழகம் வந்த அமித்ஷா, 'கடந்த லோக்சபா தேர்தலில், தமிழகத்தில் பா.ஜ.க. தலைமையில் அமைந்த அணி போன்று, மீண்டும் அணி அமைத்து போட்டியிட வேண்டும். பழைய கூட்டணியைப் புதுப்பிக்கும் முயற்சியில் ஈடுபடுங்கள்' என, தமிழகப் பா.ஜ.கவுக்கு, யோசனை தெரிவித் தாகச் சொல்லப்படுகிறது.



ஆனால், அதே கூட்டணியை மீண்டும் ஏற்படுத்த முடியுமா என்பது கேள்விக்குறி தான். மதிமுக, பாண்டவர்கள் அணியில் ஐக்கியமாகிவிட்டது. பாமகா தனித்துப் போட்டி என அறிவித்து விட்டது. மிச்சமிருப்பது விஜயகாந்தின் தேமுதிக தான். விஜயகாந்த், கூட்டணி நிலைப்பாடு குறித்து இதுவரை எந்த முடிவையும் அறிவிக்கவில்லை. நிச்சயம் அதிமுக - தேமுதிக கூட்டணிக்கு வாய்ப்பில்லை. தி.மு.க.வை சேர்ந்த முன்னாள் அமைச்சர் முல்லைவேந்தனை, தேமுதிகவில் சேர்க்க முன்வந்துள்ளதில் இருந்து, திமுக – தேமுதிக கூட்டணி குறித்த எண்ணமும் விஜயகாந்த் மனதில் இல்லை என்றே தெரிகிறது. திருமண மண்டபத்தை உடைத்த நினைவுகள் அவர் நெஞ்சில் நீங்காதிருக்கலாம். மேலும், சமீபத்தில் முசிறியில் நடந்த கட்சி கூட்டத்தில் பேசிய பிரேமலதா, "திமுக ஒரு ரவுடிக் கட்சி'' என்றும், "தி.மு.க., அ.தி.மு.க. இரு கட்சி களும் இல்லாத ஒரு தனிக் கூட்டணியை அமைப்போம்'' என்றும் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. எனவே, இப்போதுள்ள சூழலில், தே.மு.தி.க.வுடன் பேசலாம் எனப் பாஜக கருதுகிறது. இதன் ஒரு பகுதியாகத்தான் விஜயகாந்தை சுப்பிரமணி யன் சுவாமி சந்தித்ததாகச் சொல்லப்படுகிறது.


''தனித்துப் போட்டியிடும் முடிவில் உள்ள பா.ம.க.விடமும் பேசிப் பார்க்க உள்ளோம்'' என்று பா.ஜ.க. மூத்த தலைவர் இல. கணேசன் தெரிவித்துள்ளார். பா.ம.க.வோ, 'முதல் நால் முதல் கையெழுத்து பூரண மதுவிலக்கு' என்ற இரண்டாவது போஸ்டரையும் தமிழகம் முழுக்க ஒட்டி விட்டது. மருத்துவர் ராமதாஸ், "எங்கள் தலைமையை ஏற்றுக்கொள்பவர்கள் எங்களுடன் கூட்டணி அமைக்கலாம்'' எனத் தெரிவித்துள்ளார். ஆனாலும், நம்பிக்கை யுடன் இருக்கிறது பாஜக. 'பாமகவுக்கு மத்திய அமைச்சரவையில் இடம் கொடுப்பதன் மூலம் கூட்டணியைப் புதுப்பிக்க முடியும்' எனப் பாஜக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அன்புமணிக்கு



அமைச்சர் பதவி என்றால், அதுவரை பேசியதையெல்லாம் மறுத்துவிட்டு, ராமதாஸ் கூட்டணிக்கு சென்றுவிடுவார் என்பதை மறுக்கமுடியாது. "2014-இல் அனைவரும் தேர்தல் சமயத்தில் ஒன்றாகச் சந்தித்தோம். பின்பு இருக்கிறோம், விலகி விட்டோம் என்ற அதிகாரபூர்வ அறிவிப்பு எதுவும் வரவில்லை. இன்னும் கால அவகாசம் இருக்கிறது. அதற்குள் அரசியல் சூழலில் நிறைய மாற்றம் வரலாம். கூட்டணியில் இருக்கிறோமா இல்லையா என்பது தெரியாமலேயே முதல்வர் வேட்பாளரை அவசரம் அவசரமாகப் பாமக அறிவித்தது தவறு'' என்று பாஜக தலைவர் தமிழிசை கூறியது இதன் வெளிபாடுதான் என்கிறார்கள்.

தமாகவையும் பாஜக கூட்டணிக்கு இழுக்கும் முயற்சிகள் நடக்கின்றன. "ஜி.கே.வாசன் நற்குணமிக்கவர், பக்கு வமானவர். தேசியத்தை வலுப்படுத்த அவர் பாஜக கூட்டணியில் சேரவேண்டும் என

14ஆம் பக்கத்தொடர்ச்சி

BUY, SELL or LEASE
Dinesh Jeganathan
Sales Representative

Cell: 647-895-3466
Email: jdinesh@live.ca
Office: 416.298.3200
Fax: 416.298.3440
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6
*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.
HOMELIFE HIGHER STANDARDS

# அடுக்கு மாடி மனை முதலீட்டாளர்களிற்கு தேவையானவை?

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

### தொடர் - 449

அண்மைக்காலங்களில் புதிய அடுக்குமாடிக் கட்டிட மனைகளில் முதலீடு செய்வது இயல்பாக மாறி வருகின்றது. உழைக்கும் பணத்தை பாவித்து அதனை தகுந்த முறையில் முதலீடு செய்து வருமானம் பெற வேண்டும் என பலர் நினைக்கிறார்கள். இதற்காக பல வழிகளில் முதலீடு செய்வதனைக் காணக் கூடியதாக உள்ளது. ஆய்வு அறிக்கைகளின் பிரகாரம் ஆதனத்தில் இடும் முதலீட்டால் வரும் வருமானம் பங்குச்சந்தை மற்றும் மியூச்சுவல் ஃபண்ட் (Mutual Fund) போன்றவற்றினால் வரும் வருமானத்தை விட அதிகமாகவே காணப்படுகின்றது. ஆதன முதலீடு இலகுவானதும், சிக்கல்கள் குறைந்தாகவும் காணப்படுகின்றது. ஆதனமானது ஓர் அசையாச்சொத்து. இதனை எம்மால் காணமுடியும். எனவே ஆதனத்தில் முதலிட்டால் அம்முதலீட்டில் நடப்பவற்றை எம்மால் அவதானிக்கக் கூடியதாக இருக்கும். ஆனால் மற்றைய முதலீடுகளில் வேறு ஒருவர் அல்லது நிறுவனம் தரும் தகவல்களிலேயே நாம் தங்கியிருக்க வேண்டும்.

பொதுவாக வாடகை வருமானத்தை பெறுவதற்காக முதலீடு செய்யும் ஆதனமானது அமைந்திருக்கும் இடம் (Location) முக்கியமானதாகும். வாடகைக்கு பெற வருபவர், இலகுவாக சகல வசதிகளை அடையக் கூடியதாகவும், எதிர்காலத்தில் மிகவிரைவில் விற்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். சிறந்த இடத்தில் எம்மால் வாங்கி அதன் நிதிநிலைமையினைச் சமாளிக்கக் கூடிய நியாயமான விலைக்கு வாங்குவதே சிறந்ததாகும்.



இன்றைய காலத்தில் போக்குவரத்து சேவை (TTC), நெடுஞ்சாலைகள் (Highways), சிறப்பான பாடசாலைகள் போன்றவை முக்கியமாகும்.

இன்றைய இயந்திர வாழ்க்கைக்கு இவை முக்கியமானதாக இக்காலகட்டத்தில் கருதப்படுகின்றது. இதனை மனதில் வைத்தே முதலீடு செய்வது சிறந்ததாக-லாம். முக்கியமாக சுரங்கப்பாதை ரயில்சேவை (Subway) உள்ள இடங்களில் அமையப்பெறும் அடுக்குமாடி மனைகளின் வியாபாரம் ஒப்பீட்டளவில் அதிகமாகவே காணப்படுகின்றது. ரொறொன்ரோ மத்திய பகுதியில் தொழில்புரியும் இளைஞர்கள், கூடியளவு, வாகனம் வாங்குவதனை தவிர்ப்பதனையே விரும்புகிறார்கள். இவர்கள் பொதுவான போக்குவரத்து சேவையையே

தொடர்ச்சி 16ஆம் பக்கம்


**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

Raja Mahendran, P.Eng.



* INDEPENDENTLY OWNED AND OPERATED

5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969

**CONDO. FOR SALE**

**KEELE & FINCH**

2 Bedroom condo. for sale. 1 parking & balcon. Close o York university. Recentlu painted.




**Asking Price $214,900**

**HOUSE. FOR SALE**



**CASTLE MORE & MCVEAN**

4 Bedroom + 2 Bedroom bsmt. Sep. entrance, 4 Washroom, Hardwood floor. Parking, 9ft ceilings

**Asking Only $769 K.**

**CONDO. FOR SALE**


**YONGE & HWY 401**

1 bedrom condo. for sale. 1 Parking & Balcony.



**Asking only $279,900**

# தவறு செய்தால் நரகமா?



சத்குரு வாசுதேவ்

கேள்வி: எங்கள் மதத்தில் பாவங்கள் செய்தவன் நரகத்துக்குச் செல்வான் என்றும், கொடூரமான தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவான் என்றும் எங்கள் மதத் தலைவர்கள் சொல்கிறார்கள். இங்கே சந்தோஷங்களை எல்லாம் தவிர்த்து விட்டு, பிறகு சொர்க்கத்திற்குப் போவதா அல்லது இங்கே ஜாலியாக எல்லாவற்றையும் அனுபவித்துவிட்டு, பிறகு நரகத்திற்குப் போவதா என்று குழப்பமாக இருக்கிறது.

சத்குரு: நரகம் என்று ஒன்று இருக்கிறது. அங்கே நீ எண்ணெய் கொப்பரையில் வதக்கப்படுவாய்… அணையாத நெருப்பில் எரிக்கப்படுவாய் என்றெல்லாம் சொல்பவர் களுக்குத்தான் எத்தனை அரக்கத்தனமான மனது. உங்களிடம் மனிதநேயம் முழு வீச்சில் இயங்கினால், சொர்க்கம், நரகம் பற்றி பயமுறுத்தி, ஒழுக்கங்களைக் கற்பித்தால்தான் உங்களைச் சரியான பாதையில் செலுத்தமுடியும் என்பது இல்லை. அடிப்படை மனிதத்தன்மைகூட இல்லாமல், இப்படிப்பட்ட கொடூரமான எண்ணங்கள் கொண்டதற்காக அவர்களை அல்லவா அப்படிப் பட்ட நெருப்பில் இட்டு பொசுக்க வேண்டும்? வன்மையான மிருகங்கள்கூட ஒரே அடியில் தாக்கிக் கொல்லப் பார்க்குமே அன்றி, சதா எரியும் நெருப்பில் இட்டுச் சித்திரவதை செய்து வேடிக்கை பார்க்காது. இப்படிப்பட்ட வக்கிரமான மனம் கொண்டவர்கள், எப்படியோ மதத் தலைவர்களாக இயங்க ஆரம்பித்து விட்டது தான் துரதிருஷ்டம். ஒரு குள்ளநரிக்கு வயதாகிவிட்டது. ஒரு முயலைக்கூடப் பிடிக்க முடியவில்லை. அந்த நரி எலிகள் நிறைந்த ஒரு வளைக்கு அருகில் போய் முன்னங்கால்களைத் தூக்கியபடி, இரண்டு கால்களில் நின்று கொண்டது. முகத்தை வான் நோக்கித் திருப்பி, வாயைப் பெரிதாகத் திறந்து வைத்துக்கொண்டது.

முதலில் பயந்த எலிகள், நரி வெகுநேரம் அசையாமல் அப்படியே நிற்பது கண்டு தைரியம் கொண்டன. எலித் தலைவர், ‘எதற்காக இரண்டு கால்களில் நிற்கிறாய்?’ என்று கேட்டது.

‘நான் சித்தனாகிவிட்டேன். தவம் பண்ணிக் கொண்டு இருக்கிறேன். உயிர்களைக் கொன்று புசிப்பதை விட்டு விட்டேன். வெறும் காற்றை மட்டுமே உணவாகக் கொள்கிறேன். அதற்காகவே, வாயை திறந்து வைத்திருக்கிறேன்’ என்று பதில் வந்தது.

‘எதற்காக அண்ணாந்து பார்த்துக்கொண்டு இருக்கிறாய்?’

‘நான் கடவுளுடன் நேரடித் தொடர்பு வைத்திருக்கிறேன். வேறு எங்கும் பார்க்க மாட்டேன்’.



Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**:
www.innerengineering.org

எலிகள் சமாதானமாகின. வளைக்குள் திரும்ப வேண்டிய நேரம் வந்தபோது, ஒவ்வொன்றாக நரியின் கால்களைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டுப் போயின. நரி காத்திருந்து, கடைசியாகச் சென்ற நான்கைந்து எலிகளைப் பிடித்து விழுங்கி விட்டு, மீண்டும் பழைய தவக்கோலத்தில் நின்றது.

இது தெரியாமல் எலிகள் நரியைத் தினமும் பக்தியுடன் வணங்கிப் போயின. காற்றை மட்டுமே சாப்பிடுவதாகச் சொன்ன நரி, நாளாக நாளாக பருமனாகிக்கொண்டே போனது. எலிகளின் கூட்டம் குறைந்து கொண்டே வந்தது.

இப்படித்தான் மதங்களின் பெயரைச் சொல்லிக் கொண்டு சிலர் தவமாய் நின்றுகொண்டு இருக்கிறார்கள். ஆனால், பிடித்து விழுங்குவதற்கு வாயைத் திறந்து வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களின் போதனைகளால், நிற்பது பாவமோ, உட்கார்வது பாவமோ என்று ஒவ்வொன்றைப் பற்றியும் அச்சம் கொண்டு, குற்றவுணர்வால் தவிப்பவர்கள் அதிகமாகி விட்டார்கள். உண்மையில், அச்சமூட்டி யாரையும் நல்லவர் களாக்கிவிட முடியாது. ஒன்றைத் தவிர்க்கப் பார்க்கும்போது, அதுபற்றிய கவனம் அதிகமாகி, அதில் இருந்து விடுபட முடியாமல் சிக்கிப் போகிறவர்களே அதிகம்.

கவனித்துப் பாருங்கள். பாவங்கள் பற்றிப் பேசும் சமூகத்தில் தான் ஒழுங்கீனம் தலைவிரித்து ஆடுகிறது. செய்ய நினைப்பதைச் செய்துவிட்டு கதறி அழுது கொண்டு இருப்பார்கள்… அவ்வளவுதான்!

உங்கள் மதம் அமைத்துக்கொடுத்த நம்பிக்கைகளின் பேரில் கேள்வி கேட்காமல் நீங்கள் செயல்படும்போது, உங்களை உணர்ச்சிவசப்பட வைப்பது சுலபமாகி விடுகிறது. உங்கள் கடவுளின் பெயரைச் சொல்லி வன்முறை, தீவிரவாதம் என்று எதில் வேண்டுமானாலும், உங்களைத் திசை திருப்ப முடிகிறது.

எந்தச் செயலையும், ஆழ்ந்த விழிப்புணர்வோடு செய்கையில் தான் அது புனிதமாக முடியும். இப்போது நீங்கள் இருக்கும் இடம் பாதையின் ஆரம்பமாக இருக்கலாம். ஒருவேளை நீங்கள் போய்ச் சேரவேண்டிய இடத்தை நோக்கி ஓர் அடி எடுத்து வைத்தால் போதுமானதாக இருக்கலாம். ஆனால் எங்கு நிற்கிறோம் என்பதே தெரியாமல், யாரோ சொன்னதற் காக நேரெதிர் திசையில் பயணம் செய்ய ஆரம்பித்தால், எப்போது, எங்கே போய்ச் சேர்வீர்கள்?

வாழ்க்கையின் மூலத்தைத் தொடுவது என்பது இன்னொரு பரிணாமத்திற்குள் நுழைவது. அங்கு உங்களை அழைத்துச் செல்வதே உங்கள் மதத்தின் நோக்கமாக இருக்க வேண்டும். அதற்கு மதம் என்பது புத்திசாலித்தனத்தின் உச்சகட்டமாக இருக்க வேண்டும். ஆனால் இந்த விடயத்தில் அடிமட்டத்தில் இருக்கும் சிலர்தான் மதங்களின் பாதுகாவலர்களாகத் தங்களை அறிவித்துக் கொள்கிறார்கள்.

உங்களிடம் மனிதநேயம் முழுவீச்சில் இயங்கினால், சொர்க்கம், நரகம் பற்றி பயமுறுத்தி, ஒழுக்கங்களைக் கற்பித்தால் தான் உங்களைச் சரியான பாதையில் செலுத்தமுடியும் என்பது இல்லை. யாரோ சொல்லும் போதனைகளின் மீது நம்பிக்கைகளின் அடிப்படையில், ஆன்மீகம் அமைவது இல்லை. அது நாடுதல், தேடுதல் என்று இன்னொரு கட்ட மனநிலையில் நிகழ்வது. எந்த நம்பிக்கையின் அடிப்படையிலும் உங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளாமல், எதையும் அனுபவரீதியாகப் பரிசீலனை செய்யுங்கள்.

***4 day Inner Engineering program***
***led by an Isha teacher trained by "Sadhguru"***
***Coming to Toronto***

TIMINGS: Thursday November 26: 6:30pm – 9:30pm
Friday November 27: 6:30pm – 9:30pm
Saturday November 28: 8:30am – 7:00pm
Sunday November 29: 7:30am – 7:00pm

VENUE: Princess Banquet Hall
3330 Pharmacy Ave,Scarborough, ON M1W 3V8 Canada

Vegetarian lunch provided on Saturday; Vegetarian breakfast & lunch on Sunday.
Attendance for all sessions is required.

***CONTACT: Email: toronto@ishafoundation.org***
***Phone: 416-300-3010***
***Online registrations: www.innerengineering.com/live/toronto***




OCTOBER
04
6:30 pm
ஞாயிறு
தாய்வீடு
THAIVEEDU HOME & LIVING
Flato Markham Theatre
171 Town Centre Blvd
Markham, ON L3R 8G5
தாய்வீடு
பத்திரிகை நடத்தும்
அரங்கியல் விழா
பகடையாட்டம் - திரௌபதி
thaKiDa Dance Company.
கொற்றவை
(தென்மோடி நாட்டுக்கூத்து)
நெறியாள்கை:
செல்வம் அருளானந்தம்
யாரொடு நோகேன்
நெறியாள்கை:
பொன்னையா விவேகானந்தன்
416-857-6406 | info@tamilartsgroup.com
கட்டணம்: $20, $50, $100
Sri Vallipuranathar
Certified Insolvency Counsellor
CSC Credit Solution Centre
80 Corporate Drive, Suite 309, Scarborough, ON
416.439.0224 416.450.5011
CHANDRAN RASALINGAM
President & CEO
iNFORCE LIFe Financial Services Inc.
10 Milner Business Court, Suite 707, Scarborough, ON M1B 3C6
Dir: 416-909-0400 Bus: 416-321-6000 x400
career@inforcelife.com www.inforcelife.com
Atheesan Sarvananthan
HONDA
Formula Honda
2240 Markham Rd, Scarborough, ON M1B 2W4, Canada
Tel: 416-720-1184
Suren Nathan
BonaFide
Mortgage Broker
Dir. 416-436-1111
7 Eastvale Drive, Unit 203, Markham, ON, L3S 4N8

# யாழ்ப்பாணத்தில்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

செய்யப்பட்டும், அவ்வழக்கு நீண்ட நாட்களாக இழுபட்டு செல்கின்றமை மக்களுக்கும், மாணவி திவ்வியாவின் உறவினர்களுக்கும் ஒரு ஏமாற்றமான மன நிலையை ஏற்படுத்தியுள்ளது.




முன்னரும் யாழ்.பிரதேசங்களில் பல குற்றச் செயல்களில் ஈடுபட்ட 'ஆவா' என்றழைக் கப்படும் ரவுடிக் கும்பல் கைது செய்யப் பட்டது. அவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து எவருக்குமே தெரியாது.

குற்றவாளிகள் கைது செய்யப்பட்டால் மட்டும் போதாது அவர்கள் மீதான நீதி விசாரணைகள் குறுகிய காலத்திற்குள் நிறைவு செய்யப்பட்டு அவர்களுக்கான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். குற்றவாளிகளுக்கான தண்டனைகள் குறித்து பகிரங்கப்படுத்தப் பட வேண்டும். குற்றவாளி கள் கைது செய்யப்படுவ தும் அவர்கள் மீது விசாரணைகள் மேற்கொள் ளப்படுவதும் ஊடகங்களில் செய்திகளாக வெளிவரு கின்ற அளவிற்கு அவர்களுக்கான தண்டனை கள் குறித்து ஊடகங்களில் வெளிவருவது குறைவாகவே காணப்படுகின்றது.

பாரிய குற்றங்களை செய்தவர்களுக்கு வழங்கப் படும் தண்டனைகள் கடுமையாக்கப்பட்டு, அத்தண்டனைகள் பகிரங்கப்படுத்தப்படும் போது ஏனைய குற்றவாளிகளுக்கு அது பயத்தை ஏற்படுத்துவதாகவும், ஒரு பாடத்தை கற்பிப்பதாகவும் அமையும்.

# ஐ.நாவின்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

முன் வைத்தது. பொதுநலவாய மற்றும் சர்வதேச நீதிபதிகள் அடங்கிய குழுவினரால் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என அமெரிக்கா அந்த யோசனையில் தெரிவித்துள்ளது. இந்த யோசனையை இலங்கை அரசாங்கம் தற்போது வரவேற்றுள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பும் வரவேற்றுள்ளது.

அமெரிக்காவின் யோசனைக்கு அனுசரணை வழங்கவுள்ளதாக பிரதமர் ரணில் விக்ரம சிங்க தெரிவித்துள்ளார். இதனூடாக இலங்கையை மேலும் அழுத்தத்திற்கு உள்ளாக்காமல் நாட்டிலுள்ள ஜனநாயக சமுதாயம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கு உலகம் ஏற்றுக் கொண்டுள்ளதாக ரணில் விக்ரமசிங்க குறிப்பிடுகின்றார். ஆனால், அனைத்து யோசனைகளும் இலங்கையின் அரசியலமைப்புக்கு உட்பட்டே செயற்படுத் தப்படும் என்றும் பிரதமர் தெரிவித்திருக்கின்றார்.

எது எப்படியிருப்பினும், இந்த தகவல்களை எல்லாம் ஊடகங்கள் மூலம் அறிந்து கொள்ளும் மக்களுக்கு குழப்பம் அல்லது, ஒரு தெளிவின்மை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகின்றது.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தங்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டுமானால், சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப் படுவதையே விரும்புகின்றனர். இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் எவ்வித விசாரணைப் பொறிமுறைகள் மீதும் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை.

ஆனாலும், ஐ.நா மனித உரிமை ஆயகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ள கலப்பு நீதிமன்ற விசாரணையை ஓரளவிற்கு தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

இப்போது, பொதுநலவாய மற்றும் சர்வதேச நீதிபதிகள் அடங்கிய குழுவினரால் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்ற கருத்தை அமெரிக்கா வெளியிட்டுள் ளது. இதனை இலங்கை அரசாங்கமும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும் வரவேற்பதாக தெரிவித்துள்ளன.

அவ்வாறெனில், கலப்பு நீதிமன்ற விசாரணை என்பதிலும் ஒரு தளர்வினை ஏற்படுத்தி, உள்ளக பொறிமுறையின் கீழ் அமெரிக்காவின் இந்த பிந்திய யோசனை நடைமுறைக்கு வரப்போகின்றதா? என்பது தான் இப்போது தமிழ் மக்களை குழப்பத்திலாழ்த்தியுள்ள கேள்வி.

# தமிழ்நாடு...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

இருகரம் கூப்பி வரவேற்கிறோம்'' என்று இல.கணேசன் கூறியுள்ளார். இதனால், ஜிகே வாசனுக்கு அவரே எதிர்பார்க்க ஒரு முக்கியத்துவம் திடீரென கிடைத்து திக்கு முக்காடிப் போயிருக்கிறார் என்கிறார்கள்.

ஆக, 2014 நாடாளுமன்றத் தேர்தல் போல், 2016 சட்டசபை தேர்தலிலும் பலமுனைப் போட்டிக்கே வாய்ப்பிருப்பதாகத் தெரிகிறது. மும்முனை அல்லது நான்குமுனை போட்டி ஏற்படலாம் என்கிறார்கள். இப்படிப் பலமுனைப் போட்டி ஏற்பட்டால் அதனால் அதிகம் பாதிக்கப்படுவது திமுகதான். ஏனெனில், அரசு எதிர்ப்பு ஓட்டுகளை மொத்தமாக அள்ளும் திமுகவின் கனவு சிதையும். எதிர்ப்பு ஓட்டுகள் சிதறும். இன்னொரு பக்கம், ஆதரவு வாக்குகள் அப்படியே அதிமுகவுக்குக் கிடைத்துவிடும். அதிக வாக்கு வங்கி உள்ள கட்சி என்னும் நிலையில் 2014 நாடாளுமன்றத் தேர்தல் போலவே பலமுனைப் போட்டி அதிமுக வுக்கு தான் சாதகமாக அமையும்.

எனவே, பலமுனைப் போட்டி ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் திமுகத் திட்டவட்டமாக உள்ளது. எதிர்கட்சிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்துத் தங்கள் தலைமையில் மெகா கூட்டணி அமைக்கவேண்டும் என்று திமுக கணக்குப் போடுகிறது. தலைவர் குடும்பக் கல்யாணம் முதற்கொண்டு பல முயற்சிகளை இந்த வழியில் திமுக எடுத்து விட்டது. ஆனால், 'கடை விரித்தேன் கொள்வாரில்லை' என்பது போல், திமுகக் கூட்டணிக்குக் கட்சிகள் தயாராகவில்லை என்பதுதான் யதார்த்தம். திமுக தலைமை யில் பெரிய கூட்டணி ஏற்படாமல் தடுப்பவர்களில் முன்னால் நிற்கிறார் வைகோ.

"இலங்கைத் தமிழர்களுக்கும் மதிமுகவுக் கும் திமுக செய்த துரோகங்களை, கசப்பான அனுபவங்களை மறக்க முடியாது. எனவே, திமுகவுடன் கூட்டணி கிடையாது. தற்போதைய நிலையில் மக்கள் கூட்டியக் கத்தை முன்னெடுத்துச் செல்வோம்'' என்று, திமுகக் கூட்டணி முயற்சிக்கு முட்டுக் கட்டை போட்டுகொண்டே இருக்கிறார் வைகோ. எனவே, வைகோவுக்கு அதிர்ச்சி கொடுக்க, மதிமுகவை உடைக்கும் முயற்சியில் இறங்கிவிட்டது திமுக. இதற்கு நல்ல பலனும் இருக்கிறது. லோக்கல் கவுன்சிலர்கள் முதல் மாவட்டச் செயலா- ளர்கள்வரை, மதிமுகவில் இருந்து ஒவ்வொ ருவராக திமுகவுக்குத் தாவிக் கொண்டே இருக்கிறார்கள். இதில் இன்னொரு லாபமும் திமுகவுக்கு இருக்கிறது. குறிப்பாக ஸ்டாலினுக்கு. கருணாநிதிக்குப் பிறகு ஸ்டாலின் தலைமையை ஏற்கத்



தயங்குபவர்கள், வைகோ பக்கம் செல்ல வாய்ப்பிருப்பதால், இப்போதே வைகோ கூடாரத்தை காலி செய்கிறார்கள்.

வைகோவுடன் இருக்கும் விடுதலைச் சிறுத்தைகள், கம்யூனிஸ்டுகளும்கூட மக்கள் நல கூட்டு இயக்கத்தைப் பலப்படுத் துவதில்தான் கவனமாக இருப்பதால், அவர்களும் திமுகக் கூட்டணியில் இணையும் பேச்சுக்கே இடமில்லாமல் போய் விட்டது. "திமுக, அதிமுக இரண்டு கட்சிகளுடனும் கூட்டணி கிடையாது'' எனக் கம்யூனிஸ்ட் தலைவர்களும் சொல்லி வருகிறார்கள். கூட்டணிக்கு வாய்ப்பிருப்பதாகத் தெரியும் ஈவிகேஎஸ் இளங்கோவனோ, "தமிழகத்தில் 234 தொகுதிகளிலும் காங்கிரஸ் போட்டியிடுவது தான் எங்கள் நோக்கம்'' என நகைச்சுவை யாக பேசுகிறார் அல்லது "ஆட்சியில் பங்கு'' என்று பயம் காட்டுகிறார்.

எனவே, விஜயகாந்தை இழுப்பதில்தான் திமுகவும் மும்முரமாக இருக்கிறது. திமுக, பாஜக தவிர ஜவர் கூட்டணியும் விஜயகாந்தை இழுக்க முயற்சிக்கிறது. விஜயகாந்த் பிறந்த நாள் அன்று திருமாவளவன் செல்போன் மூலம் வாழ்த்துத் தெரிவித்தார். பின்னர் நேரிலும் சென்று வாழ்த்துக் கூறினார். அப்போது இருவரும் ஒருமணி நேரம் பேசினார்கள். ஆனால், யாருடைய இழுப்புக்கும் இடம்கொடுக்காத ஜல்லிக்கட்டுக் காளையா- கத் திமிரிக் கொண்டிருக்கிறார் விஜயகாந்த். "மக்களுடன் கூட்டணி'' என்ற பழைய பாடலையே மீண்டும் மேடைக்கு மேடை பேசுகிறார்.

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE - TEL : 416.289.7514 / OWNER SAM - CELL: 416.732.9383
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7


1890
JAFFNA HINDU COLLEGE
ASSOCIATION - CANADA
CANADA
1890 125 years 2015
2015
யாழ் இந்துக்கல்லூரியின் 125-வது வருட நிறைவையிட்டு
பழைய மாணவர்கள் வழங்கும்
கலையரசியின் கலைச்சங்கமம்
இரண்டு நாட்கள் பல்சுவை நிகழ்ச்சிகள் 2015
Event Sponsor
Luciaa KITCHENS
Event Sponsor
INFORCE Group of Companies
சூப்பர் சிங்கர் புகழ்
திவாகர்
பட்டிமன்ற நடுவரும், ஜெயா தொலைக்காட்சியின் "இன்றைய சிந்தனை"
நிகழ்ச்சியாளருமான கலைமாமணி - உவகைப்புலவர்
முனைவர் கு. ஞானசம்பந்தன் M.A., M.Phil., Phd.,
சூப்பர் சிங்கர் புகழ்
சோனியா
Platinum Sponsor
K.G.K. Green House & Patio Flowers Inc.
Platinum Sponsor
RBC Financial Group
SCARBOROUGH
10th Oct., 2015, 5.00 pm
Chinese Cultural Centre (Markham & Sheppard)
5183 Sheppard Ave E, Scarborough, ON M1B 5Z5
MARKHAM
11th Oct., 2015, 5.00 pm
Flato Markham Theatre (Warden & HWY 7)
171 Town Centre Boulevard, Markham, ON L3R 8G5
Media Sponsors
உதயன்
Thamilar Senthamarai
ஈழநாடு
Monsoon Journal
Tamil Mirror
ALL YOUR REAL ESTATE NEEDS
Raj Nadarajah
416-333-6115
NKS
TICKETS WILL BE SOLD HERE ($100, $50, $20)
NEW OCEAN SUPERMARKET - 416-292-0122
ASIAN CASH AND CARRY, BRAMPTON - 905-794-0015
S.P. IMPORTERS - 416-261-3881
NEW SPICELAND SUPER MARKET, BOTH LOCATIONS - 416-335-3030 / 416-292-0064
GLORIUS PRINTERS, MARKHAM - 905-471-2500
ERAA CD - 416-269-1716
Buva 416-570-5261, Krish 416-930-9119, Mohan 416-871-8534
Kathir 416-856-6900, Kaneshapillai 416 918 9868

# இருமல்! ஓர் எச்சரிக்கை விளக்கம்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

***COUGH - A WARNING REPORT***

தொந்தரவு செய்யாத மெல்லிய இருமல் ஒவ்வாமையினால் வருவதுண்டு. ஆனால் தொடர்ந்து தொல்லைதரும் இருமல் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு மேல் இருந்தால் அதன் காரணமறிந்து வைத்தியம் செய்ய வேண்டும். இருமலானது வறட்டு இருமல், சளியுடன் கூடிய இருமல், ஓயாத இருமல் என்று பலரையும் கஷ்டப்படுத்தி நெஞ்சுவலியை உண்டாக்கலாம், மயக்கமடையச் செய்யலாம், தூக்கத்தை கெடுக்கலாம், சிறுநீரை அடக்க முடியாதபடி கஷ்டப்படுத்தலாம். அத்துடன் மூக்கில் நீர்வடிதல், வெள்ளை, மஞ்சள் நிறத்தில் சளி ஒழுகி அதனைத் தொடர்ந்து மூக்கும் மிளகாய்ப் பழம்போல் சிவந்து விடுகிறது.

காலநிலை மாற்றத்தின் போது உதாரணமாக வெயில் காலத்திலிருந்து குளிர்காலம் வரும் போதும், குளிர்காலத்திலிருந்து பனிக்காலம் வரும் போது வைரஸ் முதலான தொற்றுக் கிருமிகள் மிகுந்து காணப்படுகிறதோ அந்த நாட்களில் எதிர்புச்சக்தி குறைந்துள்ளவர்கள் இருமல் பாதிப்பிற்கு உள்ளாகின்றனர். இந்தகாலத்தில் நேரம் தவறி உண்பதும் உணவில் போதுமான சத்துகள் இல்லாமையாலும் குடல்புண் ஏற்பட்டு குடலிருந்து அமில நீர் தொண்டையை நோக்கி வந்து நமக்கு நன்மை செய்யும் பக்டீரியாக்களை அழித்து விடுவதால் கிருமித் தொற்று ஏற்பட்டு அதனால் வரும் இருமல் என்ன மருந்து சாப்பிட்டாலும் சரியாவதில்லை. இரவு பகல் என்று குளிரூட்டப்பட்ட அறை, காற்றோட்டமில்லாத அறை, ஓடி ஓடி ஓய்வில்லாது வேலை செய்வோர் இந்த இருமலால் துன்பப்படுகின்றனர். இப்படிப் பட்டவர்கள் தமது குடல் மற்றும் இரைப்பை உபாதைகளைச் சரி செய்வதால் மட்டுமே



இருமல் குணமாகும்.

ஆனால் மூன்று வாரங்களுக்கு மேற்பட்ட கொடிய இருமலுக்கு காரணங்கள் பல உள்ளன.

1. மூச்சுக்குழாய், நுரையீரல் அழற்சி
2. நிமோனியா எனப்படும் 'பக்டீரியா கிருமித் தாக்கம்
3. வைரஸ் கிருமிகளின் தாக்கம்
4. குழந்தை பருவத்திலிருந்தே கெட்டு இறுகிப்போன நுரையீரல்
5. ரிபி கிருமிகளின் தாக்கம்
6. ஆஸ்துமா நோயின் தாக்கம்
7. தொடர்ச்சியான புகைப்பழக்கம்

மேலும் இரத்த அழுத்தம் மிகுதியானவர்கள் உட்கொள்ளும் சில மாத்திரைகள் தொடர் இருமலை உண்டாக்கும். அதனை மருத்துவரிடம் சொல்லி மாத்திரைகள் மாற்றி எடுக்க வேண்டியிருக்கும். இருமலின் போது காதுவலி, தலைவலி, தூக்கம் கெடுதல் போன்ற உபாதைகளும் ஏற்படுவதுண்டு. இப்படியான இருமலுக்கு வீட்டு வைத்திய முறைகள் நல்ல பலனைத் தரும். சுக்கு, மிளகு, திப்பிலி இவற்றை சம அளவு எடுத்து பொடி செய்து சிறிதளவு பனம் கல்லாகாரத்துடன் அல்லது வெல்லத்துடன் கலந்து சிறு உருண்டையாக்கி 21 நாட்கள் சாப்பிட்டு வரும்போது இருமல் பூரணமாக்க கட்டுப்பாட்டுக்குள் வரும். அதுமட்டுமன்றி குளிரூட்டப்பட்ட உணவுப் பண்டங்களைத் தவிர்க்க வேண்டும்.

குழந்தைகளுக்கு வரும் இருமலைப் பொறுத்த மட்டில் மருத்துவரை அணுகி அவரது ஆலோசனையின்படி தடுப்பூசி போடுவது சிறந்தது. உணவருந்தும் முன்பும் அதன் பின்பும், கழிவறைக்குச் சென்ற பின்பும் கைகளை நன்கு சுத்தம் செய்ய வேண்டும். மற்றும் நோய் எதிர்ப்புச் சக்தி இல்லாதவர்கள், முதியவர்கள், கர்ப்பம் தரித்த பெண்கள் உடல் சுத்தமில்லாதவர்களிடம் நெருங்கிப் பழகக் கூடாது. அத்துடன் சுத்தமான குடிநீர், காய்கறிகள், பழங்கள் என்பனவற்றை உணவாக்க வேண்டும்.

மலச்சிக்கல் ஏற்படாது பார்த்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக காலையில் வெறும் வயிற்றில் இரண்டு தேக்கரண்டி நல்லெண்ணெய் வாயில் விட்டு 20 நிமிடங்கள் வரை கொப்பளிக்க வேண்டும். இதனால் உடலிலுள்ள வைரஸ் கிருமிகளை வெளியேற்ற முடியும். நாய், பூனை போன்ற செல்லப் பிராணிகள் நெருங்குவதைத் தவிர்க்கவும்.

**இருமல் நோய்க்கு யோகாசன சிகிச்சை முறைகள்**

**சூரிய நமஸ்காரம் - *Sun Salutaion***

காலையில் எழுந்ததும் மூன்று முதல் ஐந்து சுற்றுக்கள் சூரிய நமஸ்காரம்



செய்துவரும் போது சுவாசப்பைகள் நன்கு விரிவடைந்து அதிக பிராணவாயு அதனைச் சென்றடைவதால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து இருமல் நோயை இல்லாமல் செய்கிறது.

**காபலபாதி மூச்சுப் பயிற்சி முறை**

இருமல் ஏற்படும் விதத்தை பார்க்கும்போது நுரையீரலிலுள்ள அழுக்குகள் மூச்சுக் குழாய் வழியாக மேலெழுந்து தொண்டைப் பகுதியை அடையும் போது குற்றல் போன்ற உணர்வு ஏற்பட்டு இருமலை உருவாக்குகிறது. இப்படியான நுரையீரலிலுள்ள அழுக்குகளை வெளியேற்றும் சக்தி இந்த கபாலபாதி கிரிகைக்கு உள்ளது. இதனை ஒரு யோகாசன ஆசிரியரின் மூலமாகத் தெரிந்து கொண்டு பயிற்சி செய்யும் போது இருமல் நோய் முற்றாக குணமடைய வாய்ப்புண்டு.

இவற்றைவிட இருமல் நோய் இல்லாது செய்வதற்கு பின்வரும் யோகாசனங்கள் உதவுகின்றன.

1. பவனமுத்தாசனம் 2. நவாசனம்
3. புஜங்காசனம் 4. சலபாசனம்
5. தனூராசனம் 6. ஒட்டக ஆசனம்

இவற்றுள் ஏதேனும் ஒன்றையோ, இரண்டையோ தினமும் பழகி வந்தால் மிகுந்த பலனைப் பெறலாம்.




Diploma in Yoga Therapy (India)
**416.289.2033** *after 7:00pm*
**416.617.5721**

# அடுக்கு...

**11ஆம் பக்கத்தொடர்ச்சி**

பாவிக்கிறார்கள். இதனால் வாடகைக்கு கொடுக்க இருக்கும் மனைகளின் இடம் மிக முக்கியமாகும். வாகனங்கள் வைத்திருந்தாலும் வேலைக்கு செல்வதற்கு பெரும்பாலும் பொதுப்போக்குவரத்துச் சேவையையே பாவிக்க விரும்புகின்றனர். எதிர்காலத்தில் ரொறொன்ரோ வின் மத்தியபகுதிக்கு செல்லும் வாகனங்களிற்கு நெடுஞ்சாலைகளை பாவிப்பதற்கு பணம் செலுத்த வேண்டி வந்தாலும் (?) ஆச்சரிய படத் தேவையில்லை. காலமாற்றத்துடன் இந்த மேலதிக பணவசூலிப்பும் வரலாம். இந்நிலைமை ஏற்பட்டால், மேலும் மக்கள் தமது போக்குவரத்திற்கு பொதுப்போக்கு வரத்துச்சேவைகளான 'Subways, TTC, Go....' போன்றவற்றினையே பயன்படுத்துவர்.


குறிப்பு :- இலண்டன் (UK) மத்திய பகுதிக்கு காலையிலிருந்து மாலைவரை குறிப்பிட்ட நேரத்தில் வாகனத்தை கொண்டு செல்வதற்கு பணம் செலுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது. இந்நிலைமை இங்கே ஏன் வராது? எதுவும் நடக்கலாம்.

பெரிய அளவிலான அடுக்குமாடி மனைகளை வாங்கும்போது (அதாவது 2 bedroom அல்லது 3 Bedroom) பிள்ளைகளுடன் உள்ள குடும்பங்கள் இவ்வகையான மனைகளை வாடகைக்கு பெற விரும்பலாம் அல்லது எதிர்காலத்தில் வாங்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படலாம். அவ்வாறான சந்தர்ப்பத்தில் பாடசாலை, கடைகள், நூலகம், பூங்கா போன்றவை அண்மையில் இருப்பது முக்கியமாகலாம். தகுந்த இடத்தை தெரிவு செய்தபின் அடுக்குமாடி மனையைக் கட்டும் நிறுவனத்தின் 'நன்மதிப்பு' (Reputation) ஐயும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

உயரம் குறைந்த வீடுளின் இன்றைய விலை அதிகரிப்பானது, ரொறொன்ரோவில் வாழ விரும்புபவர்களிற்கு அடுக்குமாடி மனையே எதிர்கால தீர்வாகலாம் (?) போலவே தோன்றுகின்றது. வட்டி வீதத்தினை எடுத்துக்கொண்டால் இன்றைய குறைந்த வட்டிவீதம் ஆதனங்களை வாங்குவதற்கு உகந்ததாகவே காணப்படுகின்றது. நீண்டகால, தகுந்த ஆதன முதலீடானது எதிர்காலத்திற்கு நலமாகலாம். எனினும் தகுந்த தெரிவு முக்கியமாகலாம்.

செப்ரெம்பர் 29, 2015 இந்தியாவின் ரிசர்வ் வங்கி தனது வட்டி வீதத்தை 7.25 வீதத்திலிருந்து 6.75 வீதமாகக் குறைத்துள்ளது. 2016ஆம் ஆண்டு ஜனவரிக்கு இடையில் நாட்டின் பண வீக்கத்தை 6 வீதத்திற்கு கீழாக கொண்டு வர இருப்பதாக ரிசர்வ் வங்கியின் ஆளுனர் ரகுராம் ராஜன் தெரிவித்துள்ளார்.

**YOGA - MEDITATION CLASSESS**
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்


மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.
நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

***GTA Square Mall*** இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: ***Scarborough - Markham*** - செல்வ சோதி - ***416.289.2033***

# சில தகவல்கள் - தெரிந்து கொள்ளுங்கள்

## கனடிய தகவல் தொடர் 238

தொடர்ச்சி.....

• ரொறொன்ரோ நகரசபை எல்லைக்குட்பட்ட தேவைகள், பிரச்சினைகளுக்கு வழிகாட்ட எந்த நேரமும் அழையுங்கள் - இலக்கம் 311. தமிழ் மொழி மூலமும் வழிகாட்டல்கள் பெறலாம். இதேபோல் ஏனைய நகரசபைகளுக்கும் வழிகாட்டல்கள் உண்டு. (City help)

• கனடாவில் எவரும் இனம், மொழி, மதம், நிறம், ஆண், பெண், வயது என எந்த சந்தர்ப்பத்திலும் எவரையும் ஒதுக்க முடியாது. இவ்வாறான வழியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்டரீதியாக இலவசமாக வழிகாட்டி உதவ 'Ontario human rights legal support centre' என்னும் அரச நிறுவனத்தின் சட்ட மேதைகள் தயாராக இருக்கின்றனர். முறைப்பாடு செய்ய: 'Ontario Human Rights commission' என்னும் நிறுவனம் பாதிக்கப்பட்டவர்களுக்காக திறந்திருக்கின்றது. இதற்கென ஒரு நீதிமன்றமும் உண்டு. (Human Rights Tribunal of Ontario) உண்மையாக பாதிக்கப்பட்டால் நட்டஈட்டையும் பெற்றுத்தரும்.








• வேதனைகளுடன் வாழும் மாற்றுத்திறனாளிகளின் எதிர்கால வாழ்க்கையின் வசந்தத்திற்கு என கனடிய அரசு ஒரு சேமிப்பு திட்டத்தினை வங்கிகளினூடாக அறிமுகப்படுத்தியுள்ளது. மாதா மாதம் இத்திட்டத்தில் தாங்கள் வைப்பு செய்யும் சேமிப்புகளுக்கு ஊக்குவிக்குமுகமாக அரசும் சேர்ந்து ஓரளவு பணத்தினை தங்களின் சேமிப்பில் முதலிடும். (RDSP - Registered Disability Savings Plan)

• கனடாவில் வாகனம் செலுத்தும் இரண்டு அனுமதி பத்திரம் வைத்திருப்பவர்கள் ஏனைய நாடுகளுக்கு பயணம் செய்யும்போது அங்கும் வாகனம் செலுத்தும் 'சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம்' பெற வேண்டுமா? அழையுங்கள் CAA - Canadian Automobile Association (International driver's license).



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

TBC Toronto Business College
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



DIPLOMA PROGRAMS
- ACCOUNTING & PAYROLL ADMIN. 35 Weeks
- BUSINESS ADMINISTRATION 26 Weeks
- COMPUTERIZED ACCOUNTING 26 Weeks
- FOOD SERVICE WORKER (FSW) 12 Weeks
- MEDICAL OFFICE ADMIN.(MOA) 32 Weeks
- PERSONAL SUPPORT WORKER(PSW) 26 Weeks

PSW
START YOUR CAREER IN SIX MONTHS
Immediate Job Opportunities
Placement In Long Term Care Facilities
NACC Diploma

FREE TRAINING
Tuition Fees,Books,Living Expenses
Day care & Transportation
up to $28000
இலவசமாகப் பெறலாம்.
எவ்வாறென்பதை அறிவதற்கு
அழையுங்கள்
or visit www.secondcareerontario.com

Part Time Courses
Windows,Outlook,Word,Excel,
Power Point,Access,QuickBooks,
Sage50 Accounting & Accpac 2012

Workshops
First Aid & CPR
Food Handler Certification

- Free Parking
- Small Class Sizes
- Accessible by TTC

416-291-5155 / 416-451-6680
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com

EDUCATION IS A LIFE LOOONG JOURNEY
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

சிலருக்கு தலையிலோ, காதிலோ இரைச்சல் ஒலி ஏற்படுவதை அறிய முடிகின்றது. இந்நிலை ஏற்பட காது, தலைப்பகுதியில் பாதிப்பு நிகழ்ந்திருக்க லாம். இதனை முதல் அறிந்துகொள்ள வேண்டும். இந்நிலைப்பட்டோர் தாமதமின்றி தங்கள் வைத்தியர்களிடம் சென்றால் அவர்கள் நன்கு பரீட்சித்து கருவிகள் கொண்டு ஆய்வு செய்து தகுந்த வைத்தியம் செய்து குணப்படுத்திக் கொள்வர்.

ஒருவர் சாதாரணமாக மூக்கினால் சுவாசிக்காமல் வாயினால் மூச்சுவிடும் நிலை. இந்நிலை இயற்கைக்கு மாறானது. வாயினால் மூச்சுவிடும் தன்மை உடையோர்களைக் கவனிக்கும்போது பற்கள் முன் தள்ளிக் காணப்படும். வாயில் துர்நாற்றம், பேசும் போது உமிழ்நீர் சிந்தும் தன்மை ஏற்படும். எனவே மூக்கால் சுவாசிக்க தகுந்த பயிற்சி முறை உண்டு. அதாவது தங்களின் கையால் மூக்கின் துவாரம் ஒன்றை அமர்த்திக் கொண்டு மற்றத்துவாரத்தின் வழியால் காற்றை உள் இழுத்துவிட வேண்டும். இப்படி மாறிமாறி இரு துவாரங்கள் மூலம் சுவாசம் நிகழும்படி 5 - 10 நிமிடங்கள் செய்து வந்தால் நற்பயன் கிடைக்கும்.

மேலும் மூக்கினது நுனிப்பகுதியைப் பிடித்து மேல் நோக்கி மூச்சை சாதாரணமாக இழுத்துவர உள் பகுதிக்கு சென்ற காற்று மூக்குப் பக்ககாற்று அறைக்குச் சென்று மேலும் கண்களைச் சுற்றியுள்ள இடத்திற்கு சென்று எமக்குப் நிலை ஏற்படும். எதற்கும் பயிற்சி முறை சாலச் சிறந்தது. இப்படிப்பட்ட நிலையுள்ளவர்களை தங்கள் வைத்தியர் பார்வையிடும்போது தகுந்த பல முறை களை மேலும் கூறிக்கொள்வர்.

மேலும் சிலரைக் கவனிக்கும்போது வாய்ப் பகுதியை நன்கு மூடிக்கொள்ள முடியாதவர் களாக இருக்கின்றார்கள். வாயை மூடாமல் இருந்தாலும் திறக்கச் சொன்னால் நன்கு திறப்பார்கள். ஆனால் நன்கு மூட மாட்டார்கள். இந்நிலை ஏன்? அதாவது வாயின் கீழ்தாடையின் மூட்டு எலும்பு விலகி இருக்கலாம். உரியவர் கொட்டாவி விடும் போது வாய்ப்பகுதியை அளவிற்கு மிஞ்சி திறந்து விடுவதினால் ஏற்படலாம் எனவும் அறிய முடிகின்றது. எனவே எதற்கும் அவசரப்படாமல் ஆறுதலாக உறுப்பைக் கவனித்து செயல்பட வேண்டும். மேலும் பொருட்களை ஒருவர் கடிக்கும் போது தனது வாயை அளவிற்கு மிஞ்சி திறந்து கடிக்க முற்படக்கூடாது. அதனால் தீங்கு ஏற்படும்.

இதனால் கீழ்த்தாடை எலும்பு (மூட்டு) தானாக விலகிச்செல்ல காரணமாக அமைகின்றது. வாய்ப்பகுதி மூடித்திறக்க இயல்புநிலையை செய்யமுடியாமல் போய் விடும். இந்நிலையில் தசைப்பகுதிகளும் இறுக்க நிலையடைய ஏதுவாக அமைந்து விடும். எனவே எதற்கும் அவதானம் முக்கியம். செய்யும் முறை ஆறுதலாக இருக்க வேண்டும்.

இந்நிலைகள் ஏற்படும்போது கீழ்த்தாடை முன்தள்ளப்பட்டு பின்னர் கீழ்த்தாடையின் மூட்டு எலும்பு தவறான இடத்தில் நிரந்தரமாக அமைந்து விடும் என்பதை புரிந்து கொள்ளவும். எலும்பு மூட்டுப்பிசகு ஏற்படாது அவதானமாக நடந்து கொள்ள வேண்டியது எம்மைப் பொறுத்ததாகும். இந்நிலை மற்றோரால் ஏற்படாது என்பதை அறிய முடிகின்றது.

மேலும் சில விபத்துகளினாலும் இந்நிலை வருவதற்கு இடம் உண்டு. நாம் பேருந்துகளில் செல்லும்போது இருக்கை யில் அவதானமின்றி இருந்தால் முகத்தின் கீழ்தாடை எலும்பு அடிபடும். அத்துடன் நாடிப்பகுதியின் எலும்பு பின்னோக்கிச் சென்று காதிலும் வேதனை ஏற்படும். அத்துடன் குருதிப் பெருக்கும் நிகழலாம். இந்நிலையில் மூட்டுக்கள் அசாதாரண நிலையிலிருந்து முறையாக தனது வேலையைச் செய்யமுடியாமல் போய் விடும். எனவே பேருந்துக்களில் செல்லும் போது இருக்கையில் அவதானம் தேவை. முதியோர் மிக அவதானமாக இருப்பது நன்று. ஆண்களிலும் பார்க்க பெண்களுக்கு இந்நிலையில் அவதானம் வேண்டும்.



குழந்தைகளுக்கு இப்படிப்பட்ட (மூட்டு விலகுதல்) நிலை ஏற்படுவதில்லை. காரணம் குழந்தைகளுக்கு மூட்டு எலும்பின் உள்ளே இருக்கும் மூட்டுத்தடுப்பு (Articular Eminence) 16 வயதிற்கு முன் முழுமையாக வளர்வதில்லை எனவும் அறிய முடிகின்றது. மூட்டுப் பிசகுதல் (விலகுதல்) ஏற்பட்டால் காதின் முன்பக்கம் அதிகவலி தன்மை இருக்கும். வாய் திறந்தபடி வாயின் ஓரத்தால் எச்சில் வந்த வண்ணம் இருக்கும். இந்நிலை ஏற்படின் நமது கைகள் அதில் படாமல் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்வது மிக நன்மை பயக்கும்.

அடுத்து நமது தோள்பட்டை பகுதியை பார்ப்போம். நேரடியாக தோள்பட்டை மூட்டில் நோய் ஏற்படுவது அல்லது அங்குள்ள நரம்பு தசை மூட்டில் நோய் ஏற்படுவது அல்லது மற்ற இடங்களில் நோய் ஏற்பட்டு அதன் மூலம் வரலாம். அல்லது அடிகாயத்தினால் நோ வரலாம். நமது உடம்பின் மற்ற இடங்களில் நோய் ஏற்பட்டு வரலாம். உ+ம் இருதய நோய், கல்லீரல் நோய், வயிற்றில் ஏற்படும் வலி, உதரவிதானத்தில் ஏற்படும் நோய் போன்றவற்றினாலும் தோள்பகுதியிலும் நோ, வலி ஏற்படலாம். இவற்றின் நிலையைப் பார்ப்போம். தோள்ப்பகுதி இடப் பக்கம் நோ, வலியாக தென்பட்டால் அது இருதய சம்மந்தமான நோய் காரணமாக ஏற்படும். வலது தோளில் இந்நிலை ஏற்பட்டால் கல்லீரலில் ஏற்பட்ட நோயினால் நிகழ்வதாக கருதலாம். இவற்றுக்கு மாறாக தோளை அசைக்கும்போது ஏற்பட்டால் அது தோளில் ஏற்பட்ட நோயினால் வந்துள்ளது எனத் தீர்மானிக்கலாம். இந்நிலையில் அதில் வீக்கம் காணப்படும். அதனைச் சுற்றியுள்ள தசைகள் தேய்வுடன் சிறிதாகக் காணப்படும்.

உதரவிதானத்தில் நோய் ஏற்பட்டால் தோள்பட்டையில் வலிக்கும் தன்மை இருக்காது. தோள்பட்டையின் கீழ்ப் பகுதியான முதுகுப் பகுதியில் வலி தன்மையை உணரமுடியும். இந்நிலைகள் ஏற்படும்போது தங்கள் வைத்தியர்களிடம் தாமதிக்காமல் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்வது மிக நன்மை பயக்கும். அவர்கள் தகுந்த கருவிகளைக் கொண்டு ஆய்வு செய்து கொள்வார்கள்.

மேலும் மூட்டுக்களில் வலி ஏற்படுவதற்கு பல காரணங்கள் உண்டு. பொதுவாக நோய்களைப் பொறுத்தமட்டில் கீல்வாதம் (Rheumatic), மூட்டுவீக்கம் (Arthritis), மூட்டுப்பகுதி அடிகாயங்கள், மூட்டு அழற்சி இவற்றால் மூட்டுக்கள் தன் திறனை இழக்கலாம். பெரும்பாலும் பந்தடி வீரர்களுக்கு இந்நிலை ஏற்பட இடம் உண்டு. இவர்களுக்கு கழுத்து, கால்மூட்டு போன்ற இடங்களில் வலித்தன்மை தென்பட இடம் உண்டு.

மேலும் ஒருவர் அளவுக்கு மிஞ்சிய உடல்நிலை காணப்பட்டால் அவர் நடக்கும் போது பார அதிர்வினால் முதுகுவலி, முழங்கால் மூட்டுவலி, இடுப்புவலி ஏற்பட இடம் அளிக்கும். இவர்கள் தங்கள் உடம்பை எடை கொண்டு கவனித்து சிகிச்சையும் பயிற்சியும் செய்துகொள்ள வேண்டும்.

மாடி வீடுகளில் வாழ்வோர் பெரும்பாலும் முதியவர்கள் பாரமான பொருட்களை தூக்கிச் செல்வதை தவிர்க்க வேண்டும். இவர்களுக்கு மூட்டுக்களில் வலி, தவறி விழும் நிலை கூட நிகழலாம். மெதுவாக நின்று நின்று தங்கள் அடிகளை எடுத்து வைக்க வேண்டும். எதற்கும் அவசரப்படத் தேவையில்லை. நாம் நிமிர்ந்து பூமியில் செல்லும்போது பூமியின் ஈர்ப்புத் தன்மையை புரிந்து கொள்ளவேண்டும். ஈர்புத்தன்மையை எதிர்கொண்டு எமது அங்க அசைவை செய்து கொள்ள வேண்டும்.

நமது மூட்டுக்கள் உள்ள இடத்தில் ஒருவித வழுவழுப்பான திரவம் உண்டு என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இளமையில் அந்த சுரப்பு திரவம் வரட்சியடையாது. ஆனால் வயது செல்லச்செல்ல அத்திரவம் குறைந்த வறட்சி நிலை ஏற்பட்டு நடக்கும்போது மூட்டுக்கள் உரஞ்சப்பட்டு நோ, வலி, வீக்கம் ஏற்படும். அதுமாத்திரமல்ல உடம்பில் உள்ள மூட்டுக்கள் யாவும் வேதனையையும் கொடுக்கலாம். இடுப்பு வலி போன்ற நிலையும் சிலருக்கு ஏற்பட இடம் உண்டு. கை ஊன்றுகோல் (Walking stick) வைத்திருக்க வேண்டும். மலம், சலம் கழிக்கச் செல்லும்போது அதனை கொண்டு செல்லவேண்டும். அல்லது ஒருவரின் உதவியுடன் செல்ல வேண்டும். தவறி விழுந்தால் எந்த வேலை யும் செய்ய முடியாமல் படுக்கையில் கிடக்க வேண்டி வந்துவிடும். இவர்கள் பெரும் அவதானமாக இருக்க நடமாட வேண்டும்.

நமது மூட்டுக்கள் உள்ள இடத்தில் இயற்கையாக வழுவழுப்பான சுரப்புநீர் இருப்பதினால் நாம் நடக்கும்போது அல்லது பொருட்களை தூக்கும் போது கை, கால்களை நன்கு மடக்கி பாவித்தாலும் வேதனை தென்படாது. ஆனால் வயது சென்று கொண்டு போகும்போது வேதனை எமக்குத் தென்படும். எனவே மூட்டுவலி ஏற்படும் போது உரிய இடத்தைப் பயன்படுத்தாமல் இருந்தால் அதனிடையேயுள்ள தசைப் பகுதி வேலையற்று சுருங்கத் தொடங்கும்.

அடுத்து நமது உணவு வகையில் உயிர்ச்சத்து 'D' இல்லாவிட்டால் மூட்டு

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

**LAW OFFICE**

**STEFANO FORTINI**

B.A., LL.B., Barrister & Solicitor

3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4

Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# பாடசாலை நூலகங்கள்

## 1. நூலகங்களின் அவசியம்

பிள்ளைகள் பெறும் கல்வியை நிறைவு படுத்தவும் முழு மனிதர்களாக அவர்கள் வளர்வதற்கேற்ற வழிமுறைகளை வகுக்கவும் பாடசாலைகளில் நூலகங்கள் அவசியமாகின்றன.



பிள்ளைகளின் பாதுகாப்புத் தேவைகளை நிறைவேற்றும் நிலையங்களாகப் பாடசாலை நூலகங்கள் அமைகின்றன. இப்பாதுகாப்புத் தேவைகள் பிரதானமாகப் பொருட் பாதுகாப்பு, உணர்ச்சிப் பாதுகாப்பு, அறிவுப் பாதுகாப்பு, ஆன்மிகப் பாதுகாப்பு என நான்கு வகைப்படும்.

பொருட் பாதுகாப்பை யொட்டித் தாய் தந்தையர் செய்யும் உதவிகள் பற்றிய கதைகள், உணவு, உடை, நகைகள் போன்றவற்றின் விபரங்கள் விரவிவரும் கதைகளைப் பிள்ளைகள் படிக்க விரும்புவர்.

உணர்ச்சிப் பாதுகாப்புத் தேவைகுறித்துப் பாசம், பணிவு, தியாகம் முதலியவற்றோடு கூடிய குடும்பக் கதைகளைப் பிள்ளைகள் நாடுவர்.

அறிவுப் பாதுகாப்புப் பிள்ளைகளிடம் இயல்பாகவே அமைந்துள்ள ஆராய்ந்தறியும் ஊக்கத்துடன் தொடர்புடையது. தமக்கு விருப்பமான ஒரு விடயம் குறித்துச் சரியாகவும் திட்டமாகவும் அறியவேண்டு மென்ற ஆர்வத்தை நூலகங்களே தணிக்க வல்லன. இத்தகைய அறிவுப் பாதுகாப்பை யொட்டிப் பயிர்கள், பறவைகள், விலங்கு கள், விமானங்கள், வானொலி, விண்மீன்கள் முதலியவைபற்றிய உண்மை விபரங்களைக் கொண்ட நூல்களை அவர்கள் படிக்க முனைவர்.

ஆன்மிகப் பாதுகாப்புத் தேவை ஆபத்துக்கள் வரும்போதும், துன்பங்கள் சூழும்போதும், பரீட்சைகளிற் சித்திபெறத் தவறுமிடத்தும், வெறுப்புணர்ச்சி ஓங்கும் போதும் அதிகரிக்கும். அவ்வேளைகளில் சமயசம்பந்தமான நூல்கள் பிள்ளைகளுக்கு ஆறுதலளிக்கும்.

இத்தகைய நூல்களை வழங்கிப் பிள்ளைக ளின் அடிப்படைப் பாதுகாப்புத் தேவை களை நிவர்த்தி செய்வதற்குப் பாடசாலை நூலகங்கள் அவசியமாகின்றன.

பாடப்புத்தகப் பொருள்களை விளங்கிக் கொள்ள மேலதிக தகவல்கள் அடங்கிய துணைநூல்களை உடன் உதவும் பணியைப் பாடசாலை நூலகங்களே செய்ய வல்லன. அறிவைப் பெருக்குவதோடு மொழித்திறனை வளர்க்கவும் பாடசாலை நூலகங்கள் துணையாகின்றன.

ஐயப்பாடுகளைத் தீர்த்து ஆராய்ச்சி மனப்பான்மையைத் தூண்டி வருங்காலத்து விஞ்ஞானிகளையும் கலாவிற்பன்னர்களை யும் அரசியல்வாதிகளையும் சமூகத் தொண்டர்களையும் சிந்தனாவாதிகளையும் உருவாக்க நூலகங்கள் உதவுகின்றன.

எமது நாட்டிற் பல பாடசாலைகளில் நூலக வசதிகள் இல்லை. அத்தகைய பாடசாலைப் பிள்ளைகள் மத்தியில் வாசிக்கும் பழக்கம் ஏற்படுவதில்லை. எனவே வாசிக்கும் பழக்கத்தை வளர்க்கவும் நூலகங்கள் அவசியமாகின்றன.

மாணவருக்கு உடற்சோர்வு உளச்சோர்வு ஏற்படுகின்ற வேளைகளில் ஓய்விளையளித்து உற்சாகமூட்டும் நிலையங்களாக வும் பாடசாலை நூலகங்கள் விளங்குகின்றன.

நூலகங்களில் அமைதியாக இருத்தல், எடுக்கும் நூல்களைப் பேணுதல், அவற்றை உரிய காலத்தில் திருப்பிக் கொடுத்தல் போன்ற நல்ல பழக்கங்களால் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் பொறுப்புணர்வையும் மாணவர் மத்தியில் வளர்ப்பதில் நூலகங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன.

இவற்றோடு மேலதிக அறிவையூட்டிப் பரந்த நோக்கையும் விரிந்த மனப்பான்மையையும் வளர்த்துச் சலசலப்புக்கும் ஆரவாரங்களுக் கும் அப்பாற்பட்ட பக்குவம் பெற்றர்களாக மாணவர்களை உருவாக்கப் பாடசாலை நூலகங்கள் உதவுகின்றன.

- நன்றி: ஈழநாடு வாரமலர், 9.10.77

தொடரும்



கவிஞர் வி. கந்தவனம்

# நோயற்ற வாழ்வே...

எலும்பு நோய் வருவதற்கு ஏதுவாகி விடும். சைவ உணவு உண்போருக்கு உயிர்ச்சத்து 'D' போதியளவு இல்லை. சிறுநீரக நோய் உள்ளோருக்கும், வயிற்றுப்பகுதி அறுவைச் சிகிச்சை செய்தோருக்கும் சூரிய ஒளி அற்ற இடங்களில் வாழும் நபர்களுக்கும் பெரும்பாலும் போதிய உயிர்ச்சத்து 'D' கிடைப்பதில்லை. தங்கள் குடும்ப வைத்தியரிடம் சென்று அதற்குரிய குளிசைகளை பெற்றுக்கொள்ளலாம்.



ஒருவர் நடப்பதற்கு கஸ்டமாக இருந்தால் ஊன்றுகோல் பாவிப்பது உத்தமம். உடைந்த கட்டில், நாற்காலி தவிர்க்கப்படல் வேண்டும். மேலும் வலி இருப்பின் வலி நிவாரண குளிகைகளைத் பாவிக்கலாம். ஆனால் அதிகம் எடுத்துவரின் அதன் மூலம் வேறுவித வியாதிகளும் வருவதற்கு இடம் உண்டு. உ+ம் வயிற்றில் புண்நிலை ஏற்படலாம் எனவும் கூறப்படுகின்றது. வெளி ஒத்தணம் பிடிப்பதினால் தீங்கில்லை. படிவுண்டு. சிலர் பண்டேச் பாவிப்பதும் உண்டு.

தொடரும்


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma
Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea
Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer
Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# அந்நியர்களும் அபூர்வ விமானங்களும் UFO's & Aliens

(சுவாரசியமான அறிவியற் தகவல்களைக் கொண்ட தொடர்)

# அபூர்வ விமானங்களும் அப்போலோ பயணங்களும்

சென்ற தடவை அப்போலோ 11இல் சென்ற ஆம்ஸ்ரோங் சந்திரத் தரையில் தான் கண்ட வேற்றுக்கிரக மனிதர்களின் அபூர்வ விமானம் பற்றிய தகவலைப் பார்த்தோம். ஆம்ஸ்ரோங்கும் அவருடன் சென்ற அல்ரீனும் இன்னமும் சில அபூர்வ விமானங்களைக் கண்டிருக்கிறார்கள். அது பற்றிய விபரத்தை இன்று தெரிந்து கொள்வோம்.

சந்திரனின் தரையில் ஆம்ஸ்ரோங்கும் அல்ரீனும் (Aldrin) தமது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சந்திர நடையின் போது ஆர்வம் மிகுதியிலாலோ என்னவே தமது விண்கலத்தினை விட்டுச் சிறிது தூரமாகவே அப்பாற் சென்றுவிட்டனர். இயல்பாகவே அந்த நேரத்தில் தமது விண்கலத்தினைத் திரும்பிப் பார்த்தவர்கள், திகைப்புடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அங்கே, அவர்களது விண்கலத்தின் அருகே வேறு இரண்டு இனம் தெரியாத விமானங்கள். அதாவது அந்நியர்களின் அபூர்வ விமானங்கள். இவர்களது விண்கலத்தின் இருபுறமும் மிக நெருக்கமாக நின்று கொண்டிருந்தன. வெளியிலே, சந்திரத் தரையில் ஒருவருமே இல்லை. எந்தவொரு உயிரினமும் கூட இல்லை. ஆனால் இவர்களது விண் கலத்தின் இருபுறமுமாக நின்ற அவ்விமானங்கள் இரண்டும் நின்ற தோரணை, இவர்களது விண்கலத்தை ஆராய்வது போன்று இருந்தது. அவ்வபூர்வ, அந்நிய விமானங்களின் உள்ளே யாராவது இருக்கிறார்களா என்று கூடத் தெரிய வில்லை. ஆனால் மிக நெருக்கமாக அவ் இருவிமானங்களும் இவர்களது விண்கலத் தின் அருகில் நின்று கொண்டிருந்தன.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம்
காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இவர்கள் இருவருக்கம் எப்படி இருந்திருக்கும் என்று எண்ணிப்பாருங்கள்! எவ்வளவோ தூரத்திற்கு அப்பால் இருக்கும் அந்நியக் கிரகம். இக்கிரகத்தில் உயிரினங்களே இருக்க முடியாது என்பது இவர்களுக்கு நன்றாகவே தெரியும். அப்படியிருக்க, அவர்களது விண்கலத்தைச் சுற்றி இரண்டு அபூர்வ விமானங்கள் என்றால், சந்திரத் தரையிலே அல்லது வேறு எங்கேயே இவர்களையும் விட இன்னமும் யாரோ இங்கு இருக்க வேண்டும். இப்படியாகத்தான் அவர்களின் சிந்தனை ஓடியது. இச்சிந்தனையின் விளைவு? நன்றாகப் பயந்து விட்டார்கள்.

தனிமையான நிலை. துணைக்கு யாருமே இல்லை. பூமியின் கட்டுப்பாட்டு நிலையத்து டன் அவர்கள் தொடர்பு கொண்டு தங்களது நிலையினை அறிவித்தார்கள். அறிவித்த வார்த்தைகளில் அவர்கள் கொண்டிருந்த திகில் தெரிந்தது. ஏது செய்வதென்று அறியாத நிலையில் இருந்தவர்கள், புவியிலே கட்டுப்பாட்டு அறையில் இருந்த வர்களுக்கோ, அல்லது விபரங்களை அவதானித்துக் கொண்டு இருந்தவர் களுக்கோ என்ன செய்வதென்று புரிய வில்லை. ஏதோ அசட்டுத் துணிச்சலுடன் உடனேயே தமது விண்கலத்தினை நோக்கி திரும்பினார்கள். புவியில் இருந்து கூட இந்த அறிவுறுத்தல் சென்றிருக்காலம். இவர்கள் இருவரும் விண்கலத்தினை நோக்கித் திரும்புதைக் கண்ட அவ்விரு விமானங்களும் மேலெழுந்து பறந்து அவ்விடத்தினை விட்டு அகன்றுவிட்டன. வானிற் சென்று மறைந்து விடவில்லை. மாறாக சந்திரத் தரைக்கு மேலாக, இவர்களைக் கடந்து சென்றன. வெண்ணிற மான அப்பறக்கும் பொருட்கள் அவர்களைக் கடந்து செல்வதை மிகவும் பரபரப்புச் சேர்ந்த திகிலுடன் பார்த்துக் கொண்டே தங்களது விண்கலத்திற்குத் திரும்பினார்கள்.



இவர்களது விண்கலத்தைச் சோதனை செய்து பார்த்த போது எல்லாமே இயல்பாகக் காணப்பட்டன. கோளாறுகள் ஏதுவும் இல்லை. ஆம்ஸ்ரோங்கும் அல்ரீனும் மடம்டுமல்ல, பின் நாட்களில் அப்போலோ 15இல் பயணம் செய்த விண்வெளி வீரர்களும் கூட இந்த வெண்ணிற பறக்கும் பொருட்களைப் பார்த்திருக்கிறார்கள், புவியில் இருந்த கட்டுப்பாட்டு அதிகாரி களுக்கு தமது செய்திகளிற் குறிப்பிட்டும் இருந்தார்கள்.

இந்த விபரங்களை எல்லாம் நாசாவினர் நன்கு, கவனமாகக் கையாண்டார்கள். அதிகாரிகளிகள் பொது மக்களுக்கோ அல்லது வேறு ஆய்வாளர்களுக்கோ தெரி யாமல் இவ்விடயங்களை மறைத்து விட்டார்கள். மேலும் இவை பற்றிய எந்த விபரமும் அந்த விண்வெளி வீரர்களிடம் இருந்து வெளிவராத வண்ணமும் ஆக்கப்பட்டு விட்டது. சந்திரனுக்கு அனுப்பப்பட்ட விண்வெளி வீரர்கள் இராணுவத்தைச் சார்ந்தவர்களாகவோ அல்லது 'நல்ல இராணுவ வீரர்களாகவோ' தான் இருந்தார்கள். (ஒருவர் மட்டுமே இராணுவத் தொடர்பு இல்லாவர் எனக் கூறுகின்றார்கள்.) எனவே நாசா அதிகாரிகளுக்கு இவ்விடயம் தொடர்பாக அவர்களைக் கையாளுவதில் எந்தவொரு பிரச்சனையும் இருக்கவில்லை என்றேதான் கூறவேண்டும். நாசா அதிகாரிகளைத் தவிர வேறு எவர்களுடனும் இந்த விண்வெளி வீரர்கள் சந்திரனில் தாம் கண்ட பறக்கும் தட்டுகளைப் பற்றியோ அல்லது வித்தியாச மான எதுவும் பற்றியோ கதைத்ததாகவோ அல்லது கூறியதாகவோ எதுவித தகவல்களும் இல்லை. ஆனாலும் சில பெயர் குறிப்பிட விரும்பாத நாசாவின் முன்னாள் அதிகாரிகள், சந்திரனுக்குச் சென்று திரும்பிய விண்வெளி வீரர்கள் தங்களுடன் உரையாடியவற்றினை வெளிமக்களுக்கும் ஏதோ ஒரு வழியில் கூறியிருக்கின்றார்கள்.

இப்விபரங்களை, அந்நியர்களைப் பற்றியும் அவர்களின் அபூர்வ விமானங்கள் பற்றியும் அதிக அக்கறையுடன் தீவிரமாக ஆய்ந்து கொண்டு இருக்கும் ஆய்வாளர்கள் எனப்படும் யூஎவ்ஓலேயிஸ்ருக்களுக்குத் தெரிய வந்ததின் பின்னர்தான் பொது மக்கள் அறியக் கூடியதாக இருந்தது. அது கூட விரல் விட்டு எண்ணக் கூடிய அளவி லான ஒரு சிலருக்கே போய் சேர்ந்தது எனலாம். ஏனெனில் ஏலியன்கள் பற்றியும், அவர்களது அபூர்வமான விமானங்கள் பற்றியும் தொடர்ச்சியாக அறிந்து கொள்பவர்கள் மிகச் சிலரே. அதனால் யூஎவ்ஓலோயிஸ்ருக்களின் வெளியீடுகள் கூட அதிக அளவில் மக்களிடம் போய்ச் சேரவில்லை. அதனால் இன்னமும் இவ்விபரங்கள் இரகசியமானவை போலத் தான் இருக்கின்றன.

அப்போலோ 11இன் சந்திரத் தரையில் இறங்கிய விண்கலத்தைச் சுற்றி, ஏலியன் களின் விமானங்கள் ஆய்ந்து கொண்டு நின்ற என்ற செய்தியைக் கேட்டு ஆய்வாளர்கள் பெரிதாக ஆச்சரியப்பட வில்லை. அவர்களைப் பொறுத்த வரையில் அப்போலோ விண்கலத்தின் தொழி நுட்பமே ஏலியன்கள் கொடுத்ததுதான் என்பதாகிறது. அதனால்தான் ஏலியன்கள் தங்களது தொழில்நுட்ப உதவியுடன் சந்திரத் தரைக்கு வந்த விண்கலத்தின் தொழில நுட்பத்தை அக்கறையாகக் கவனித்துள்ளார் கள் எனக் கூறுகின்றார்கள். றொஸ்வெல் விவகாரத்தினதும் ஏரியா 51இன் மர்மத்தி னது தொடர்ச்சியாகவே, ஆம்ஸ்ரோங்கும் அல்ரீனும் சந்திரனிற் கண்ட அபூர்வ விமானங்களை அவர்கள் பார்கிறார்கள். அதுசரி? நீங்கள் எவ்வகையில் இதைப் பார்க்கிறீர்கள் என்பதையும் உங்கள் கருத்தாக விளம்பரத்திற்கு அனுப்பி வையுங்கள். எனக்கும் ஆரோக்கியமாக இருக்கும்.

அப்போலோ 11இன் சந்திரப் பயணத்தின் பின்னராக, அடுத்தும் சில அப்போலோ பயணங்களின் பின்பு விண்வெளி வீரர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நாசாவில் நடைபெற்றது. இதனைக் கருத்துப் பரிமாற்றப் பட்டறை எனக் கூறலாம். மிகவும் முக்கியமான நபர்களே அக்கருத்துப் பட்டறையில் பங்கு பற்றி இருந்தார்கள். அக்கலந்துரையாடலின் போது விண்வெளி வீரர்கள் கூறிய கருத்துக்கள் ஒன்றுமே நாசாவினரால் வெளியில் கூறப்படவில்லை. அவர்கள் எல்லோருமே தமது பயணங்களின்போது தங்களுக்கு ஏற்பட்ட பறக்கும் தட்டுகள் பற்றிய அனுபவங்களை கூறியிருந்திருக் கிறார்கள். ஆனால் அவையொன்றும் வெளியிற் கசியவ- ில்லை. குறிப்பாக ஆம்ஸ்ரோங் தெரிவித்த பல விடயங்களை நாசா தன்னுள்ளேயே அமுக்கிக் கொண்டு விட்டதெனத் தன்னை அடையாளம் காட்ட விரும்பாத பேராசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

அக்கருத்துப் பட்டறையிற் கூட விண்வெளி வீரர்கள்

தொடர்ச்சி 35ஆம் பக்கம்

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



NATYA RHYTHAALAYAM
SCHOOL OF BHARATHA NATYAM

* 13 வருட கற்பித்தல் அனுபவம் உடையவரால் நடன வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.
MRS. Kamalini Jeyachandran, B.A
(Kalaimaani, Bharathakalavidhagar)
Call: 905.554.2327
Location: 9th Line & 14th Ave. / Stouffville / Tapscott & Mcnicoll
மற்றும் இங்கே சங்கீத வகுப்புகளும் நடைபெறுகின்றன.

# ரொறொன்ரோ சர்வதேச திரைப்பட விழா – T I F F –

## "LAMB"

ரொறொன்ரோ சர்வதேச திரைப்பட விழா கடந்த புரட்டாதி மாதம் (September) இருபதாம் திகதியளவில் இனிதே நடை-பெற்று நிறைவேறியது. இந்நிகழ்வில் பலவித திறமையான படங்கள் திரை யிடப்பட்டன. ரொறொன்ரோப் பல்கலைக் கழக வளாகத்தையண்டிய 'Isabel Bader Theatre' இல் எத்தியோப்பிய நாட்டின் "LAMB' திரைப்படத்தைப் பார்த்து மிகவும் பிரமிப்படைந்தேன். அக்காணொளி 'மிகமிக' சிறந்த ஆவணமாகக் காணப்பட்டது. ஏறத்தாழ ஆயிரம் இருக்கைகள்கொண்ட அரங்கு அன்று நிறைந்திருந்தது.

முதலாவதாக எத்தியோப்பியா நாட்டின் அமைவிடத்தைக் கூறவேண்டும். எத்தியோப் பியா ஆபிரிக்கக் கண்டத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள ஒரு நாடு. இந்நாட்டின் வட எல்லை செங்கடல், கிழக்கு எல்லை சோமாலியா நாடு, தெற்கு எல்லை கென்யா நாடு, மேற்கு எல்லை சூடான் நாடு என்பனவாகும்.

'செம்மறி ஆட்டுக்குட்டி' திரைப்படம் சோமாலிய நாட்டின் மலைச்சாரல் கிராமங் களை, கதைக்களமாகக்கொண்டு நகர்த்தப் படுகிறது. இக்கட்டுரையில் கதையும், சில சிறப்பு மேம்பாடுகளும் சுருக்கமாக இடம்பெறுகின்றன.

தாய் தந்தையுடன் ஏறத்தாழ பத்து வயதளவிலுள்ள ஒரு சிறுவனும் உள்ள சிறியதொரு குடும்பம். அவர்களும் அந்த விவசாயக் கிராமத்தில் வாழ்ந்து வருகின்ற னர். செம்மறி ஆட்டுக்குட்டி ஒன்றையும் அந்தச்சிறுவன் பாசத்தோடு வளர்த்து வருகிறான். மரத்தால் அமைக்கப்பட்ட 'குடில்' போன்ற வடிவில் மக்களின் குடியிருப்புகள் காணப்படுகின்றன. அந்த ஊர் கொடிய வரட்சியால் பாதிக்கப் படுகிறது. பயிர்கள் எல்லாம் காய்ந்து வாடிக் கருகுகின்றன. பஞ்சம் சூழ்ந்த நிலையில் அந்தக் குடும்பத் தலைவியும் இறந்து விடுகிறாள். தந்தையும் மகனும் செம்மறி ஆட்டுக்குட்டியும் துன்பத்தில் வாடுகின்றனர். ஊரில் எதுவித பிழைப்பும் இல்லை.

இந்நிலையில் அத்தந்தை, தான் நகரத்துக்குச் சென்று ஏதாவது உழைக்க வேண்டுமென்று முடிவெடுக்கிறான். வாழ்ந்த ஊரைப்பிரிந்து பேரூந்தில் ஏறி தூரத்திலுள்ள தமது உறவினர் வீட்டை தந்தையும் மகனும் செம்மறி ஆட்டுக்குட்டியுடன் சென்றடைகின்றனர். அங்கே சிறிது நேரம் சாவீட்டுத் துக்கம் அழுகை நிகழ்கின்றது. பின்பு குடும்பத்தினர் ஒருவரை ஒருவர் தமக்குள் தேற்றிக்கொள்கின்றனர். ஓரிரு நாட்கள் கழிகின்றன. அந்த உறவினர் வீட்டில் தன் மகனையும் மகனின் செம்மறி ஆட்டுக்குட்டியையும் ஒப்படைத்துவிட்டு, தந்தை பிழைப்புத்தேடி நகரம் நோக்கிச் செல்கிறார்.



நாட்கள் நகர்கின்றன. உறவினர் வீடாக இருப்பினும் அங்குள்ள வாழ்க்கைச் சூழலில் அச்சிறுவனுக்கு சாதக பாதகமாக நடைமுறைகள் நிகழ்கின்றன. அந்த வீட்டுத்தலைவனின் மகளான இளஞ்சிறுமி ஒருத்தி கல்வியிலும் கல்வி சம்பந்தமான தேடலிலும் மிகுந்த நாட்டமுள்ளவள். அவளது கல்வி விளிப்பு அவ்வீட்டில் ஒடுக்கப்படுகிறது. "உனது இலக்கு இனி கலியாணம்தான்" என்ற நடைமுறை வழக்கம் பேச்சில் கலக்கிறது. அச்சிறுமியின் கல்விக்கான திட்டமிடலுக்கு செம்மறி ஆட்டுக்குட்டிச் சிறுவனும் ஒத்து உழைக்கிறான். அந்த இளஞ்சிறுமி உயர்கல்வி கற்பதற்காக, தனது தாய் தந்தை உறவுகளுக்குத் தெரியாவண்ணம் ஒருவரது உதவியுடன் லொறி ஒன்றினுள் மறைந்திருந்து 'அடிஸ்அபாபா' தலைநகர் நோக்கிப் பயணப்பட்டுவிட்டாள்.

சிறுவனுக்கும் அவனது செம்மறி ஆட்டுக்குட்டிக்கும் எல்லா வழிகளிலும் உறுதுணையாக இருந்த அந்த இளஞ் சிறுமியையும் அடிஸ்அபாபா செல்லும் பயண நடுவழியில் அவன் இழந்து விடுகிறான். அதன்பின்னர் செம்மறி ஆட்டுக் குட்டிகளை மேய்த்து வளர்க்கும் ஒரு சிறுமியிடம் தனது செம்மறி ஆட்டுக் குட்டியையும் வளர்க்குமாறு ஒப்படைக்கிறான்.

சில மாதங்களின்பின்பு அச்சிறுவன் திரும்பிவந்து தனது செம்மறி ஆட்டுக்குட்டியைத் தரும்படி சிறுமியிடம் கேட்கிறான். சிறுமியும் ஒப்புக்கொள்கிறாள். ஆனால் இனம் இனத்துடன்தான் சேரும் என்பது தெளிவாகிறது. சில வருடங்களாக எவ்வளவோ துன்பச்சூழலிலும் தன்னைப் பாசமுடன் வளர்த்துப் பராமரித்த அச்சிறுவனிடமிருந்து விலகி தனது இனமாகிய செம்மறி ஆட்டுக்குட்டிகளுடனும், குறுகிய காலம் புதிதாகப் பராமரித்த அந்தச் சிறுமியுடனும் 'கதாபாத்திரமாகிய' செம்மறி ஆட்டுக்குட்டி சேர்ந்துவாழச் சென்றுவிடுகிறது. இந்தத் தொண்ணூறு நிமிடப் படத்தில் எவ்வளவோ விடயங்கள், எத்தியோப்பிய வாழ்க்கை முறைகள், பண்பாட்டுக் கூறுகள் மிகவும் 'யதார்த்தமாகவும்' சுவையாகவும் காண்பிக்கப்படுகின்றன.

முடிவில் முக்கிய கதாநாயகனாகிய அச்சிறுவனுக்கு 'பெற்ற தாய்' இல்லை. உறுதுணையாக இருந்த 'தந்தை' இல்லை. ஆதரவு கொடுக்க முன்வந்த உறவுகள் இல்லை. பாசமுடன் வளர்த்த செம்மறி ஆட்டுக்குட்டியும் இல்லை. ஒரு மேட்டு நிலத்தில் அச்சிறுவன் தனித்த நிலையில் நிற்பது, காட்டப்படுகிறது.

உலகில் எங்கென்றாலும் 'பெற்றதாய்' என்பவர் முக்கியம். "தாய்மார்தான் சமூகத்தின் அத்திவாரம்" என்று சொல்லப் படும் கூற்றும் உண்டு. தாயை தனது சிறிய வயதில் இழந்துவிட்டால் அந்த மனிதம் பலவழிகளிலும் பாதிக்கப்படும் என்ற 'யதார்த்தம்' அடிக்கருவாக இந்தத் திரைப் படத்தில் அமைந்துள்ளது. எத்தியோப்பிய நாட்டின் உண்மைத்தன்மைகள் சிலவற்றை உலக அரங்கில் கொண்டு வந்தமைக்கு 'LAMB' திரைப்பட ஆக்கக் குழுவினர் பாராட்டுக்குரியவர்கள்.



முத்துராஜா






# குதிக்கால் வலியும் சில நிவாரணிகளும்

*Heal pain*

எமது உடலின் பாதிச்சுமையை முழங்கால்கள் தாங்குவது போன்று எல்லா உடற்பாரத்தையும் சேர்த்து சுமப்பது பாதங்களாகும். எமது பாதத்தில் குதிக்கால் மிகவும் முக்கியமான பகுதியாகும். தசைப்பிடிப்புடன் கூடிய இப்பகுதி வலிமையுடையதாக இருந்தால் மட்டுமே எம்மால் எதனையும் செய்ய முடியும். தாயகத்தில் உள்ளவர்கள் வெறும் கால்களுடன் திரிவதால் தகரம் வெட்டுதல், கறள் ஆணி ஏறுதல், கல்லு குத்துதல் போன்றவற்றால் பாதிப்புற்று ஏற்புவலி ஏற்பட்டு பலர் இறக்கின்றனர்.

குதிக்கால் (Heal) என்ற ஆங்கில சொல்லில் வலி வாக்கியங்களை வித்தியாசமாக நூல்களில் பாவிக்கின்றனர். இயல்பான நடை 'Heal and toe', குட்டிக்கரணம் அடித்தல் 'Head over heel, heals over head' எனவும் தப்பியோடுவதனை 'Take one heel' எனவும் தொடர்புமொழிகளாக பாவிப்பர். எழுத்தாளர்களே இவ்வகை தொடர்புகளை பாவிப்பர். அந்த அளவுக்கு எமது உடலில் குதிக்கால் முக்கியமாகும்.


பொதுவாக குதிக்கால்வலி பாதத்தின் அடிப்பகுதியையும் குதியின் உள் வெளிப்பகுதியையும் சேர்த்து அமைவ தாகும். இதனை உள்ளங்காலுக்குரிய அமைப்பு (plantar fasciitis) எனலாம். குதிக்கால் பகுதியும், குதிக்கால் எலும்பும் குதிக்கால் தசைநார் (Achilles tendon) உடன் இணைகிறது. குதிக்கால் வலியை சாதாரணமானதொன்று ஒதுக்கிவிட முடியாது. வெறும் பாதம் போல் தெரிந்தாலும் அதற்குள் பல்வேறு சிக்கலான அமைப்புகள் உள. சரியான பரிசோதனையின்றி வலியுள்ள இடத்தினை கண்டு பிடிப்பது மிக கடினமாகும். பொதுவாக குதிக்காலில் தசைவலி (Achilles tendinitis), குதிக்கால் தசைநார் நெகிழ்வு (Achilles tendon rupture), எலும்புக்கட்டி (Bone tumor), எலும்பு வீக்கம் (Bursitis), உடல் முழுவதற்கான நோவு (Fibromyalgia), குதிக்கால் முள் (Heel spur), நிணவெலும்பு வீக்கம் (Osteomyelitis), நெருடும் நரம்புகள் (Pinched nerves), கீல்வாதம் (Rheumatoid arthritis), அழுத்த முறிவு (Stress fracture) போன்றவை ஏற்படலாம். எமது குதிக்குள் ஏற்படும் பிரச்சினைகள் இவ்வளவு உள்ளவனா என்று வியப்புற நேரிடுகிறது. அதற்கும் மேல் பலவற்றை நாம் அறியாமல் உள்ளோம்.

எந்த ஒரு குதிக்கால் நோவையும், எலும்பு சிகிச்சையையும் சிறப்பு நிபுணர் (Orthopaedic surgeon) பார்ப்பதே நலம். தசை நாண்கள், வீக்கம் உள்ள இடம் பற்றிய பரிசோதனை முதலில் செய்யப்படும். வலியுள்ளவர்கள் நடக்கவும், குனியவும், குதியில் நிற்கவும் கேட்கப்படுவர். அத்துடன் சில நுண்ணிய உணர்வுகள் பற்றியும் அறியப்படும். உட்பகுதியும் வெளிப்பகுதியும் அறியப் படும். பொதுவாக எமது பாதத்தில் 26 எலும்புகளும் 33 மூட்டுகளும், 100 க்கு மேற்பட்ட தசை நாண்களும் உள. அதில் குதி எலும்பு (Calcaneus) மிகவும் பெரியது. நாம் நடக்கும் போது கூடுதலாக பாவிப்பது பாதங்களேயாகும். நமது உடல் நிறையை விட நாம் நடக்கும்போது 1.25 மடங்கு பாரத்தையும், ஓடும்போது 2.75 மடங்கு பாரத்தையும், பாதங்கள் சுமக்கின்றன. எனவே தான் பாதங்கள் உடலில் மிகவும் இன்றியமையாத பகுதியாகும்.



குதிக்கால் வலியானது அதன் கீழ்ப் பகுதியிலும், பின்பகுதியிலும் ஏற்படலாம். சமூகமொன்றில் 3.6 வீதத்தினருக்கு இப்பிரச்சினை ஏற்படுகிறது. இது நாட்டுக்கு நாடு வேறுபடலாம். வயது முதிர்ந்தவர் களில் 7 வீதத்தினர் குதிக்கால் நோவிற்கு உட்படுகின்றனர். இளையோர் விளையாட்டுக்களில் ஈடுபடுவதினால் குதிக்கால் நோவுக்கும் உட்படுகின்றனர். பாத அமைப்புக்கு ஏற்ப பாத அணிகள் இல்லாது விட்டாலும் நோவு ஏற்படலாம். பொதுவாக கீழ் பாதத்தில் நோவு ஏற்பட்டு குதிக்கு பரவுவதே இயல்பாகும். சிலர் பழைய முறைகளில் சிகிச்சை செய்து சில மாதங்களில் மாற்றிவிடுவர். வீடுகளில் ஓய்வு எடுத்தல், ஐஸ் வைத்தல், சரியான பாத அணிகளை அணிவது போன்றவற்றை செய்வர். எனினும் மாறாக வலிகளால் பல பிரச்சினைகள் ஏற்படலாம். குதிக்கால் தசைநார் நெகிழ்வு, எலும்பு காயமுறல், எலும்பில் திரவம் (Cyst) ஏற்படல், யூரிக் அசிட் இரத்தத்தில் கூடுதலாக இருப்பதால் Hyperuricemia எனும் வலியும், மூட்டுக்களில் ஏற்படும் வலி (Gout) யும், அழற்சி (inflammation)யும் பாதங்களில் உள்ள நரம்புகள் வீங்குதல் (Neuroma), எலும்புமச்சையில் தொற்று நோய் ஏற்பட்டு இதனால் ஏற்படும் பாதிப்பு (Peripheral neuropathy), ஓடும்போது தவறான முறைகளை பயன்படுத்துதல் (Problems with giant), உடலில் உள்ள எதிர்ப்புச் சக்திகள் குறைந்து திசுக்கள் பழுதடைவதால் ஏற்படும் மூட்டுவலி (Rheumatoid arthritis) போன்ற பல நோய்களுக்கு உள்ளாக நேரிடும்.


இன்றுள்ள நாகரிக முறைகளால் பலவித மாக குதிக்கால் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக பெண்கள் குதியுயர்ந்த பாதணிகள் (High heels) மற்றும் வேறு வகை பாத அணிகள் அணிபவர்கள் பிற்காலத்தில் குதிவலிக்கு உட்படலாம் என புதிய ஆய்வுகள் கூறுகின்றன. அமெரிக்காவில் நடைபெற்ற ஆய்வுகளில் 64வீதமான முதிய பெண்கள் குதிவலி பற்றி குறிப்பிட்டுள்ளமை வெளி வந்துள்ளது. தமது உயரத்தினை கூட்டிக் காட்டுவதற்காக மிகவும் மோசமான பாத அணிகளை பாவித்து இயல்பான எலும்புகளை வளைவுற செய்துள்ளனர். போஸ்டன் நகரில் 3,300 பேருக்கு 11விதமான பாதஅணிகள் வழங்கப்பட்டு சோதனையிடப்பட்டன. குதி உயர்ந்த பாத அணியுடன் செல்லும்போது, உயிர்ரசாயன அதிர்வு பாதத்தில் ஏற்பட்டு குதியையும் கணுக்காலையும் பாதித்தமை கண்டறியப் பட்டுள்ளது. 'Foot pain is current or past shoe wear a factor' என்பதே இது பற்றிய ஆய்வு நூலாகும். குதிக்கால் வலி பற்றிய விளக்கங்களில் முதலிடம் பெறுவது உள்ளங்காலுக்குரிய அமைப்பு. (Plantar fasciitis) ஆகும். இதனுள் இருக்கும் இழையங்கள் (Ligament) தினசரி பாதிக்கப்படுகின்றன. இந்த இழையங்கள் செயலிழந்தால் பாதமும் குதியும் செயலற்று விடுகிறது. பருத்த சரீரம் (Obese) அல்லது எடை கூடியவர்களுக்கு இப்பிரச்சினை ஏற்படலாம். பெண்கள் கர்ப்ப முறுவதாலும் உடல் எடை கூடலாம். கூடியதூரம் ஓடுபவர்கள், அடிக்கடி பாதத்தை பாவிப்பவர்கள், பழுதாக்குபவர் கள் இதனால் பாதிப்புறுவர். சிலருக்கு பிறப்பிலேயே தட்டையான பாதம் (Flat feet) அல்லது அதிகம் வளைந்த பாதம் (High arches) இருந்தாலும் பிரச்சினை தான். குதிக்கால் தசைநார் (Achilles tendon) பழுதடைதல் கூட இதற்கு காரணமாகலாம். முதலில் பாதம் பாதிக்கப்படும். படிப்படியாக மறுபாதமும் பாதிக்கப்படலாம். சிலருக்கு எரிவது போல் தெரியும். அது குதிக்கும் பரவும். காலையில் எழுந்து முதல் அடி வைக்கும் போது கூடிய நோவு தெரியும். படிகளில் ஏறுவதும் கடினம். சிலருக்கு பாதம் சிவந்து வீக்கமுற்று காணப்படும். இதற்கு அழற்சிக் குறைப்பு மருந்து பாவிக்கப்படும். நோய் எதிர்ப்பு மருந்தும் பாவிக்கப்படும். Motrin, advil, naproxen என்பன பாவிக்கப்படலாம். சிலருக்கு corticosteroid மருந்து ஊசிகள் மூலம் ஏற்றப்படும். சிலருக்கு உடற்சிகிச்சையும் (Physiotherapy) உதவுகிறது. சிலவேளை சத்திரசிகிச்சையும் செய்யப்படலாம்.




அடுத்து குதிக்காலில் ஏற்படும் வலி குதிக்கால் தசைநார் (Achilles tendonitis) மூலம் ஏற்படுவதாகும். மேலதிகமான உடற்பயிற்சியாலும் இவ்வலி ஏற்படலாம். குதித்தல், ஓடுதல் என்பவற்றாலும் அழற்சி ஏற்படும். எனினும் வைத்தியர்களை அணுகுவது அவசியம். நோவு தொடர்ந்தால் தசைநார் கிழிந்து விடலாம். இதற்கும் சத்திரசிகிச்சை செய்ய நேரிடும். ரென்னிஸ் விளையாடுபவர்களுக்கும் இவ்வலி ஏற்படுகிறது. இந்நோய்க்கு நிழலுரு (Xrays), MRI, Ultrasound மூலம் சேதம் அழற்சி, நகர்வு என்பவற்றை அறியலாம்.

குதிக்காலில் முறிவு ஏற்பட்டால் அவசர சிகிச்சை தேவைப்படலாம். விழுதல், விபத்து, விளையாட்டு காயங்களால் குறுக்காக அல்லது நெடுக்காக முறிவு ஏற்படும். இதற்கும் Xray, CTSCAN எடுக்க வேண்டும். திரவசுரப்பியில் அழற்சி Bursae ஏற்படுவதால் திரவம் நிரம்பிவிடும். இதுதசை நார்களின் செயலை சிதைத்து விடும். அத்துடன் கடுமையான கற்களில் மிதிப்பதால் குதிக்கால் காயம் (stone bruise) ஏற்படும். இது படிப்படியாக வளரும் போது இதனை ஆணிக்கூடு என்பர். இதனை வெட்ட வெட்ட வளரும். குதிக்காலின் பின்பகுதியிலும் பாதிப்பு ஏற்படலாம். கூடுதலாக ஓடுதல், பொருத்தமற்ற சப்பாத்து அணிதல் என்பவற்றால் தோல் இறுகி விடுகிறது; சிவந்து வீங்குகிறது. இந்த நிலையில் திறந்த சப்பாத்து (Open back shoes) உதவுகிறது. சப்பாத்துக்குள் இன்னுமொரு தட்டுவைத்தும் பாவிக்கலாம். இதனை Podiatry நிபுணரின் ஆலோசனைகள் மூலம் சரிப்படுத்தலாம். தற்போது Scholl's என்ற பெயரில் பலமுறையான பாதணிகள் சந்தைக்கு வந்துள்ளது. Scholl என்பவர் பாத சிகிச்சை நிபுணராவர். இவரது தயாரிப்புகள் உலகெங்கிலும் விற்பனையாகின்றன. இவர் ஜெல் கொண்ட Massaging Gel மூலம் மென்மையான குசன் கொண்ட பாத அணிகளையும் வேறுவகையான பாத அணிகளையும் கண்டுபிடித்து விற்பனை செய்கிறார்.

உலகில் உள்ள பல நாடுகளிலும் குதிக்கால்வலி பற்றிய ஆய்வுகள் செய்யப்படுவதுடன் புதுப்புது சிகிச்சைகளும் வழங்கப்படுகின்றன. நரம்பியல் வலி, மூட்டு வலி, தொற்றுநோய், மற்றும் சில காரணிகளே இதில் தொடர்பு கொண்டுள. கண்பிடிக்கபட்ட குதிக்கால் வலி பின்வருவனவற்றுள் ஏதாவது ஒன்றாக இருக்கலாம். உள்ளங்கால் அமைப்பு, தசை-நாண்நெகிழ்வு (Calcaneal apophysitis), அழுத்தவலி, முதியோருக்கான கால்வலி, Tarsal tunnel என்னும் நோய், எலும்பு முறிவு, காயம் ஏற்படுதல், நீரிழிவினால் ஏற்படும் வலி, எலும்பில் ஏற்படும் 'Piaget's' என்னும் நோய், Reiters எனும் நோய் திசுக்களின் தொற்று நோய், கட்டிகள் ஏற்படல் போன்று பல்வேறு நோய்கள் வந்து வருத்துகின்றன. சிலர் நோவுடன் சமாளித்துக்கொண்டு நோவினைக் குறைக்கும் பல குளிசைகளை போட்டு காலங்கழிக்கின்றனர். மற்றவர்களிடம் இதனைப் பற்றி விசாரணை செய்வதனை



சிந்தனைப் பூக்கள்
எஸ். பத்மநாதன்

தொடர்ச்சி 42ஆம் பக்கம்

# LAKE VIEW RESIDENTIAL SUBDIVISION




## RESIDENTIAL LAND

- 52 acres land divided into 30 lots.
- Each lot 1 acre to 2 acres.

**Asking $1.6 Million**

- lake view
- Location: Rice Lake Harwood 1 hr. 15min. from Scarborough.

**Raja Mahendran,** P.Eng.
Broker / Owner

**HomeLife/GTA Realty Inc.**Brokerage*

**416.315.9397 / 416.321.6969**

5215 Finch Ave., E., #203, Toronto, ON

*Independently Owned & Operated



நிரு
பிராண்ட்
BRAND
Niru
அன்பான சமையலுக்கு அம்மா
அறுசுவையான சமையலுக்கு நிரு பிராண்ட்
அன்பும் அறுசுவையும் சேர்ந்தால்
ஆரோக்கியம் தானே!
POUDRE DE CURRY
Achcharu
Mixed Vegetable Pickle
Niru
CURRY FLAVOUR
Niru
Coconut Milk
Lait de noix de coco

# வாழ்க்கைப் பயணங்கள் - 2

தொடர்கதை..........

சுகந்தி தன் மீது காட்டிய பாசத்தால் கட்டுண்டு சில நிமிடங்கள் அமலா சிக்கித் தவித்தாள். அவளின் அழகிய விழிகளில் இருந்து சில கண்ணீர்த் துளிகள் மெல்ல விழுந்தன. அவளின் கவலையைப் பார்த்து அனுதாபப்பட அவளுக்கு அருகில் யாரும் இருக்கவில்லை. ஆனால் அப்படி யாரும் அங்கு இருந்திருந்தால் அமலாவின் கண்ணீர்த் துளிகளை ஊற்று எடுக்கவிடாது அந்தக் கவலையைத் தனக்குள்ளே இன்றும் புதைத்திருப்பாள். அதுவே அமலாவின் இயற்கையான இயல்பு. ஏதோ யாரும் இல்லாத சூழ்நிலையில் அழுது தன்னையே ஆற்றுப்படுத்த முனைந்திருக்கிறாள், பாவம் அமலா. ஒருவாறு தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தியவாறு பிரார்த்தனை செய்வ தற்காக அமர்ந்தாள். "கடவுளே! என்னைப் பார்த்து மற்றவர்கள் பரிதாபப்படும்படி என் வாழ்க்கை அமைந்து விட்டதே! நான் என்ன தவறு செய்தேன்" என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள். அவள் சிறு வயது முதல் நிறைந்த ஆன்மீக ஈடுபாடு கொண்டவளாகக் காணப்பட்டாள். கொழும்பில் இருந்தபோது வாரமொரு முறை தாய் தந்தையருடன் கோவிலுக்குச் சென்று வருவாள். வெள்ளவத்தைப் பிள்ளையார் கோவிலுக் கும், பம்பலப்பிட்டி முருகன் கோவிலுக்கும் வாரத்துக்கு ஒரு முறை சென்று வருவாள். மேலும் விசேட காலங்களில் மயூரா பிளேஸ் அம்மன் கோவில், தெகிவளை விஸ்ணு கோவில் போன்ற கோயில்களுக்கும் போவதுண்டு. இதுதவிர தனது சிறுவயதில் தந்தையாரு டன் கொழும்பில் ராமகிருஸ்ண மிசன் சென்று பல ஆன்மீக உரைகளைக் கேட்டிருக்கின்றாள். பின்பு கல்லூரிப் படிப்புச் சுமைகள் அதிகரிக்க அதற்கெல் லாம் நேரம் இல்லாது போய்விட்டது. ஆனால் இவளது தந்தையார் இப்போதும் அங்கு போவதோடு அவர்களின் பொதுச் சேவைக்கும் பங்களிப்புச் செய்வதுண்டு.

அமலாவும் கனடாவுக்கு வந்த பின்பும் ஓரிரு தடவை தனது பங்களிப்பாகச் சிறு தொகை யை தந்தையின் ஊடாக அனுப்பி இராமகிருஸ்ணர் மிசன் மூலம் நடக்கும் அனாதைச் சிறுவர்களுக்கான பணிகளுக்கு உதவியிருந்தாள். அமலா கனடாவுக்கு வந்த பின்பு எப்போதாவது கோவிலுக்குப் போவதுண்டு. தனது பிறந்த நாள், தாய், தந்தையரின் பிறந்த நாள், சித்திரை வருடப்பிறப்பு, தைப்பொங்கல் நாட்களில் எப்படியும் கோவிலுக்குச் செல்வதை மட்டும் தொடர்ந்து பழக்கமாக வைத்திருக்கின்றாள். வீட்டில் தினமும் காலையில் அவசர அவசரமாக சில மணித்துளிகள் கும்பிட்டு விட்டாலும் மாலையில் குறைந்தது 20 நிமிடமாவது ஆறுதலாக இருந்து பிரார்த்தனை செய்வது வழக்கம். இந்தப் பழக்கம் அவளின் மனதுக்குப் பெரும் தைரியத்தைக் கொடுத்தது. இன்றும் தனது பிரார்த்தனையைத் தொடங்கினாள். தனது மனச் சங்கடங்களை இறக்கி வைத்திருப் பதற்கு அவளது வீட்டில் வைக்கப்பட்டிருந்த வாய் பேசாத கடவுள் உருவப் படங்கள் மட்டுமே இருந்தன. சிலவேளைகள் அவள் மனந்திறந்து கடவுள் சந்நிதானத்தில் பேசுவதுண்டு. கண்ணீர் மல்கி அழுவதுண்டு. எதுவும் பேசாது மௌனமாக இருப்பதுண்டு. சிறுவயது முதல் நினைவுபடுத்தி வைத்துள்ள தேவாரங்களைப் பாடுவதுண்டு. அவள் கர்நாடக சங்கீதம் ஓரளவு கற்றிருந் தாள். வயலின் வாசிக்கவும் தெரியும். சாமிப்படத்துக்கு அருகில் அவளது வயலின் இருக்கும். விடுமுறை தினங்களில் எப்போதாவது அதனை எடுத்து வாசிப்ப துண்டு. தனது பிரார்த்தனையை முடித்துக் கொண்டு குசினிக்குள் சென்று தனது இரவு உணவைத் தயார் செய்யத் தொடங்கினாள்.

மாயா காலமாகி 24 வருடங்களுக்குப் பிறகு, பத்திரிகை அலுவலகத்தில் ஓவியராகப் பணியாற்றும் ஆரிக்கு, மாயா பற்றிய விவரங்கள் ஒரு நண்பர் மூலம் தெரிய வருகிறது. மாயா புதைக்கப்பட்ட இடத்தில் 14 கோடி ரூபாய் மதிப்புள்ள வைர மோதிரம் புதைக்கப்பட்டு இருப்பதைத் தெரிந்துகொள்ளும் ஆரியின் நண்பன் மறுநாள் இரவு மாடியில் இருந்து குதித்துத் தற்கொலை செய்துகொள்கிறார்.

நயன்தாரா பேய்ப் படத்தைப் பார்த்தாரா? ஆரி வைர மோதிரத்தை எடுத்தாரா? இந்த இரண்டு கதைகளுக்கும் என்ன தொடர்பு? எனச் செல்கிறது மீதிப்படம்.

கோரமான மேக்கப், ரத்தம் ஒழுக ரணக் கொடூர கொலை போன்ற பேய்ப் படங்கள் கோட்பாடுகளை உடைத்திருக்கிறார்கள். நயன்தாரா மாதிரி ஓர் அழகான பெண்ணாகத்தான் பேய் இருக்குமென்றால் ஏன் பயப்பட வேண்டும். நடிப்பு ராட்சசியாகப் புதிய அவதாரம் எடுத்திருக்கிறார் நயன்தாரா. குழந்தையுடன் கலங்கி நிற்கும்போது நம்மையும் கலங்க வைக்கிறார். 'உங்களுடைய முதல் திருமண நாள் அன்றைக்கு, உங்களுடைய கணவருக்கும் வேறொரு பெண்ணுக்கும் தொடர்பு இருப்பது உங்களுக்குத் தெரிய வருகிறது. அன்றைக்குத்தான் நீங்கள் கர்ப்பம் தரித்திருப்பதும் தெரிய வருகிறது. இப்போது உங்களது ரியாக்ஷன் என்ன?' என்கிற இயக்குநரின் கேள்வியும் அதற்கு நயன்தாரா கொடுக்கும் முகபாவனையும், 'ஹேப்பி ஆன்னிவர்ஸரி' என்று உச்சரிக்கும் தொனியும், பரிதாபத்தையும் பச்சாபத்தையும் உருவாக்குகிறது.

ஆரி, லட்சுமிபிரியா, மைம் கோபி, ரேஷ்மி மேனன், ரோபோ சங்கர் என்று அனைவருமே இயல்பாக நடித்திருக்கிறார்கள். வசனம் இல்லாமல் தனது உடல் மொழியாலேயே சிரிப்பூட்டுகிறார் ரோபோ சங்கர். திடீரென நயன்தாராவை சுட்டுவிட்டுத் தப்பியோடும் போது, ஸ்ட்ரெக்சரில் உள்ள உடலைச் சுட்டுவிட்டு, பிறகு துணியை விலக்கிப் பார்த்து, அது தன் உருவம் எனத் தெரிந்து அதிர்ந்து போகும்போது, கைதட்டலால் அரங்கமும் அதிர்கிறது.

படத்தில் மூன்றில் ஒரு பகுதிக்கு மேல் கறுப்பு வெள்ளை காட்சிகள். ஆனால், அது தெரியாத வண்ணம் இருட்டை வைத்தே மிரட்டியிருக்கிறார் ஒளிப்பதிவாளர். கறுப்பு வெள்ளை காட்சிகளையும் வண்ணக் காட்சிகளையும் இணைக்கும்போது ஆச்சரியப்பட வைக்கிறார். இசையமைப்பாளர், எடிட்டர் போன்ற மற்ற தொழில்நுட்பக் கலைஞர்களும் பிரமாதப்படுத்தியிருக்கிறார்கள்.

இயக்கம்: அஷ்வின் சரவணன். புதுமையான களம் இரண்டு கதையின் காட்சிகளும் மாறிமாறி வருகிறது. ஆனாலும், குழப்பாமல் தெளிவாக இருக்கிறது திரைக்கதை. ஆரிக்கும் நயன்தாராவுக்கும் என்ன உறவு எனத் தெரிய வரும்போது அட என ஆச்சர்யமடைகிறோம். வண்ணமயமாக இருக்க வேண்டிய காட்சிகள் கருப்பு வெள்ளையிலும், சோகமயமான நயன்தாராவின் கஷ்ட வாழ்க்கை சம்பந்தப்பட்ட காட்சிகள் வண்ணத்திலும் இருப்பது முரண் என்றாலும் ரசிக்கும்படியாகத் தந்திருப்பதில் வெற்றிபெறுகிறார். காட்சிகளை ஒன்றுக்கு மேல் ஒன்றாக அடுக்கி, சரியான இடங்களில் சிக்கல்களை வைத்து எதிர்பார்ப்பை உருவாக்கி, இறுதிக் காட்சியில் அனைத்தையும் அவிழ்த்திருப்பதில்... சபாஷ் அஸ்வின்.


**மனமகிழ் திருமண சேவை**

எங்களிடம் கனடா, இலங்கை வாழ் மணமகள், மணமகன் கைவசம் உண்டு. 30 வயது பொறியியலாளராக பணிபரியும் கனடா மணமகன். 45 வயது கொழும்பில் ஆசிரியராகப் பணிபுரியும் மணமகள். சீதனம் தரப்படும். இல்வாழ்க்கை இனிதாய் அமைய எங்களை அழையுங்கள்.
நரேஷ் ஐயர்: **416.666.1855**

**மணமகன் தேவை**

கொழும்பில் அரச துறையில் பணியாற்றும் 1966இல் பிறந்த கத்தோலிக்க மணமகளுக்கு கொழும்பில் அல்லது வெளிநாட்டில் தகுந்த துணையை சகோதரிகள் தேடுகின்றனர்.
**416.726.4186 / 94.77.309.4662**

**ஸ்ரீநிவாஸ் நிலையம்**

இந்து சமய பூஜைகள், வீட்டுப்பூஜைகள் அனைத்தும் சிறந்த முறையில் நடத்திக் கொடுக்கப்படும். மற்றும் சைவ உணவுகளும் catering செய்து கொடுக்கப்படும்.
சர்வன் குருக்கள்: **647.836.0577 / 416.305.8970 / 289.624.1676**

**மணமகள் தேவை**

யாழ்ப்பாணத்தில் 1983 இல் பிறந்து 1985 முதல் கனடாவை வாழ்விடமாகவும், தனியார் தொழிலகத்தில் ஆலோசகராகவும் கடமையாற்றும் இவருக்கு நற்பண்புடைய பெண்ணை குடும்ப உறுப்பினர்கள் தேடுகின்றனர்.
தொடர்புகளுக்கு: **416.402.0545**

**மணமகன் தேவை**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட 1987ஆம் ஆண்டு பிறந்த மணமகளுக்கு கனடாவில் மணமகனை எதிர்பார்க்கின்றோம்.
தொடர்புகளுக்கு: **437.344.0286**

**மணமகள் தேவை**

யாழ்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவில் Citizenship உம் உள்ள 1978ஆம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு கனடாவில் அல்லது ஐரோப்பிய நாடுகளில் மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
தொடர்புகளுக்கு: **647.712.7757**


மேலும் பக்கங்கள் 28, 29, 30, 31


**அன்பார்ந்த உறவுகளே!**

மட்டக்களப்பு செங்கலடியில் இருக்கும் தேவாலயத்தோடு கூடிய கடவுளின் பிள்ளைகள் வாழும் இல்லத்திற்கு உங்களிடம் இருந்து உதவிகள் எதிர்பார்க்கின்றோம். அன்பளிப்புகள், நிதி உதவிகள், பாடசாலை உபகரணங்கள், மடிகணினி மேலும் மற்றைய தேவைகளை பூர்த்திசெய்ய தயவுசெய்து எங்களை அழையுங்கள்
பாஸ்டர் காந்தன் : **01194.77.977.5064**
**01194.65.205.4216**
நவம்: **647.657.0672 / 416.752.0863**

# வேலை வாய்ப்பு

**றொரொன்ரோவில் இயங்கிவரும் பத்திரிகையில் முழுநேரமாக தொழில் புரிவதற்கு தகுந்தவர் தேவைப்படுகின்றது. தமிழ், ஆங்கிலம் தட்டச்சு, Graphic Design தெரிந்தவர், தமிழ், ஆங்கிலம் நன்றாகப் பேசக்கூடியவர் கீழுள்ள email இற்கு தங்களது சுயவிபரப் படிவத்தை (Resume) ஐ அனுப்பி வைக்கலாம். நேர்முக சந்திப்பிற்கு தெரிவு செய்பவர்கள் மட்டுமே அழைக்கப்படுவார்கள் என்பதனையும் தெரியப்படுத்துகின்றோம்.**

***email: Ckamalakaran@hotmail.com***

**புகையிலை, சுருட்டு விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிகத் தரமான புகையிலை, சுருட்டு விற்பனைக்கு உண்டு.

- சிறியது $3
- நடுத்தரம் $4
- பெரியது $5

*வரி கட்டப்பட்டது*



தொடர்புகளுக்கு: **647.629.9095**

உடனடி வாடகைக்கு

**Morningside & Sheppard இல் 4BR & 3WR, Double Garage Detached வீடு,**

மேலும் வீடுகள், கொண்டோக்கள் விற்க, வாங்க,வாடகைக்கு விட, வாடகைக்கு பெற்றுக்கொள்ள அழையுங்கள்

**Jey 416-816-9011**


# இரு சகோதரர்கள்

கிராமத்து நாய் ஒன்றும் நகரத்து நாய் ஒன்றும் சகோதரர்கள். சிறு வயதில் விவசாயிடம் இருந்த இரு நாய்க் குட்டிகளில் ஒன்று ஒரு நகரத்தவரிடம் விற்கப்பட்டது. எனவே அது நகரத்து நாயாக நகரத்தில் ஒரு வீட்டிலும், மற்றது கிராமத்து நாயாக விவசாயின் தோட்டத்திலும் வளர்ந்து வந்தன.

ஒரு நாள் நகரத்து நாய் தன் சகோதரரை சந்திக்க வேண்டும் என்ற நினைப்புடன் கிராமத்திற்கு வந்தது. அந்த நாயை கிராமத்து நாய் வரவேற்றது. நகரத்து நாயின் விருந்திற்கு கிராமத்து நாய் ஓடி அலைந்து திரிந்து, கொஞ்ச மச்சத் துண்டுகளும், பாண் துண்டுகளும், சில பழங்களும் சேகரித்தது.

இதைக் கவனித்த நகரத்து நாயும், 'நீங்கள் இப்படி எல்லாம் வெளியே ஓடித்திரிந்து கஷ்டப்பட்டு வேலை செய்தது போதும். நீங்கள் இந்த மிச்சங்களையா சாப்பிடுங் கிறீங்கள்? நகரத்தில் நல்ல சாப்பாடுகள் எல்லாம் இலவசமாக கிடைக்கின்றன. பேசாமல் என்னுடன் வந்து நகரத்தில் இருந்து பாருங்கள். பின்னர் கிராமத்திற்கு திரும்பி வர உங்களுக்கு மனம் வராது!' என்றது. கிராமத்து நாயும் சற்று யோசித்து விட்டு சரி போய்ப் பார்ப்போம் என நினைத்தது. எனவே இரு நாய்களும் அடுத்த நாள் நகரத்திற்கு சென்றன.

நகரத்திற்கு வந்து சேர்ந்தவுடன், நகரத்து நாய் கிராமத்து நாயிற்கு சாப்பாடு



கொடுத்தது. கிராமத்து நாய் ஒரு நாளும் காணாத உணவெல்லாம் விருந்தில் இருந்தன. 'இதுதான் Pizza, இது Noodles, இது ஒரு வெளிநாட்டு சுவையான பழம். நகரத்து குப்பைத் தொட்டியில் கூட நீங்கள் ஒரு நாளும் காணாத நல்ல சாப்பாடுகள் எல்லாம் இருக்கும்.!' என்றது நகரத்து நாய்.

'ஆகா!' என்றது கிராமத்து நாய். பின்னர் அது நகரத்து நாயிடம், 'உங்களிடம் கேட்க வேண்டும் என நினைத்தேன். உங்கள் கழுத்தில் இருக்கும் பொருள் என்ன? வடிவிற்கு போட்ட ஆபரணமா?' என்று கேட்டது. 'இல்லை, இது ஒரு சங்கிலி. நான் துலைந்து போனால் என் எஜமான் என்னை கண்டுபிடிக்க இது ஒரு வழி. நான் வெளியே நின்றால் இதில் இன்னொரு சங்கிலி கொழுவி கட்டிவிட்டு எஜமான் செல்வார். அதிலிருந்து தப்பித்தான் நான் உங்களை பார்க்க கிராமத்திற்கு வந்தேன்' என்றது நகரத்து நாய்.

'சங்கிலியா?' என அதிசயப்பட்டது கிராமத்து நாய் 'உங்களுக்கு ஓடி விளையாட பெரிய இடம் இல்லை, அதற்கும் மேல் உங்களை சங்கிலியால் கட்டுவார்களா?' என்றது.

'என்ன செய்வது. சிலவேளை நாய்கள் ஓடி காரில் மோதி அடிபடுவார்கள் என அஞ்சி இவ்வாறு செய்வார்கள். இதோ, எஜமான் கதவை திறந்து கொண்டு உள்ளே வருகிறார் போல் இருக்கிறதே. வாருங்கள், உங்களை அறிமுகம் செய்யலாம். சிலவேளை உங்களையும் சேர்த்து அவர் வளர்ப்பார்' என்றது நகரத்து நாய்.

'பரவாயில்லை நகரத்து சாப்பாடு ருசியாக இருந்தாலும் இப்படி ஓடி விளையாட இடம் இல்லாமல் சங்கிலியால் கட்டப்பட்டு கார்களுக்கு அஞ்சி வாழ நான் தயாரில்லை. நான் சுதந்திரமாக எல்லா இடமும் திரிய விரும்புகிறேன்' என கிராமத்து நாய் கூறிவிட்டு திரும்பி கிராமத்திற்கு சென்று விட்டது.

நீதி: 'மண்ணில் இன்பங்களை விரும்பி
சுதந்திரத்தின் மாண்பினை இழப்பாரோ'
- பாரதியார்



**ஞா. ஆரணி**
அகவை 17

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

---



MATH TUTORIAL308

ANSWERS TO TUTORIAL 307

1)A PLAYS =4×5 ,B PLAYS=4×4,C PLAYS=4×3,D PLAYS4×2 E PLAYS =4 TOTAL =60 GAMES

2)Since the x-intercepts are -2,-1 and 1 f(x)=k(x-1)(x+1)(x+2)where k is a constant

b)Since it passes thro. ( 2, -6)

f(x)=k(2-1)(2+1)(2+2) =-6

So 12k= - 6,k=-1/2 so

F(x)= -1/2(x-1)(x+1)(x+2)

3)Cube of dimension xbyxbyx has a volume $V= X^3$ Surface area $=6x^2$

$V^{|} =3X^2 =1/2$ Surface area

4)$Y =x^2-1/x^2+x-2$

=(x-1)(x+1)/(x+2)(x-1)

$=x+1/x+2,x \neq 1$

$dy/dx=(x+2)-(x+1)/(x+2)^2$

$=1/(x+2)^2 =0$ if there is a horizontal tangent .No value of x will give a horizontal tangent

<u>TUTORIAL 308 QUESTIONS</u>

1)The 3 digit number2A4 is added to 326 and gives 5T9 .If 5T9 is divisible by 9, find the value of A+T (FOR GR 6&7)

2)When x+2 is divided intof(x),the remainder is 3.Determine the reminder when it is divided into $[f(x)[^2$

3)Solve for x ,x ∈R

a)|x+4| ≥ 5 (b)|x|=-5

4)IF A 10-N force acting in the direction of the vector( 1, 1), moves an object from P(-2 ,1) to Q (5,6),calculate the work done. The distance is in meters (for gr 12)

5)Six different dice are rolled.What fraction of all the possible outcomes Have at least one repeted value.(gr12)

BY Mr S.F.Xavier(Teacher)
tel6473409490/4167322228

# செல்போன் கொடுத்து உதவியவரிடம் ரூ. 40 ஆயிரம் மோசடி

## திருப்பதியில் தமிழக பக்தருக்கு நேர்ந்த கொடுமை - ப. முரளிதரன்

செல்போனை கொடுத்து உதவியவரை ஏமாற்றியது மட்டுமின்றி அவரது குடும்பத்தி னரையும் ஏமாற்றி ரூ.40 ஆயிரம் மோசடி செய்யப்பட்டுள்ளது. திருப்பதியில் தமிழக பக்தருக்கு நிகழ்ந்த கொடுமை அனைவருக் கும் ஒரு பாடமாக அமைந்துள்ளது.

சென்னையை அடுத்து ஆவடியைச் சேர்ந்தவர் ரமேஷ். இவரது உறவினர் குமார் (பெயர் மாற்றப்பட்டுள்ளது). இவர் பிரம்மோற்சவ நிகழ்ச்சியில் பங்கேற்பதற் காக கடந்த வாரம் திருப்பதிக்குச் சென்றார். திருமலைக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்துவிட்டு வெளியே வந்தார். அப்போது, அவர் அருகில் வந்த நபர் ஒருவர், "எனது பர்ஸ், செல்போன் ஆகியவற்றை மர்ம நபர்கள் திருடிச் சென்றுவிட்டனர். இதனால், பணம் இன்றி தவிக்கிறேன். எனவே, எனது வீட்டுக்குத் தொடர்பு கொண்டு வங்கிக் கணக்கில் பணம் செலுத்துமாறு கூற வேண்டும். எனவே, உங்களது செல்போனை கொடுங்கள். வீட்டுக்கு ஒரே ஒரு போன் செய்துவிட்டு தருகிறேன்" எனக் கேட்டுள்ளார்.

இதைக்கேட்ட குமார் மனிதாபிமான அடிப்படையில் உடனே தன்னுடைய செல்போனை அந்த நபரிடம் கொடுத்தார். அவர் அதில் போன் செய்வது போல நடித்து கண்ணிமைக்கும் நேரத்தில் கூட்டத்தில் மறைந்தார். குமார் உடனே அப்பகுதி முழுவதும் தேடி அலைந்தார். ஆனால், அந்த நபரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இதற்குள் அந்த மர்ம நபர் செல்போனில் பதிவு செய்யப்பட்டிருந்த குமாரின் வீட்டு தொலைபேசி எண்ணுக்கு போன் செய்து அவரது மனைவியிடம் "உங்கள் கணவர் திருமலையில் விபத்தில் சிக்கி பலத்த காயம் அடைந்துள்ளார். அவருக்கு சிகிச்சை அளிக்க கீழ் திருப்பதிக்கு கொண்டு செல்கின்றோம். மருத்துவமனை யில் பணம் கட்ட அவசரமாக ரூ.40 ஆயிரம் தேவைப்படுகிறது. உடனே பணத்தை ஏற்பாடு செய்யுங்கள். நான் மீண்டும் அரைமணி நேரத்தில் தொடர்புகொள்கிறேன்" எனக் கூறியுள்ளார்.

ஓட்டல் கேஷியரிடம்.. பின்னர், அந்த மர்ம நபர் திருமலையில் இருந்து கீழ் திருப்பதிக்குச் சென்றுள்ளார். அங்குள்ள ஒரு ஓட்டலுக்குச் சென்று கேஷியரிடம், "எனது மணிபர்சை மர்ம நபர்கள் திருடிச் சென்றுவிட்டனர். எனவே, நான் வீட்டுக்கு போன் செய்து பணம் அனுப்புமாறு கூறியுள்ளேன். அவர்கள் பணம் அனுப்புவதற்கு வசதியாக உங்கள் வங்கிக் கணக்கு எண்ணை மட்டும் கூறுங்கள். அவர்கள் அக்கணக்கில் பணம் செலுத்தியதும் வங்கி ஏடிஎம் மூலம் அந்த பணத்தை எடுத்துக் கொடுங்கள்" எனக் கூறியுள்ளார்.

இதைக் கேட்டு அந்த ஓட்டல் கேஷியரும் தன்னுடைய வங்கிக் கணக்கை அளித்துள்ளார். அதை வாங்கிய அந்த மர்ம நபர் மீண்டும் குமாரின் வீட்டுக்கு போன் செய்து ரூ.40 ஆயிரத்தை வங்கியில் செலுத்தும்படி கூறி, ஓட்டல் கேஷியரின் வங்கிக் கணக்கை கொடுத்துள்ளார். குமாரின் குடும்பத்தாரும் அந்த வங்கிக் கணக்கில் பணம் செலுத்தினர். பணம் வந்து சேர்ந்ததும் ஓட்டல் கேஷியர் தன்னுடைய ஏடிஎம் கார்டு மூலம் பணத்தை எடுத்து அந்த மர்ம நபரிடம் கொடுத்துள்ளார். பணத்தை வாங்கிக்கொண்ட நபர் அங்கிருந்து தலைமறைவாகிவிட்டார்.

உறவினர்கள் பதற்றம்: இதற்கிடையே, குமார் விபத்தில் சிக்கியதாக கூறியதை நம்பி அவரது உறவினர்கள் அவசர



அவசரமாக புறப்பட்டு திருப்பதிக்குச் சென்றனர். அங்கு மருத்துவமனை மற்றும் காவல் நிலையத்தில் சென்று விசாரித்துள்ளனர். அப்போது, குமார் என்ற பெயரில் யாரும் சிகிச்சைக்காக சேர்க்கப்படவில்லை என தகவல் கிடைத்துள்ளது.

உடனே, திருமலைக்குச் சென்று அங்குள்ள தேவஸ்தான தகவல் அறிவிப்பு மையம் மூலம் குமார் குறித்து அறிவிப்பு செய்தனர். செல்போனை பறிகொடுத்துவிட்டு சுற்றித் திரிந்த குமார் இத்தகவல் கேட்டு தகவல் மையத்துக்கு விரைந்து சென்றார். அங்கு அவரது உறவினர்களைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். மர்ம நபர் போன் மூலம் தொடர்பு கொண்டு ஏமாற்றி பணம் பறித்த தகவல்களை உறவினர்கள் அவரிடம் தெரிவித்தனர். அதைக்கேட்டு குமார் மேலும் அதிர்ச்சி அடைந்தார்.

உடனே, அவர்கள் கீழ் திருப்பதிக்குச் சென்று காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். போலீசார் வழக்குப் பதிவு செய்து வங்கிக் கணக்கை வைத்து அந்த ஓட்டல் கேஷியரை பிடித்து விசாரித்தனர். அப்போதுதான், அவருக்கும் தான் ஒரு மோசடி நபருக்கு உதவி செய்தது தெரிய வந்தது.

இதுகுறித்து, குமாரின் உறவினர் ரமேஷ் 'தி இந்து'விடம் கூறுகையில், "உதவி செய்யப் போய் ரூ.40 ஆயிரம் நஷ்டம் ஏற்பட்டதோடு செல்போனும் பறிபோனது. அத்துடன், உறவினர்கள் அனைவருக்கும் தீவிர மன உளைச்சலை ஏற்படுத்தியது. குமாருக்கு ஏற்பட்ட சம்பவம் அனைவருக்கும் ஒரு பாடமாக அமைந்துள்ளது. எனவே, பிறருக்கு உதவி செய்யும்போதும் கவன-மாக இருக்க வேண்டும்'' எனக் கூறினார்.

**நான் வாசித்தது**

- கௌரி நாதன்

நீங்கள் வாசித்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே. அனுப்புங்கள்

***Vlambaram@sympatio.ca***


யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

**MATH & PHYSICS TUTION**

By a well-qualified and an experienced teacher. For all grades from Gr. 4 to 1st year of university.

Special classes in advanced functions, calculus & vectors and data management. Classes available at Scarborough & Stouffville.

Contact: 647 340 9490/ 416 732 2228



*Uduvil Girls' College Alumni Association, Toronto, Canada*

***Annual Dinner & Dance 2015***

The Annual Dinner and Dance of the Uduvil Girls' College Alumni Association of Toronto, Canada will take place on ***Saturday October10th, 2015 at 6:30 p.m. at: J & J Swagat Banquet Hall, 415 Hood Road,*** Markham, L3R 3W2

Free parking available at the adjoining parking facility.

Tickets are priced at ***$40.00*** (Buffet style vegetarian & non vegetarian meal).

* 416– 316- 9060 or Dharshina Duraisamy, dharshina.duraisamy@gmail.com
* 416– 724- 5461 or Sita Kumareshan, vasantho@rogers.com
* 416-491—0105 or Suganthy Alphonsus,ralphonsus@sympatico.ca
* 416- 449- 2657 or Sarojini Sathiananthan
* 905-965-3939 - Devika Solomons

www.vlambaram.com
www.tamilvanakkam.com

# ஷோபி என்...


## 27ஆம் பக்கத்தொடர்ச்சி

வாம்மா. நேரம் போகுது. வாடி குட்டி என் தங்ககுட்டி என்று சத்தமாகவே கூப்பிட்டாள். சாந்தா அக்காவின் முகம் வெளுத்தது. ரம்யா நான் சொல்வது உண்மை. ரஜித் இன்று வந்திருந்தான். உன்னை சந்தித்து எப்படியும் பேச வேண்டும் என்று காத்திருந்தான். இவள் ஷோபி நீங்கள் மக்டொனல்ட் போகப்போறதாக சொல்லிக்கொண்டு இருந்ததை கேட்டதும் தான் உன் கடைக்கு வந்து உன்னை அழைத்துச் செல்வதாக கூறி ஷோபியுடன் கிளம்பினான். அங்க வரவில்லையோ ரம்யா என்று முடிக்கும் முன்னே சாந்தா அக்கா என்று வீறிட்டாள் ரம்யா. ரஜித் யார். அவனை நம்பி எப்படி ஷோபியை விடுவீங்க. ஷோபி என் உயிர். உங்களை நம்பி நீங்க கவனமாக நான் வரும்வரை பாதுகாப்பாக வைத்திருப்பீர்கள் என்று நம்பியே உங்களிடம் விட்டு வைத்தேன். ஐயோ என் மகள். அவளுக்கு என்ன ஆச்சோ தெரியாதே என்று ஓ என்று அழ ஆரம்பித்தாள் ரம்யா.

சாந்தா அக்காவிற்கு என்ன சொல்வது என்று தெரியாமல் திக்குமுக்காடிப் போனார். ரம்யாவோ இப்ப எங்க என்று போய்த் தேடுவன் என் மகளை. அக்கா, ரஜித்யின் கைத்தொலைபேசிக்கு எடுத்து கேளுங்கோ அவங்க எங்க என்று. எனக்கு முன்பின் தெரியாத ஒருவருடன் எப்படி என் குழந்தையை அனுப்புவீர்கள். உலகத்தில நடக்கிற அக்கிரமங்களை பற்றி கேள்விப்பட்டிருகிறீங்க தானே. ஐயோ என் மகளுக்கு ஏதாவது ஆனால் அடுத்த நிமிடம் நான் உயிரோடு இருக்கவே மாட்டன் என்று கதவை திறந்து கொண்டு வெளியே ஓடினாள் ரம்யா.

அம்மா என்று ஷோபி அப்பொழுதுதான் வந்து நிறுத்திய காரிலிருந்து ஓடி வந்து ரம்யாவை கட்டிக்கொண்டாள். அப்படியே கண்களில் கண்ணீர் மல்க இறுக்க அணைத்து தூக்கினாள் ரம்யா. ஷோபியின் கன்னங்களில் மாறி மாறி முத்த மழை பொழிந்தாள். அவளுக்கு முன் வந்து நின்ற ரஜித்தை அவள் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. ரஜித்தின் கண்களோ ஏக்கத்துடன் இவள் முகத்தில் பதிந்தது.

நான் இந்த சிறுகதையை எழுதியதின் நோக்கமே சமீப காலங்களில் நம் குழந்தைகளுக்கு நடைபெற்ற அக்கிரமங்களை நாம் மீண்டும் மறந்து போய் கொஞ்சம் அஜாக்கிரதையாக இருந்து விடக் கூடாது என்பதற்காகவே. வித்தியா தொடக்கம் மூன்று வயதுக் குழந்தை வரை காமுகரினால் சீரழிக்கப்பட்டு கொலையும் செய்யப்பட்டது எம்மை எல்லாம் ஆழ்ந்த வருத்தத்தில் ஆழ்த்தியது. ஆனால் எல்லா சம்பவங்களையும் போல காலம் கடக்கையில் இப்படிப்பட்ட துயர சம்பவங்கள்கூட லேசாக நம் மனதை விட்டு அகல ஆரம்பிக்கும்.

**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**
**இலவச ஆலோசனை வழங்கப்படும்**

சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் "எம்மை நாம் பாதுகாப்பது எப்படி" என்ற புத்தகம் விற்பனைக்கு உள்ளது.

இலவச ஆலோசனைகளுக்கு: **647.456.9796**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician LG.Ayurvedic Medical Services (SriLanka)


# கவலையிலிருந்து விடுதலை

கவலைப்படுவதற்கு ஒன்றுமே இல்லை என்பது எனக்கு நன்கு விளங்குவதால் இப்போ நான் மிகுந்த நம்பிக்கையுடன் அதன் சக்தியை வெளிப்படுத்தி வாழ்கிறேன்.

ஏன் கவலைப்படுவான்? கவலைப்படுவதால் ஒரு விதமான நன்மையும் நடப்பதில்லை எனும் பாடத்தை நீ நன்கு படித்திருப்பாய். ஆயினும் கவலைப்படும் பழக்கத்தை உன்னால் நிறுத்த முடியாதிருக்கிறதல்லவா? ஏன் கவலையினால் தூக்கமின்றி சும்மா உட்கார்ந்திருக்கிறாய்? அல்லது ஓரிடத்தில் இருக்க முடியாமல் வீணே ஓடி ஒடித் திரிகிறாய்? உன் கவலை உன்னை நோயாளி ஆக்கி விடுகிறது. தலைமுடியைப் பிய்த்துக் கொண்டு பைத்தியமாகி விடுகிறாய். இதெல்லாம் எதற்காக? உனது கவலை உனது பிரச்சனையைத் தீர்க்க வல்லது என்றால் இப்போ கவலைப்பட உனக்கு ஒன்றும் இருக்காது. இப்படி உனக்கு வரும் ஓய்வு நேரத்தில் என்ன செய்யப் போகிறாய்? நீ எவ்வளவு கவலைப்பட்டாலும், உன்னைக் கவலைக்குள்ளாக்கிய அந்த விடயங்களை உனது கவலை ஒருபோதும் தீர்க்காது என்ற நம்பிக்கை உனக்கு வந்தால்....? உனது நெஞ்சில் சுமக்கும் கவலைகளையெல்லாம் உதறித்தள்ளி விட்டு நீ கொஞ்சம் நம்பிக்கையைக் கையில் எடுத்தால் என்ன? ஓ கடவுளே! உன்னைப்பார்! இப்படி நம்ப, போதிய அளவு நம்பிக்கை எனக்கு இருக்கிறதா இல்லையா என்று மீண்டும் கவலைப்பட நீ ஆரம்பித்து விட்டாய்! சரி போதும்! கவலைப்படுவதை நிறுத்திவிட்டு இருந்திருக்கலாம். இன்று கொஞ்சம் நம்பிக்கை வைப்பதில் உனது நேரத்தைச் செலவழிக்கிறாயா?

**என்னைப் பூட்டி வைத்துத் தேங்கி நிற்கப் பண்ணும் விலங்காகிய கவலையிலிருந்து என்னை விடுவித்திட இன்று முதல் நான் முயற்சி செய்யப்போகிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 233

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214 416.907.6897



லலிதா புரூடி

# அந்நியர்களும்...

## 20ஆம் பக்கத்தொடர்ச்சி

தமது கருத்துக்களை தடை யின்றிச் சொல்ல முடியாத நிலையில் இருந்திருக்கிறார்கள். பட்டறையின் முன்னராக, நாசாவினர், விண்வெளி வீரர்களுக்கு என்னென்ன கூற வேண்டும், எப்படிக் கூற வேண்டும் என்றெல்லாம் ஒருவகையான பயிற்சி கொடுத்திருக்கிறார் கள். இப்பட்டறை கூட ஒருவித கண் துடைப்பு போன்றே நடத்தப்பட்டிருந்தது. ஆம்ஸ்ரோங் அன்று அதிக விபரமாக கூற முடியாத நிலையில் தான் இருப்பதாகக் கூறியிருந்தாராம். ஆயினும் அந்த பறக்கும் தட்டுகள் பற்றிய தனது கருத்தை ஓரளவுக்கு தெளிவாக வெளிப்படுத்தி யிருந்தார். ஆம்ஸ்ரோங் "அவர்களது விண்கலங்கள் பருமனிலும் தொழில் நுட்பத்திலும் மிக மேன்மையானவை. அவை மிகவும் பெரியன, ஆபத்தானவையும் கூட. அச்சுறுத்துபவையாக இருந்தன. அவற்றின் பருமன், தொழில் நுட்பம் என்பவற்றினைப் பார்க்கையில் எமக்கு எச்சரிக்கை தருவதுபோல் இருந்தது. நிச்சயமாக எங்களால் சந்திரனில் ஒரு விண்வெளி நிலையத்தையோ அல்லது சந்திரனில் ஒரு நகரத்தினையோ அமைக்க முடியாது" என்றும் கூறினாரென அந்தப் பேராசிரியர் யூஎவ்லு ஆய்வாளர்களுக்குக் கூறியிருந்தார்.


TUTORING

KEEN TUTORING CENTRE

By Qualified & Experienced Tutors

- CHEMISTRY, PHYSICS, BIOLOGY
- FUNCTIONS, ADV. FUNCTIONS
- CALCULUS & VECTORS, DATA MGT
- SCIENCE, MATH, ENGLISH


உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு

✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB &AP PROGRAMME
✓ MCAT Classes
✓ EQAO GR 3 & 6

GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"

Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com





# EDUCATION

## Review Questions15 -19

➢ **BIOLOGY 11**

(i) Why are there more men than women with colour blindness?

(ii) Explain lethal dominant alleles and lethal recessive alleles ? Which is common, Explain.

➢ **PHYSICS 12**

(i) A bullet mass 0.010 kg is fired with a velocity of 330m/s into a pendulum bob of mass 0.990 kg, initially at rest. How high does the bob swing above its initial position?

(ii) A pitched 160 g baseball in a horizontal flight with a speed of 40m/s is struck by a batter. After leaving the bat, the ball travels in the opposite direction (horizontally) with the speed of 52m/s.

(i) What is the impulse acts on the ball while it is contact with the bat?


(ii) If the impact time for the base ball-bat collision is 1.3m.s, calculate the average force acts on the base ball.

Answer key
15-19 - next issue
☎ 647 341 3975
KEEN TUTORING CENTRE

## Answer Key : 15-18

**BIOLOGY 12 & IB 13 17**

(i) Sucrose (glucose 1α→2 fructose)




➢ **CHEMISTRY 11**

$Al(s) + 3\,HCl(aq) \rightarrow AlCl_3 + 3\,H_2\,(g)$
Number moles of Al = 1.35/ 27 = 0.05
(Al= 27 g/mol)
Number of moles of $H_2$ (g) = 3x0.05 = 0.15 mol
P= (755- 31.2) mmHg = 723.8mmHg
= 0.9824 kPa.

T = (273.15 + 30) = 303.15 K
PV = nRT ; V= 385 L

**PHYSICS 12**




$F_k = \mu_k . F_N$ ; $F_N = F_g\cos30°$ ; $F_s = F_g\sin30°$

5 kg object moving downwards


5g sin 30 – (0.15) 5gcos30° -T = 5a ....(1)

2 kg object moving upwards along the inclined surface

T- 2g sin 30 – (0.15) 2gcos30° = 2a ....(2)

Solve for T and a

(ii)




(a) T= mg = 900 ×9.8N

(b)(i)pulling back,

(h=15-15cos20)= 0.905m

Δ Eg =Δ mgh=mg ×0.905 J

Δ Eg = $\Delta E_k$ = ½ $mv^2$; V= 4.2m/s

(ii) T = mg + $mv^2/r$ = $9.9\times10^3$N

(c) $V_2$= 0, $V_1$ = 4.2m/s; a = 4.2/0.2 = 21m/$s^2$;

F = ma = 900 × 21N = $1.9\times10^3$N

➢ **ADVANCED FUNCTIONS 12**

$f_{(x)}= ax^3 + bx^2 + cx + d$

$a + b + c + d = -7$ ………….(1)

$8a + 4b + 2c + d = -8a + 4b - 2c + d$ ….(2)

$4a + c = 0$ ….(2)

The graph passes through origin,
d= 0 ...............(3)
The graph passes through (-1,17)
$-a + b - c + d = 17$ ……….(4)

➢ *Solve for a, b, c.*
$f_{(x)}= 4x^3 + 5x^2 - 16x$

# ஹஜ் - மனித வாழ்க்கையின் சம்பூரணம்

ஒரு கருப்பைக்கு
நன்றி சொல்லச் செல்லும்
தொப்பூள் கொடிகளின் பயணமே...
ஹஜ்!
கடலைத்தேடி
நதிகள் தான் நடந்து போகும்!
ஆனால்...
மனிதக் கடலே திரண்டு – புனித
மக்காவை துல்ஹஜ் மாதத்தில்
காணப் போகிறதே...!
அது தான் ஹஜ்!
மொழிகள் பலவானாலும்
முகங்கள் சங்கமிக்கிறதே...! – அந்த
முஹப்பத்தான திருநாள் தான்...
ஹஜ் பெருநாள்!
அங்கே
ஸலாம்கள் ததும்பி வழியும்!
சமத்துவம் கைகுலுக்கும்!
சகோதரத்துவம்...
பாசக் குடை விரிக்கும்!
சந்திக்கும் இதழ்களிலெல்லாம்...
புன்னகையே – விரியும்!
அந்தச் சுவனத்தை
நினைவு காட்டும்
மக்காவும் மதீனாவும்
உலகம் இளைப்பாறும்... நிழலோ?
வெள்ளைப் பறவைகளின்
வேடந்தாங்கலோ
கோடிக்கணக்கான
கண்கள் பார்த்தும்
கொஞ்சமும் குறையாத... அழகோ?
இஸ்லாம் அங்கிருந்து
ஏற்றுமதியானபோது,
ஓடோடிப் போய்
இதயங்கள் வாங்கிக்
கொண்டன இலவசமாகவே ...!
அதுநாள் வரை மனிதன்
தனக்காகச் சுவாசித்ததை
அன்று முதல்...
சங்கையான தீனுக்கும்
சேர்த்தே சுவாசித்தான்!
சேர்த்தே சுவாசித்தார்கள்!
வசதியானவர்களுக்கே
ஹஜ் வாய்ப்பு! – அதுவும்
வல்ல அல்லாஹ் (ஜல்)
தான் நாடியபேர்களுக்கு
மாத்திரமே, அந்த நல்ல
வாய்ப்பை அருள்கிறான்!
ஆனால்
ஏழைகளுக்கு...?
இதுபற்றி உயர்த்தாத
புருவங்கள் இல்லை!
ஒவ்வொருவெள்ளிக் கிழமை
ஜுமஆத் தொழுகை
ஏழைகளுக்கான – ஹஜ்!
இது உலக ரட்சகனான
வல்ல அல்லாஹ் (ஜல்)
ஏழை எளியவர்களுக்காகச்



சும்மாவே தந்த அருட்கொடை!
தொழும் இடம் வேறுபட்டாலும்
இதயங்கள் நோக்குவது என்னவோ...
அந்த கிப்லாவைத் தானே!
மொத்தத்தில் ஹஜ் என்பது,
வெறும் சடங்கல்ல - அது
மனித வாழ்க்கையின் சம்பூரணம்!
வாழ்ந்த வாழ்வின் அர்த்தம்!
அழகு என்றும் சொல்லலாம்!
இந்த வாய்ப்பு கிடைத்தவர்களே
பாக்கியவான்கள்!
வல்ல அல்லாஹ்வின் பாச முகவரிகள்!
நம் கண்மணி நாயகம் (ஸல்) அவர்களின்
நேசத்திற்குரிய பேரீத்தம் கனிகள்!
அல்ஹம்துலில்லாஹ்!

- கவிஞர் மு. ஹிதாயத்துல்லாஹ் -

# பத்திரகாளி சோதிட நிலையம்

# BADRAKALLI ASTROLOGY CENTER




## Pandit Sri Hanuman

Kerala (Choddankiri)

## 416.846.2798

**100% Guaranteed Result**



The Pandith can read the Past, Present & Future by Hand prediction, name, date of birth relating to love, education, marriage, money. I will help in all problems and work with god and holy spirit. Are you suffering in silence and nobody knows your pain or sorrow, but you and god know. Well you are not alone, the holy spirit will guide you tome and convince you. I will remove and destroy all bad, witchcraft, jealously and black magic permanently with superior strength & holy given power to protect to you and your family from evil things.

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் **Pandit Sri Hanuman** சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, ஜாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை இவரைச் சந்தியுங்கள்.

கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமை இலவசமாக நூல் கட்டப்படும்.

- கைரேகை
- நாம நட்சத்திரம்
- கல்வி, உத்தியோகம்
- தொழில், வியாபாரம்
- இலட்சுமி வசீகரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- நீதிமன்ற வழக்குகள்
- பெண் பிள்ளைகள் – பெற்றார் பிரச்சனைகள்
- திருமணயோகம்
- குழந்தை பாக்கியம்
- கணவன் – மனைவி ஒற்றுமையின்மை
- எதிரிகள் கண்ணூறு, நாவூறு
- சர்ப்பதோஷம்
- கர்ப்பதோஷம்
- கஷ்ட – நஷ்டங்கள்
- வாகனப் பொருத்தம்
- ஒன்றுகூடுதல்

- Business Investments
- Jealousy
- Childless Couples
- Depression
- Worries About Loved Ones
- Enemy Problems
- Money Problems
- Sexual Problems
- Love Problems
- House Protection
- Work Problems
- Money Blessing
- Family Arguments
- Drinking Problems

பிளைக் மெஜிக் அகற்றி பாதுகாப்புக் கொடுக்கப்படும்.

**5215 Finch Ave. East, Unit #257, Upstairs, Scarborough ON M1S 0C2**

**GTA Square Mall (2nd Floor) (Middlefield & Finch)**

நகைச்சுவைத் தொடர் 319

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



'வெள்ளைக் காகங்கள் ஒண்டும் சாப்பிட வருதுகளில்லை எண்டு செக்கண்ட்புளோர் செல்லம்மா சொல்ல

அது நீங்கள் வடகம் மிளகாய்ப்பொரியல் அப்பளம் பாவக்காய் பொரியல் வைச்சால் எப்பிடி வெள்ளை காகம் சாப்பிடும் என ஐ பொட் அகிலா கேட்க... கனடா காகங்களுக்கு உங்கடை கத்தரிக்காய் வெண்டிக்காய் பிடிக்காது என்று சொன்னா..

தமிழே.. உயிரே வணக்கம்

ஆட்டிலறி அன்னம்மா காரமாகப் பேச ஆரம்பித்தா ஏன் காகத்துக்கு, எங்கடை ஆக்களுக்கே உந்தச்சாப்பாடு பிடிக்காது.

தமிழ் விழா எண்டு வரச்சொல்லிப்போட்டு இங்கிலிசிலை பேச உலகண்ணையும் (செக்கண்ட் புளோர்) செல்லம்மாவும் நித்திரை கொண்டிட்டு அரைவாசியிலை எழும்பி வந்தவை... பொங்கல் விழா வருசப்பிறப்பெண்டு விழா வைச்சு 4..5.. பேருக்காக கோழிக்காலும் ஆட்டுக் குழம்பும் பரிமாறி குழப்பமா விழா வைக்கினம் என்று நீண்ட சொற்பொழிவாற்றினா

இளம் சந்ததியினருக்கு கலை கலாச்சாரம் தமிழ் பழக்கிறம் என்று சொல்லிவிட்டு சின்னப்பிள்ளைகள் தமிழ் கதைத்தாலும் இங்கிலிஸ் கதைக்கிற பல 'பெரியாக்கள்' இருக்கினம்.

ஐபொட் அகிலாண்டேஸ்வரிக்கு இலையுதிர்கால குளிரிலும் இடையிடை வேர்த்தது. தான் இடைக்கிடை ஆங்கிலம் கலந்து பேசுவதற்கும் சேர்த்துத்தான் இந்தப்பிரசங்கமோ....?




நவராத்திரி விரதம் ஆரம்பமாகப்போகிறது. பிள்ளைகளுக்கு ஏடு தொடக்க வேண்டும். இங்கு நடைபெறும் கலை நிகழ்ச்சிகளில் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் பங்கு கொள்ள வேண்டுமென ஒரு பிரிவினரும்

தமிழைப் படிச்சு என்ன செய்யப்போயினம் என ஒரு பிரிவினரும் வாக்குவாதம் செய்வதும் இடையிடையே நடந்து கொண்டுதான் இருக்கிறது.




லெக்சன் வருது. முதலிலை வோட் பண்ண போகதவையை வோட் பண்ணப் பழகவேணும் என்று சொல்லிக்கொண்டு லெக்சன் செய்திகளையும் ஒவ்வொரு கட்சித்தலைவர்களின் வாக்குவாதத்தையும் வாசித்துக்கொண்டிருந்தா ஐபொட் அகிலாண்டேஸ்வரி.

உலகண்ணை எந்தக்கட்சி வந்தா பென்சன் கூடத்தருவினம் என செக்கண்ட்புளோர் செல்லம்மா கேட்க... செல்லம்மா உன்ரை அண்ணேன்ரை பிள்ளையள் வந்து இமிகிரேசன் கேஸ் பிழைச்சுப் போச்சு டிப்போட் பண்ணப்போயினம் எண்டு கோவில் கோவிலா அரிச்சனை செய்யிறாய். இமிக்கிரேசன் விசயம், முதல் கவனம் எடுக்க வேண்டும் என்று சொல்லி முடிக்கமுன்...




ராசம்மா இருமிக் கொண்டிருந்தா. உலகர் கடைக்கண்ணால் பார்த்தார். வரப்போகும் பாயும்புலி, புலி படங்களைப்பற்றி பாத்துக்கொண்டிருந்த ரூபி. அதனை நிறுத்திவிட்டு அன்னம்மா அன்ரி ஹெல்த், ஐ மீன் மெடிக்கல் இஸ் வெரி இம்போட்டன்ற். நானும் ரூபனும் போனகிழமை கொஸ்பிற்றலுக்கு போய் நாலு மணித்தியாலம் எமெஜென்சியிலை இருந்தனாங்கள். மை கோட்! வேஸ்ற் ரைம் என எரிஞ்சு விழுந்தா ரூபி.

உலகர் எல்லாவற்றையும் கவனித்து விட்டு சொன்னார்... ஒரு வீட்டுக்குள்ளேயே இத்தனை பிரச்சினைகளை கதைக்கிறியள். ஒரு நாட்டின் பாதுகாப்பு, மக்களின் மருத்துவம், புதிய குடிவரவாளர்கள், அவர்களின் தங்குவசதி, கல்வி, மருத்துவம், வேலை வாய்ப்பு... எத்தனை பிரச்சினைகள். ஒரு நாட்டின் அரசியல் பலதையும் பார்க்கவேணும். வோட் போடுவது அவரவர் சொந்தக் கருத்தைக்கொண்டது என சொல்லிவிட்டு...



தனக்கு தபாலில் வந்த வாக்காளர் அட்டையை திருப்பித் திருப்பி பார்த்துக்கொண்டிருந்தார்....

உலக மக்கள் பலரின் தலையெழுத்தை தீர்மானிக்கும் கனேடிய நாடாளுமன்ற தேர்தல்.

காலம் பதில் சொல்லட்டும்.




ஞாபகம் இருக்கிறதா? ஒக்ரோபா 1..15..

01. நடிகர் திலகம் சிவாஜி கனேசன் பிறந்தநாள்(1927–2001)



01. உலக முதியோர் நாள்

02. மகாத்மா காந்தி பிறந்ததினம் (1869-1948)

02. அனைத்துலக வன்முறையற்ற நாள்



04. 1957இல் பண்டா செல்வா ஒப்பந்தத்திற்கு எதிராக கண்டிக்கு ஊர்வலம் நடத்தப்பட்டது.

04. சர்வதேச வன விலங்குகள் நாள்

05. அனைத்துலக ஆசிரியர் நாள்

08. இணுவில் வீரமணி ஐயர் நினைவு தினம் (கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்) (1931..2003)



09. உலக அஞ்சல் நாள்

11. சர்வதேச பெண் குழந்தைகள் தினம்

12. Thanksgiving day

13. நவராத்திரி விரதாரம்பம்



17. புரட்டாதி கடைசிச்சனி

19. கனேடிய 42 ஆவது பொதுத்தேர்தல்

22. விஜய தசமி




# ரொறொன்ரோவில் விறுவிறுப்பான கிரிக்கற் போட்டி!

கடந்த மூன்று மாதங்களாக ரொறொன்ரோவில் மாகாண ரீதியாக (Toronto District Cricket Leage) நடைபெற்ற 15 வயதுக்குட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் போட்டியில் 9 அணிகள் பங்கு பற்றின. 2015 09, 07 இல் நடைபெற்ற இறுதிப் போட்டியில் மார்க்கம் (Markham





cricket acadamy) கிரிக்கெட் அணியினருடன் கனடா கிரிக்கெட் அணி (Canadian cricket club) மோதிக்கொண்டது. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் C.C.C அணியினர் 20 ஓவர்களில் ஒரு விக்கட்டை மட்டும் இழந்து 119 ஓட்டங்களை பெற்றனர். காவியன் நரேஸ் 65 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றிருந்தார். தொடர்ந்து துடுப்பாட்டத்தை மேற்கொண்ட மார்க்கம் கிரிக்கெட் அணியினர் 80 ஓட்டங்களுக்குள் சகல விக்கட்டுக்களையும் இழந்திருந்தனர். C.C.C அணியின் வெற்றிக்காக 65 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றதுடன் பந்து வீச்சில் இரண்டு விக்கட்டுக்களையும் பெற்ற காவியன் நரேஸ் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

- விளையாட்டு செய்திகளுக்காக மட்டுவில் ஞானக்குமாரன்



யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# கடைக்கண் கடாட்சம் அருள்வாய் காமாட்சி தாயே!

அகிலாண்ட கோடி ஈன்ற அன்னை ஆதி பராசக்தி அனேக திருப்பெயர்களுடன் அகிலத்தில் அனேக இடங்களிலும் கோயில் கொண்டு எழுந்தருளியிருந்து அருள் பாலிக்கின்றாள். காஞ்சியில் காமாட்சியாகவும், காசியில் விசாலாட்சியாகவும், மதுரையில் மீனாட்சியாகவும் வீற்றிருக்கும் அம்பிகை, பல நகரங்களிலும், ஊர்களிலும், குக்கிராமங்களிலும், கோயில் கொண்டு நோயில் உழல்பவர்களையும் பேயில் கட்டுண்டவர்களையும், தீயசக்திகளால் பாதிக்கப்பட்டவர்களையும் காப்பாற்றியுள்ளாள். எனவே அன்னையின் மூர்த்தத்தில் ஒருவித சக்தி இருப்பதை உணரலாம். இதனாலேயே அம்பிகையை 'சக்தி' என அழைக்கின்றனர் போலும். 'சொல்லுக்கடங்காகவே பராசக்தி சூரத்தனங்களெல்லாம்' என்று பாரதியார் பாடியது சக்தியின் சர்வல்லமையை கருதியேயாகும். தாயன்பு தனித்துவமானது. அது தாவிப்படரும் தன்மையது. குற்றத்தையே குணமெனக்கொள்வது. எனவேதான் இறைவனைக் கூட 'தாயாகித் தாங்குகின்ற தயாபரன்' என்று கூறினர் போலும். கொண்டு வராவிட்டாலும் தாய் என்பதற்கேற்ப எதிர்பார்ப்பைக் கருதாமல் தன்பிள்ளையை இறுக அணைப்பவள் தாய். தாயைக் குடியிருந்தகோயில் எனக் கொண்டாடுவது உயர்ந்த பண்பு. உலக அன்னையாகிய அம்பிகை பெற்ற தாயிலும் மேம்பட்டவள். பேரருள் சுரப்பவள். சக்தி ஒன்றுதான் இந்த உலகினை ஆட்டிப் படைக்கின்றது. பல்வேறு வடிவபேதங்களை எடுத்து வெவ்வேறு தொழிகளை இயற்றி உயிர்களுக்கு நலம் பல புரிகின்றவள் சக்தி. அம்பிகை துணையும், தெய்வமும், பெற்ற தாயுமாக இருக்கின்றாள். அவளே முப்புரத்து அரசி என்பது அபிராமிப்பட்டர் வாக்கு. அனைத்திற்கும் அதிபதி அம்பிகையே ஆவாள்.

துணையுந் தொழுந் தெய்வமும் பெற்றதாயும் சுருதிகளில்
பணையும் கொழுந்தும் பதிகொண்டவேரும் பனிமலர்ப்பூ
கணையும் கருப்புச் சிலையுங் மென் பாசாங்கு முங் கையில்
அணையும் திரி புரசுந்தரி ஆவதறிந்தனமே!

இறைவனே தனது உடம்பில் சக்திக்கு பாதி இடம் கொடுத்து அர்த்தநாரீசுவராக விளங்குவது சக்தியின்றி சிவமுமில்லை என்பதை உணர்த்துவதாகும். அத்தகைய சக்தி ஸ்ரீகாமாட்சி எனும் நாமம் பூண்டு சிவபூமி எனப்படும் யாழ்ப்பாணத்தில் புண்ணிய பதியாம் வண்ணார் பண்ணையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருந்து காங்கேசன்துறை வதியூடாகப் போவோர் வருவோரை ஒருகணம் நிறுத்தி தன்னை வணங்கி செல்ல வகை செய்கின்றாள். விஸ்வ குலமக்களின் குலத்தெய்வமாகவும் விளங்குகின்றாள்.

அழகொளிரும் கோபுரத்துடன் அலங்காரமாக விளங்கும் ஆலயத்தில் ஆண்டு மகோற்சவம் பதினைந்து தினங்கள் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து தீர்த்த உற்சவத்துடன் முடிவடையும். அடியார் தொகை அளவுக்கு அதிகமாகக் காணப்படும். இராமநாதன் வீதி, காங்கேசன்துறை வீதி சந்திக்குமிடத்தல் இவ்வாலயம் அமைந்திருப்பதனால் பல் கலைக்கழக மாணவர்களும் இவ்வாலயத்தை தரிசிக்கும் வாய்ப்புளது. இவ்வாலயத்தின் காண்டாமணி விடியற்காலை ஐந்துமணிக்கு சுற்றுப்புறமெங்கும் டாண்டாண் என ஒலிக்கும். தொழிலுக்குச் செல்வோர் இவ்வாலய வாசலில் இறங்கி அம்பிகையை வணங்கி செல்லல் இடஅமைவு முக்கியமானதாகும். காமாட்சியின் கடைக்கண் ஈர்ப்பும் மற்றொரு காரணமாகும். எனவே நாளாந்தம் அடியார் தொகைக்கு அளவேயில்லை.

முன்னொரு காலத்திலே இவ்விடத்தில் நாவல் மரங்களும் மருத மரங்களும் அதிகமாக காணப்பட்டதாகவும் அங்கே ஒருநாள் நண்பகல் உச்சிக்கால வேளையிலே அயலில் குடியிருந்த இளம் பெண்ணொருத்தி விறகு ஒடித்து சேர்ப்பதற்காக வந்திருந்தாகவும் அந்தப் பெண் அந்த இடத்தில் மாதவிடாய் காலத்தில் சிறுநீர் கழித்து அவ்விடத்தின் புனிதத்தை அசூசைப்படுத்தியதால் அந்த இடத்து வனதேவதை கோபங்கொண்டு அவ்விளம் பெண்ணின் கொங்கைகளை திருகி விட்டதாகவும் கூறப்படுகின்றது.

இதனால் அந்த இடத்தில் வாழும் அனைவரும் பயத்துடன் இருந்தனர். இதனை அறிந்த விஸ்வகர்மகுல மாது ஒருவர் இத்தேவதையை சாந்தப்படுத்தும் நோக்கில் ஒரு பெரிய கல்லை எடுத்து மருதமரத்தின் கீழே வைத்து அதனடியில்



விளக்கேற்றி 'நாச்சியம்பாள்' என்று நாமகரணம் சூட்டி வழிபட்டு வந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதனை தொடர்ந்து அங்கு வாழ்ந்திருந்த விஸ்வகர்ம குலமக்கள் தமது இஷ்ட தெய்வமான ஸ்ரீகாமாட்சி அம்பாளையே அங்கு குடியிருத்தி வழிபட்டு வருகின்றனர். ஆலயத்தை பெருப்பித்தனர், அழகுபடுத்தினர், அருள்படுத்தினர். இதன் காரணமாகாவே குளங்கரை மருதடி ஸ்ரீகாமாட்சி அம்பாள் (நாச்சியம்பாள்) என்று பெயர் ஏற்படுவதாயிற்று.

இடமகன்ற பெரிய கோயில், கல்யாண மண்டபம், அன்னதான மடம், சித்திரதேர், அழகிய கோபுரம் விசாலமான சுற்றுப்புறச் சூழல் என்பவற்றுடன் அழகும் பொலிவும் அருள்மிகப்பெற்று ஆலயம் இன்று விளங்குகின்றது. 2006 ஆம் ஆண்டு கும்பாபிடேகத்தின் பின்னர் அன்னை இங்கு அருளாட்சி புரிகின்றாள் என்றே கூறுலாம். அம்பிகையை வணங்கினால் சக்தி, புத்தி, சித்தி, முத்தி என்பன கிடைக்கும். அம்பிகையின் பேரருள் பிரவாகத்தில் குளிப்பதற்கு அவளது அருளை வேண்டி நிற்போம்.

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணி புனைந்த
அணியே அணியும் அணிக்கு அழகே அணுகாதவர்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின் பத்மபாதம் பணிந்த பின்பே
சீராரும் செல்வி திருவண்ணைக் காமாட்சி
காராரும் பூஞ்சோலைக் கற்பகமே நேராருங்
காமாட்சி ஈஸ்வரியே காஞ்சிபுர மெய்பொருளே
காமாட்சி தந்தருள்வாய் காண்!



நா. க. சிவராமலிங்கம்

# திலீபனின் நினைவாக




நல்லை நகர் நல்லூரின் தேர் ஓடும் வீதியிலே
நாற்புறமும் தேங்கி இருந்த மக்கள் முன்னே
ஈராறு நாட்களாய் நீர் ஆகாரம் ஏதுமின்றி
உண்ணா நோன்பிருந்து உயிர் நீர்த்த
உத்தமனே தியாகி திலீபா
இன்றோடு ஆண்டுகள் இருபத்தெட்டு ஆயின போதும்
இன்னமும் எங்கள் இதயம் கண்ணீரில் வாடுது
நாவறண்டு உடல் சுருங்கி இரவு பகலாய்
கண்துஞ்சாது உரிமை வேண்ட வேண்டி இருந்து
உயிர் நீர்த்தவனே திலீபா
விடுதலையின் உணர்ச்சிகளை உள்நெஞ்சில் சுமந்து
விலைமதியா உன் உயிரைத் தமிழுக்காய்
புனிதமான உன் தியாகத்தால் ஈந்து
தியாகச் சுடராய் இன்றும் மக்கள் நெஞ்சில்
நிறைந்திருக்கும் சுடரே திலீபா!
எல்லை மீறும் பகைவனை எதிர்த்து நின்று போராடி
எம் இனத்தைக் காக்க வேண்டும் என்று உணர்ந்தாய்
கடல் தாண்டி எம்மைக் காக்க வேண்டுமென்று
நயவஞ்சகத்தோடு வந்த இந்தியாவை
வாயடைக்க வைத்த வீரனே திலீபா
அகிம்சை வழியை மதியாது அவமதித்த பாரதத்தால்
நீ விடுதலையின் விருட்சமாய் வெற்றி கண்டாய்
உரிமைக்காகப் போராடிய காந்தியைக் கூட நீ
வெற்றி கொண்டு வீர மரணமான
செம்மலே திலீபா
மீண்டும் ஒரு நினைவுச் சின்னம் எழ வேண்டும்
உனக்கு ஈழத்தில்

- கவிநாதம் பரந்தாமன் -

# உலகமயமாதலும் சினிமாவும்

தொடர்ச்சி....

5. 1999 இளவேனில், கோடை காலங்களில் கலிபோர்னியா திரைப்படம் மற்றும் தொலைக் காட்சி ஊழியர்கள் தொடர்ச்சியான போராட்டங்களில் ஈடுபட்டனர். இதற்கான காரணம் பெரும்பாலான ஹொலிவூட் படங்கள் “ஹொலிவூட்’ நோர்த்” எனக் கூறப்படும் வன்கூவர் மற்றும் ரொரன்ரோ போன்ற நகரங்களில் படமாக்கப்படுகின்றது. இதனால் கலிபோர்னியாவில் உள்ள திரைப்பட நிறுவனங்களின் ஊழியர்களுக்கு வேலைகள் இல்லாமல் போகின்றது. இதனை எதிர்த்தே போராட்டங்களை நடத்தினர். டைரக்ரேர்ஸ் கிள்ட் அமெரிக்கா, ஸ்கிரீன் அக்ரேர்ஸ் கிள்ட் (Directors Guild of America, Screen Actors Guild) ஆகிய அமைப்புக்களைச் சேர்ந்தோரே இப் போராட்டங்களில் ஈடுபட்டவர்கள். 81 வீதமான ஹொலிவூட் படங்கள் பகுதி யாகவோ அல்லது முழுமையாகவோ கனட-ாவில் படமாக்கப்பட்டன. கனடா மாத்திரமல்ல உலகின் பல நாடுகளிலும் ஹொலிவூட் படங்கள் படமாக்கப்பட்டன.




**- ரதன் -**

ஜேர்மனி நாட்டில் உள்ள இலகுவான சில சட்டதிட்டங்களும் சலுகைகளும் ஹொலிவூட் தயாரிப்பாளர்களுக்கு சாதகமாக அமைகின்றது. கலைஞர்கள், தொழிற்நுட்பவியலாளர்கள் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்பது அவசியமல்ல. இதனால் ஹொலிவூட் நிறுவனங்கள் ஜேர்மன் நிறுவனம் ஒன்றிற்கு படத்தின் உரிமைகளை விற்பதன் மூலம் ஜேர்மன் நாட்டின் வரியிலிருந்து விலக்கப்படுகின்றார்கள். இதன் பின்னர் இதே ஹொலிவூட் நிறுவனத்துடன் தயாரிப்பு விநியோகம் போன்றனவற்றை செய்வதற்கான ஒப்பந்தத்தில் ஈடுபடுவார்கள்.

இதே போன்ற நிலை கனடாவிலும் உள்ளது. கனேடிய மத்திய அரசு வெளிநாட்டு திரைப்படத் தயாரிப்பிற்கு நிதி உதவி வழங்குகின்றது. ஆனால் திரைப்படத்தின் முக்கிய கலைஞர் கனடியராகவிருக்க வேண்டும். இதனை விட பிரிட்டிஸ் கொலாம்பியா மாநில அரசும் மேலதிக வரிச் சலுகையை அளிக்கின்றது, ஒன்ராரியோ மாநிலமும் வரிச் சலுகையை அளிக்கின்றது. வடஅமெரிக்க சுதந்திர வர்த்தக வலயம் (NAFTA) ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மேலும் பல சலுகைகள் ஹொலிவூட் தயாரிப்பாளர்களுக்கு கிடைத்தன. இருந்தும் உள்ளூர் கலைஞர்களுக்கு உரிய சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை. கனேடிய திரையரங்குகளில் திரையிடப்பட்ட படங்களில் 97 வீதமானவை ஹொலிவூட் படங்களாகவே இருந்தன.

Arnold Schwarzeneggerஇன் ரேமினேட்டர் 3 படமாக்கப்பட்ட முறை வித்தியாசமானது. முதலில் ஆர்னல்ட்டின் வழக்கறிஞர்கள் தயாரித்த ஒப்பந்தத்தின் பிரகாரம் 29 மில்லியன் டொலர்கள் இவருக்கு வழங்கப்பட வேண்டும். ஆனால் “pay or play” அதாவது படம் தயாரிக்கப்படாவிடினும் ஒப்பந்தம் உறுதிப்படுத்தப்படின் 29 மில்லியன் கொடுக்கப்பட வேண்டும். தயாரிப்பாளர்கள் மரியோ ஹசருக்கும் அன்ரூ வஜ்னாவுக்கும் இத்தொகையை வழங்க விருப்பமில்லை. இதற்கு முன்பான இவரது படங்கள் என்ட் ஒப் த டே மற்றும் த சிக்ஸ் டே ஆகிய படங்கள் வர்த்தகரீதியாக தோல்விப்படங்கள். ரேமினேட்டர் தொடர் உரிமை கார்ல்கோ பிக்சர்ஸ் நிறுவனத்திடமிருந்தது. இந் நிறுவனம் வங்குரோத்து நிலையை அடைந்து விட்டது. எனினும் இந்நிறுவனத்திடமிருந்து ஜேர்மனியைச் சேர்ந்த இன்ரமீடியா பிலிம்ஸ் 14.5 மில்லியனுக்கு வாங்கியிருந்தது. மொத்தமாக 160 மில்லியன் தயாரிப்புக்கு தேவைப்பட்டது. அன்றைய நிலைமையில் இத்தொகை ஒரு படத்தயாரிப்புக்கு சற்று அதிகமாகவேயிருந்தது. வோர்னர் பிறதர்ஸ் 51.6 மில்லியனை வடஅமெரிக்க விற்பனை உரிமைக்காகவும், ரோகோ-ரோவா யப்பானிய உரிமைக்காக 20 மில்லியனையும், சோனி பிக்சர்ஸ் யப்பான்-வட அமெரிக்கா தவிர்ந்த உலக விற்பனைக்காக 77.4 மில்லியனையும் வழங்கின. இவற்றைவிட ஜேர்மனி நிறுவனமும் தயாரிப்பில் இணைந்தமையால் வரித் தீர்வும் தயாரிப்புக்கு உதவியது. ஒரு படத்துக்கான உலகம் தழுவிய மூலதனம் இவ்வாறே பெறப்படுகின்றது.

மூலதனம் ஒரு முக்கியமான விடயம். மறுபுறம் செலவைக் குறைக்க வறிய நாடுகளை பயன்படுத்தல் மற்றொரு முறை. ஸ்ரீபன் ஸ்பில்பேர்க்கின் Schindler’s List (1993) படத்தின் பகுதிகள் போலாந்தில் படமாக்கப்பட்டபோது ஒளிப்பதிவாளர் Janusz Kaminski, கலை இயக்குனர் Allan Starski, கொஸ்ரியூம் Ewa Braun ஆகிய போலாந்து நாட்டு கலைஞர்கள் படத்தில் பங்காற்றினர். ஹொலிவூட் கலைஞர்களை விட இவர்களுக்கு குறைந்த வேதனமே வழங்கப்பட்டது. சிலம்டோக் மில்லியனர் இந்தியாவில் படமாக்கப்பட்டபோது இதில் நடித்த சிறுவர்களுக்கு சுமார் 750-2500 டொலர்வரையே கொடுக்கப்பட்டது. இதனால் இப்படத்தை 15 மில்லியன் டொலர்களுக்குள் எடுக்க முடிந்தது. இது இப்படம் பெற்ற வருமானத்தின் 13 வீதமாகும். இதேபோன்று கைற் ரன்னர் படத்தில் நடித்த ஆப்கான் சிறுவர்களுக்கு மிகக் குறைந்த வேதனமே வழங்கப்பட்டது.

6. இவை ஒரு புறமிருக்க இன்று இந்தியா உட்பட உலக நாடுகள் அனைத்திலும் திரை அரங்கினுள் பல்வேறு அங்காடிகள் அமைக்கப்பட்டுள்ளன. அண்மையில் உலகின் பெரும்பாலான திரையரங்குகள் தங்களது வருமானத்தின் பெரும் பகுதியை பொப்கோர்ன் விற்பனை மூலமே பெறுகின்றார்கள். பொப்கோர்ன் போன்ற சிற்றுண்டிகள் 80 வீதமான லாபத்தைப் பெறுகின்றன. கூடுதலாக பொப்கோர்ன் போன்றவற்றை




சிறுவர்கள், மற்றும் ரீன் பருவத்தினரே அதிகம் வாங்குவார்கள். படங்களும்

| ***Movie*** | ***Product*** |
|---|---|
| Hardwired (2009) | Pepsi |
| Risky Business | Ray-Ban Sunglasses |
| Back to the Future | Pepsi |
| You've got mail (1998) | AOL. Apple, IBM, Statbucks |
| Ausitn Powers | Pepsi, Starbucks |
| Cast Away (2000) | Fed Ex |
| Men in Black II (2002) | Ray-Ban Sunglasses, Benz Car, Burger King |
| The World is not enough(1999) | BMW 28 |
| Harold and kumar escape from guantanamo bay (2008) | Nokia Smart Phone |
| Iron Man 2 (2010) | Burger King - Cheese Burger |
| Evolution (2001) | Head and Shoulders Shampoo |
| The Out Last | |

ரொரண்ரோவில் உள்ள மார்க்கம் வி.ஐ.பி அரங்கிற்கு கலிபோர்னியாவை பயப்படுத்தும் பூமியதிர்ச்சியைப்பற்றிய சான் அன்ரியா என்ற திரைப்படத்திற்கு சென்றிருந்தபோது அங்கு அரங்கினுள் மதுபானங்கள் வழங்கப்பட்டன. இவ் அரங்கிற்குள் 19 வயதுக்கு மேற்பட்டோரே செல்ல முடியும். உங்கள் இருக்கைகள் சொகுசு மிகுந்தவையாக இருக்கும். 100-125 பேர்வரை இருக்கக் கூடிய அரங்குகளாகவே இருக்கும். உங்களது தேவைகளையறிந்து உணவு, குளிர்பானம், தேநீர், மதுபானம் போன்றனவற்றை வழங்க உபசாரிகள் காத்திருப்பார்கள். படம் தொடங்குவதற்கு முன்பாகவே இவை அனைத்தும் நடைபெறும். வழக்கமான நுழைவுக்கட்டணத்தை விட இவை இரு மடங்கு அதிகம். இங்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களின் விலையும் அதிகம். இவர்களுக்குரியதாக இருக்கவேண்டும். செக்ஸ் காட்சிகள் கூடிய படங்கள் தயாரிப்பு எண்ணிக்கை குறைவிற்கு இதுவும் ஒரு காரணம். உலகின் பல நாடுகளில் செக்ஸ் காட்சிகள் நிறைந்த படங்களுக்கான கட்டுப்பாடு அதிகமாகவிருப்பதனால் உலக விநியோகம் பாதிக்கப்படும். வோல்மாட் போன்ற நிறுவனங்கள் தங்களது கடைகளில் வயதுவந்தோர்க்கு மட்டுமான படங்களை அதிகளவில் விற்பனை செய்ய விரும்புவதில்லை. இவர்களுக்கு டி.வி.டி விற்பனை அதிகவீதமான லாபம் தரும் பொருட்கள். இங்கு அதிகம் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுடன் செல்வார்கள். அவர்களது வருகையை அதிகரிக்க இவ்வாறான

தொடர்ச்சி 41ஆம் பக்கம்






# உலகமயமாதலும்...


கட்டுப்பாடுகளும் அவசியம் என்பதனை வோல்மார்ட் போன்ற நிறுவனங்கள் உணர்ந்துள்ளார்கள். 2007இல் வோல்மார்ட் சுமார் 4 பில்லியன் டொலர்களை வீடியோக் களுக்காக அமெரிக்காவின் மிகப் பெரிய ஆறு திரைப்பட தயாரிப்பு நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது. இதே ஆண்டு இந்த ஆறு நிறுவனங்களும் 17.9 பில்லியனை வீடியோ விற்பனை மூலம் பெற்றுள்ளன.

இன்று திரையரங்கிற்கு செல்வோர் எண்ணிக்கை உலகளவில் குறைந்துள்ளது. வீட்டில் தொலைக்காட்சியில் படத்தைப் பார்க்கும் பொழுது செக்ஸ் காட்சிகள் அதிகம் உள்ள படத்தை பெற்றோர் பிள்ளைகள் முன் பார்க்கத் தயங்குவார்கள். திரைப்படத் தயாரிப்பில் கோப்பிரேட் நிறுவனங்கள் ஈடுபடுவதனால் பல கெடுபிடிகளும் வழமைக்கு மாறான சில சம்பவங்களும் நிகழ்கின்றன.

முன்னர் இந்தியாவில் தயாரிக்கப்படும் பொருட்கள் அமெரிக்காவிலோ ஐரோப்பாவிலோ இந்தியர்களின் கடைகளிலேயே பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் இன்று இந்தியா மேற்குக்குரிய பொருட்களையே தயாரிக்கின்றது. மேற்கின் பல நிறுவனங்கள் இந்தியாவில் காலூன்றியுள்ளன. இதுவும் ஒரு வகையில் ஹொலிவூட்டிற்கு சாதகமாக அமைந்துள்ளது. பின்வரும் படங்களில் காட்டப்படும் பொருட்கள் இந்திய மற்றும் உலகெங்கும் பெற்றுக்கொள்ளக் கூடியவை. இப்பொருட்களை தயாரிக்கும் நிறுவனங்கள் தங்கள் பொருட்களை திரைப்படங்களில் விளம்பரப்படுத்துவதற்கு பணத்தை அள்ளி இறைக்கின்றன.

இவற்றில் ஹெட் அன்ட் சோல்டர் சம்பூ ஏலியனை அழிக்க ஓர் ஆயுதமாக இவலூாசன் படத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளது. இவற்றை விட பொலிவூட் படங்களான மை நேம் இஸ் கான் படத்தில் ஏசர் பொருட்கள் விளம்பரப்படுத்தப் பட்டுள்ளன. இவை சில உதாரணங்கள். பெரும் பட்டியலே தயாரிக்கலாம்.

அழகுராணிப் போட்டிகள் இந்தியாவில் நடத்தப்பட்டமையின் பின்னணி பல்வேறு உலக அழகுசாதனப் பொருட்களையும் உடைகளையும் உலகின் மிகப் பெரிய சந்தைகளில் ஒன்றான இந்தியாவில் விற்பனை செய்வதே பிரதான காரணம். இதற்கு இந்திய நடிகர் நடிகைகளையும் பயன்படுத்திக் கொண்டார்கள். மேற்கில் பொருளின் மேல் ஒட்டப்பட்டிருக்கும்




விபரங்கள் உண்மையானவையாகவிருக்க வேண்டும். இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளில் சட்டமும், சமூகமும் இவற்றை கண்டுகொள்வதில்லை. ஒரு வகையில் பரீட்சார்த்த மைதானமாகவும் மூன்றாம் உலக நாடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

## 7. உலகமயமாதலை விளங்கிக் கொள்ள சில உதாரணப் படங்கள்

1. The Cup (1999) திபெத்திய புத்த பிக்குகளை மையமாகக் கொண்டது இப்படம். 14 வயது பிக்குவிற்கு பிரேசிலிய ரொனா-ல்டோ மீது அளவு கடந்த விருப்பம். ரொனா-ல்டோவின் ஒரு தீவிர ரசிகன். உலகக் கோப்பை போட்டிகளின் போது தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை தனது ஆச்சிரமத்துக்கு கொண்டுவர விரும்புகின்றான்.

2. த வே ஹோம் (2002) சியோல் நகரத்தில் பிறந்து வளர்ந்த ஏழு வயது சிறுவன் தனது பாட்டியுடன் ஒரு கிராமத்தில் வாழவேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. அங்கு வீடியோ கேமிற்கு பற்றரிகள் இல்லை. கென்டக்கி பிறைட் சிக்கன் தேவை என்று பாட்டியை நச்சரிக்கின்றான்.

3. இதேபோன்று 2004இல் வெளிவந்த சைட்வேஸ் வைன் சுற்றுலாப் பயணத்தை ஊக்கப்படுத்துகின்றது

4. Nalini by Day, Nancy by Night (2005 -27m) ரெலி சந்தைப்படுத்தலை வெளிப்படுத்தும் படம். பெயரிலேயே இப்படம் என்ன விடயத்தை வெளிப்படுத்தப் போகின்றது என்பது தெளிவாகின்றது.

5. 1961இல் கென்ற் மக்கன்சியின் இயக்கத்தில் வெளிவந்த The Exiles படம் ஐரோப்பியர் எவ்வாறு முதன்மை குடியினரை கட்டுப்படுத்தினார்கள் என்பதை வெளிப்படுத்தியுள்ளது. இப்படத்தை அமெரிக்காவில் வெளியிட முடியவில்லை. எந்த விநியோகிஸ்தரும் முன்வரவில்லை. பின்னர் 2008இல் பேர்லின் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது.

## 8. Le Capital

மூலதனம் என்றவுடன் நினைவுக்கு வருவது மார்க்சின் மூலதனம் நூல். இன்றைய மூலதனம் பல்வேறு நிலைகளில் உருமாறி பூதாகாரமாகி விட்டது. பெரும் நிறுவனங்களின் உள்ளரங்கில் நடைபெறும் மோசடிகள் சாதாரண மக்களுக்குத் தெரிவதில்லை. “நான் உங்களது ரோபின் கூட். வறியவர்களிடமிருந்து பறித்து செல்வந்தர்களிடம் கொடுப்பேன்”என்ற வாக்குறுதியுடன் பிரான்சின் முக்கிய வங்கியொன்றின் தலை-வராக பொறுப்பேற்கின்றார் டிற்மார். இந்த இளம் வயது வங்கித் தலைவரை தங்கள் சொற்படி நடக்கத் தூண்டுகின்றார்கள் அமெரிக்காவின் மயாமி நகரை மையமாகக் கொண்டு இயங்கும் ஒரு ஹெட்ஜ் பன்ட் நிறுவன தலைமை முகவர்கள். இவர்கள் இந்த பிரான்ஸ் வங்கியில் அதிகளவு பங்குகளை வைத்திருக்கின்றார்கள். அது காணாது. ஆசை அதிகம். மேலும் பங்குகளை அதிகரிக்க வேண்டும். என்ன செய்வது? யப்பானில் நட்டத்தில் இயங்கும் வங்கியை வாங்கச் சொல்லி டிற்மாரை தூண்டுகின்றார்கள். நிர்பந்திக்கின்றார்கள். மறுபுறம் தங்களது முதலீட்டுக்கான வெகுமதியை அதிகம் பெற விரும்புகின்றார்கள். இதற்காக பிரான்ஸ் வங்கியின் தொழிலாளிகளை ஆயிரக்கணக்கில் வேலை நீக்கம் செய்யுமாறு வற்புறுத்துகின்றார்கள். டிற்மாரை தங்கள் பக்கம் இழுக்க ஒரு அழகான மொடலை பயன்படுத்துகின்றார்கள். டிற்மாருக்கு அழகிமேல் ஈர்ப்பு ஏற்பட்டு விட்டது என்று தெரிந்தவுடன் அவரை வைத்தே காயை வெகுகச்சிதமாக நகர்த்துகின்றார்கள்.

பெரும் நிறுவனங்களின் உள்ளரங்கில் நடக்கும் மோசடிகளை இடதுசாரி பிரெஞ்ச் இயக்குனர் Costa-Gavras சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார். இது ஒரு நிறுவனத்துக்கு மட்டும் பொருந்தாது. இன்று நாடுகளையும் அதன் தலைவர்களையும் ஒரு குழுவே இயக்கிக் கொண்டிருக்கின்றது. இவர்கள் சாதாரண மக்களின் நலன்களை கணக்கிலெடுப்பதேயில்லை.










# குதிக்கால்...

**22ஆம் பக்கத்தொடர்ச்சி**

விடுத்து விசேட நிபுணரிடம் செல்வதே முக்கியம். எமது உடலின் எல்லா உறுப்புகளையும் சேர்த்து சுமக்கும் எமது பாதத்தின் குதியை மிகவும் கவனமாக பார்க்க வேண்டியுள்ளது.

மருத்துவ சிகிச்சைகளை ஒரு ஆபத்தானது. பழு தூக்குதலை தவிர்க்க வேண்டும்.

குதிக்காலுக்கான பல்வேறு பயிற்சிகள் உள. நோயினை குறைப்பதற்கு மருத்துவ நிலையங்களில் cutout heel pain, orthotic worn in the shoe பல்வேறு அணிகளும் வெளிச் சந்தையில் விற்பனையாகின்றன. எமது




புறத்திலும் யோகா போன்ற பயிற்சிகளை மறுபுறத்திலும் செய்வதுடன் பாதத்தினை பாதுகாக்கவல்ல பாத அணிகளையும் அணிதல் முக்கியம். எடையை குறைப்பது, காயம் ஏற்படுவதனை தவிர்ப்பது மிக முக்கியம். வெறுங்காலுடன் வெளியே செல்வதும் உடலே அதிசயமாக இருக்கும்போது எமது குதிக்குள் உள்ள எலும்புகள், தசை நாண்கள், திரவம், திசுக்கள், இழையங்கள் எவ்வளவு அற்புதமாக தொடுக்கப்பட்டுள்ளன என்பதனை எண்ணும்போது வியப்பே மேலிடுகிறது. குதிக்காலுக்குள் இவ்வளவு நோய்களா என மலைப்பு ஏற்படுகிறது.

# என்ன குறை இந்த நாட்டில்



அன்னை கனடாவை அனைவருமே அறிந்ததனால்
இன்னலுற்றோர் இங்குவந்தே ஏற்ற முற்றார்
பன்னாட்டு மொழிகளையும் பக்குவமாய்ப் பேசுகின்றார்
இன்னாட்டில் வாழ்வதற்கு என்னதவம் செய்தோமே.

சுற்றுலாத் தலங்கள் சுத்தமான உணவகங்கள்
சுகந்தரும் நற்காற்று தண்ணீர்
கற்பதற் கேற்றநற் கல்விக் கூடங்கள்
கவினார் மாட மாளிகைகள்
உற்றார் உறவினர் ஒன்று கூடல்
ஓய்வின்றி உழைக்கும் உழைப்பாளர்
வற்றாது ஓடுகின்ற வளமார் நயகரா
வாவாவென் றழைக்கின்ற வாய்ப்பே.

உல்லாச வாழ்வுக்கு உயர்ந்த நாடு
உயர்வு தாழ்வற்ற மக்கள்
எல்லோரும் ஓர்குலம் என்றோது வார்கள்
இயற்கை யோடமைந்த நாடு
நல்லாட்சி நாவன்மை யுள்ளோரும் நன்றாக
நற்பணி யாற்று திறனும்
எல்லாமே சேர்ந்து இயல்பா யமைந்த
ஏற்றமுறு நாடெங்கள் கனடா.

மஞ்சுலாவு கோபுரமும் மரக்கலத் துறைமுகமும்
மாடி வீடுகள் மட்டு மல்ல
விஞ்சுபுகழ் வீதிகள் விலையுயர் வாகனங்கள்
வியப்பளிக்கும் வழிகாட்டல் விற்பனவு நிலையங்கள்
தஞ்சங் கோருவோர்க்குத் தக்கதோர் வாழ்விடமே
தாமத மில்லாத் தக்க பாதுகாப்பு
அஞ்சாது வாழ்வளிக்கும் அன்னை கனடா
அகிலத்தில் முதல்மாது ஆய்வின் கருத்திதுவே.

- முருகேசு மயில்வாகனன் -


JRS AUTO TECH
OPEN 24 HOURS
7 DAYS A WEEK
MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS
VISA
Free Inspection & Diagnostics
Complete Car & Truck Care
Licensed Mechanics
Insurance Work Done
All Fluid Top Ups & A/C Repairs
Fuel Injection Service & Muffler/ Turbos
Courtesy Drop Off & Pick Up Available
Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash
SENIOR'S SPECIAL
Free Shuttle Available for Seniors
TIRE SPECIALS
NEW TIRES FROM $75
USED TIRES FROM $35
FREE OIL CHANGE WITH RUST PROOFING
$99 Car
$120 SUV
BRAKE JOB
STARTING FROM
$159
WATER PUMP TIMING BELT & LABOR
STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans
Castrol
REGULAR OIL CHANGE
$29.95
CASTROL OIL CHANGE
$39.95
SYNTHETIC OIL CHANGE
$49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR
$149.95
TRANSMISSION FLUSH
Starting From…
Imports
$74.95
Radiator Flush
$79.95
Domestic
$149.95
ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS
CHECK
LEXUS
FREE DTC Code Run and Inspection
2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)
CALL SUBAS DIRECT → 416-206-9489
Tel: 416-628-4399
Email: jrsautotech@hotmail.ca
Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech
*Prices subject to change. Valid with flyer.
Cannot be combined with any other offers.






















**Free Real Estate Class - Call: 416.321.6969**




விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு ***www.vlambaram.com***
***www.tamilvanakkam.com***

